24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 கதிர் 84 மாசி 07ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 19 பெப்ரவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2050

போர்க்குற்றம் இழைத்தமையே மகிந்த தூரத்தப்படக் காரணம்

இப்போது நல்லவனுக்கு நடிக்கவேண்டாம் என்று ரணில் விக்கிரமசிங்க பதிலடி

கொழும்பு, பெப்ரவரி 19

2004ஆம் ஆண்டுமுதல் 2014ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி வரை ஆட்சியில் இருந்த மகிந்த ராஜபக்ச நாட்டை கொலைக் கலாசாரத்துக்குள் வைத்திருந்தார். அவரும் அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்சவும் இந்தக் கொலைகளுக்குத் தலைமை தங்கினார்கள். இவர்கள்தான் போர்க்காலத்தின் போது போர் விதிகளை மீறி போர்க்குற்றங்களும் இடம்பெற வழிவகுத்தார்கள். குற்றமிழைத்தவர்களை விட அதற்கு உத்தரவிட்டவர்களும் தலைமை தாங்கியவர்களும்தான் மாபெரும் குற்றவாளிகள். அப்படிப்பட்டவர்கள் இப்போது நல்ல பெயர் எடுக்க நடிக்கின்றார்கள். >> 20

தீ விபத்தில் காயமடைந்த சிறுமி நேற்று உயிரிழப்பு

வவுனியா, பெப்.19

வவுனியா, மடுகந்தை மயிலங்குளத்தில்கடந்த சனிக்கிழமை காஸ் அடுப்பு வெடித்துப் படு காயமடைந்த 15 வயதுச் சிறுமி சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். >> 20

மின் தாக்கி ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், பெப்.19

ஆலயத்தில் திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒருவர் மின்தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை மானிப்பாயில் உள்ள ஆலயம் ஒன்றில் நடந்துள்ளது. ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவசுந்தரம் சிவலோகம் (வயது-33) என்பவரே உயிரிழந்துள்ளார். >> 20

விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, பெப்.19

முல்லைத்தீவு கொக்குளாய் வீதியில் செம்மலையில் நேற்றுமுன்தினம் நடந்த விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் சிகிச்சைபயனின்றி உயிரிழந்துள்ளார். கா.பாஸ்கரன் (வயது-50) என்பவரே உயிரிழந்துள்ளார். >> 20

தொடருந்துடன் மோதிய இளைஞன் உயிரிழந்தார்

சாவகச்சேரி, பெப்.19

கொடிகாமத்தில் தொடருந்துடன் மோதிப் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.45 மணிக்கு கொடிகாமம் தொடருந்து நிலையத்தில் இருந்து புறப் >> 21

தனியார் பேருந்து விபத்து 4 பேர் சாவு; 19 பேர் காயம்

வவுனியா, பெப்.19

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த 4 பேர் உயிரிழந்தனர். 19 பேர் காயங்களுக்குள்ளாகினர்.

மாரவில மஹவெவ சந்தியில் இந்த விபத்து நடந்துள்ளது. கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத் >> 21

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக மனு

கொழும்பு, பெப்.19

தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் நேற்று மனு ஒன்று தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்த லைத் தாமதப் >> 21

இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது

யாழ்ப்பாணம், பெப்.19

இந்தியக் கடல் எல்லைக் குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் 25 பேர் இந்தியக் கடலோரக் காவல் படையால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள் >> 21

25 அன்று கதவடைப்பு செய்து போராட்டத்தைப் பலப்படுத்துக

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 19

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி எதிர்வரும் 25 ஆம் திகதி வடக்கு மாகாணம் முழுவதும் கதவடைப்புப் போராட்டத்தை மேற்கொண்டு, அன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் >> 21

சிகரெட் விற்பனைக்குத் தடை ஆராய்கிறது வவு. தெற்கு சபை

வவுனியா, பெப்.19

தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சிகரெட் விற்பனையைத் தடை செய்வது தொடர்பாகவும், பொலித் தீன் பாவனையைத் தடை செய்வது தொடர்பாகவும் வவுனியா தெற்குப் பிரதேச சபை ஆலோசித்து வருகின்றது. >> 21

கூட்டமைப்பினர் தேவைக்கு பெரமுன ஒத்துழைக்காதாம்

அதன் தலைவர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, பெப்.19

போருக்குப் பின்னர் நாட்டில் ஏற்படக் கூடிய நல்லிணக்கத்தைத் தமிழ்க் கூட்டமைப்பினரதும், புலம்பெயர் அமைப்புக்களினதும் தேவைக்கு ஏற்ப முன்னெடுப்பதை நாம் ஏற்கமாட்டோம். >> 21

புலிகளின் ஆயுதங்களைத் தேடிய படைகளுக்கு கிட்டியது ஏமாற்றம்

யாழ்ப்பாணம், பெப்.19

புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்து வடமராட்சி கிழக்கில் நேற்றுப் பொலிஸாரும், சிறப்பு அதிரடிப் படையினரும் அகழ்வில் ஈடுபட்டனர். காலை 9.30 மணி முதல் முற்பகல் 11.30 மணிவரை அகழ்வுகள் நடைபெற்றபோதும் ஆயுதங்கள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை. தமக்குக் கிடைத்த >> 20

திருட்டு வழக்கில் கைதானவர் சித்திரவதை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.19

திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவர் தன்னைப் பொலிஸார் சித்திரவதைக்கு உள்ளாக்கினார் என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தார். >> 17

சிறுமிக்கு வன்கொடுமை: இளைஞர் ஒருவர் மறியலில்

யாழ்ப்பாணம், பெப்.19

சிறுமி ஒருவரை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம்.

சிறுமியானதனதுமகளைக் கோப்பாயில் >> 17

சிறுமிக்கு பாலியல் தொல்லை ஆசிரியருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், பெப்.19

பாடசாலை மாணவிக்கு பாலியல்ரீதியில்தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட ஆசிரியரை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில்வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது. >> 21

முகப்புத்தகத்தில் பொலிஸாரை அவமதித்தாரென ஒருவர் கைது

கொழும்பு, பெப். 19

முகப்புத்தகம் ஊடாக பொலிஸாரை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் போலி பேஸ்புக் கணக்கைப் பயன்படுத்தி, தேவையற்ற சொற் பிரயோகங்களால் பொலிஸாரை அவமதிக்கும் வகையில் பதிவுகளை இட்டுள்ளார். வெய்ஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடையவரே நேற்றுமுன்தினம் கைதானார்.

நடமாடும் காவல் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் வீதியில் சென்ற குறித்த இளைஞரை ஏதோ ஒரு குற்றச் செயலுக்காகக் கைதுசெய்திருந்தார் என்றும் பின்னர் அவரது அடையாளங்களை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர்· அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில், இளைஞன் பேஸ்புக் ஊடாக பொலிஸாரை அவமதிக்கும் பதிவுகளை பதிவிட்டார் என்று பிட்டிகல பொலிஸார் குற்றஞ்சாட்டிக் கைதுசெய்துள்ளனர். (கு)

மண்டலாபிசேக பூர்த்தி நிகழ்வு

நெடுந்தீவு, பெப்.19

நெடுந்தீவு, மேற்கு உயரப்புலம் சிறிபூரணி புஸ்கலா சமேத ஜயனார் திருக்கோவில் அஸ்டோத்திரா மண்டலாபிசேகப் பூர்த்தி சங்காபிசேக விழா இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ளது என்று ஆவய பரிபாலனசபையினர் தெரிவித்தனர்.

சிறிபூரணி புஸ்கலா சமேத ஜயனார் பெருமானுக்கும், ஏனைய பரிவாத மூர்திகளுக்கும் 108 சங்காபிசேகம் இடம்பெறவுள்ளது. ஆகவே அடியவர்கள் ஆசார சீலர்களாக ஆலயத்துக்கு வருகை தந்து, திருத்தொண்டு புரிந்து பூசைகளுக்குத் தேவையான பால், தயிர், பூக்கள், இளநீர், மாலைகள் போன்ற வற்றை வழங்கி பெருமானின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விழா அதிகாலை 5 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகும். கிரிகைகளைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு சங்காபிசேகம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-21)

பலாலியிலிருந்து ஐரோப்பா வரை வானூர்திச் சேவை நடத்த திட்டம்

கொழும்பு, பெப். 19

ஏ320, ஏ321 வானூர்திகள் தரையிறங்கக் கூடிய வகையில், பலாலி வானூர்தி நிலையத்தின் ஓடுபாதை 3ஆயிரத்து 500 மீற்றராக விரிவாக்கப்படும். இதன்மூலம், இந்தியா, ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான், மத்திய கிழக்கு மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட 7 ஆயிரத்து 200 கி.மீ சுற்றுவட்டத்துக்குள் இருக்கும் நாடுகளுக்கான நேரடி வானூர்திச் சேவைகளை இங்கிருந்த நடத்த முடியும்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பலாலியில் நடந்த கூட்டத்தில் இதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓடுபாதை அபிவிருத்தியை முன்னுரிமைகொடுத்து முதற்கட்டமாக மேற்கொள்ளுமாறு தலைமை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அருகில் உள்ள கட்டடங்களை தற்காலிகமாக புறப்படுகை மற்றும் வருகை முனையங்களாகப் பயன்படுத்தலாம் என்றும், அவ்வாறான நடைமுறை பல நாடுகளில் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நிரந்தர முனைய கட்டடங்களை இரண்டாவது கட்ட அபிவிருத்திப் பணியின் போது கட்ட முடியும் என்றும், முதலில் வானூர்தி நிலையம் கணிசமான வானூர்திப் போக்குவரத்தை ஈர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வானூர்தி நிலையத்துக்கான மின்சாரம், குடிநீர் வசதிகள், வீதி, எரிபொருள் களஞ்சியப்படுத்தல் வசதிகள் தொடர்பாகவும் நீண்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம், வடக்கிலுள்ள மக்களுக்கு அதிகளவு நன்மைகள் கிடைக்கும் என்றும், வணிக மற்றும் தொழில் வாய்ப்புகள் கிட்டும் என்றும், சுற்றுலாத்துறை அபிவிருத்தி அடையும் என்றும் சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

(ஒ.5)

கொடியேற்ற திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 19

திருநெல்வேலி வடக்கு கலாசாலை வீதி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 நாள்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

அம்பாறை உடும்பன்குளம் படுகொலை தினம் இன்று

கொழும்பு, பெப். 19

எண்பதுகளில் நடைபெற்ற இன ரீதியான படுகொலைகளில் நூற்றுக்கணக்கான உயிர்களைக் காவு கொண்ட படுகொலை தான் உடும்பன்குளம் படுகொலை. அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசம் உடும்பன்குளம். திருக்கோவில் பகுதியிலிருந்து 20 மைல் தூரத்தில் இது உள்ளது. இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் வயல், நன்னீர் மீன்பிடி, விவசாயம். 1986 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரங்களில் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் இனந்தெரியாத ஆயுத தாரிகள் 1986ஆம் ஆண்டு இதே நாளில் நூற்றுக்கணக்கான பொதுமக்களைத் துப்பாக்கிச் சூட்டிலும் வாளால் வெட்டியும் கொன்றனர். அதில் 104 பேர் கொல்லப்பட்டனர்.

(கு)

கனரக வாகனம் மோதி தெருமூடி மடம் சேதம்

பருத்தித்துறை, பெப்.19

பருத்தித்துறை, தும்பளை வீதியில் தொல்பொருள் திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ள தெருமூடி மடத்தின் கூரை கனரக வாகனம் மோதியதில் சேதமடைந்தது. அதன் கோப்பிசப் பகுதியே சேதமடைந்துள்ளது.

சீமெந்து ஏற்றிச் சென்ற வாகனம் மோதியே மடம் சேதமடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை துறை நகர சபைத் தலைவர் யோ. இருதராஜா மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த விடயத்தை தொல் பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிறி ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். அவர்கள் தெருமூடி மடத்தை நேரில் பார்வையிட்டுள்ளனர்.

தற்போது தெருமூடி மடத்தின் ஊடாகப் பயணிக்கும்வாகனங்கள், பொதுமக்கள் ஓரமாக செல்லுமாறு சமிஞ்சை இடப்பட்டுள்ளது. திருத்த வேலைகள் விரைவில் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-173)

நுளம்புப் பரிசோதகர் மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழப்பு

கொழும்பு, பெப். 19

மூன்றாம் மாடியில் டெங்கு நுளம்புப் பரிசோதனையில் ஈடுபட்டிருந்த நுளம்பு பரிசோதனை அதிகாரி கீழேவீழ்ந்து, படுகாயமடைந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் பதுளையில் நேற்று இடம்பெற்றது. பதுளை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணியகத்தில், பணிபுரியும் கப்பிலசெனவிரத்ன என்பவரே உயிரிழந்தார். பொலிஸார் விசாரணை நடத்தினர். (கு)

குறைந்த விலையில் கொள்வனவு மன்னார் விவசாயிகள் பரிதவிப்பு

நெல் சந்தைப்படுத்தும் சபையினர் கொள்வனவு செய்யாததால் இந்த நிலை



மன்னார், பெப்.19

அறிவித்ததைப் போன்று நெல் சந்தைப்படுத்தும் அதிகார சபை நெல்லைக் கொள்வனவு செய்யாததால் குறைந்த விலையில் தனியாரிடம் நெல்லை விற்க வேண்டிய நிலையில் மன்னார் மாவட்ட விவசாயிகள் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காலபோக நெற் செய்கையின் அறுவடைகள் முடியும் நிலையில் உள்ளன. வடக்கு மாகாணத்தில் நெல் சந்தைப் படுத்தும் சபை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுடைய நெல்களைக் கொள்வனவு செய்வதாக அந்தந்த மாவட்டச் செயலகங்கள் தெரிவித்தன. நெல் சந்தைப்படுத்தும் சபையானது வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகளிடம் இருந்து இந்த பெரும்போகத்தில் 40 ஆயிரத்து 800 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளது எனறும், ஒரு கிலோ சம்பா 41 ரூபாவுக்கும், ஒரு கிலோ நாடு 38 ரூபாவுக்கும் நெல் கொள்ளவனவு செய்யப்படவுள்ளன என்றும் அதற்காக மாவட்டச் செயலகங்களுக்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலில் நெல் கொள்வனவுகள் இடம்பெற்றன. தொடர்ந்தும் ஏனைய மாவட்டங்களில் கொள்வனவு இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் இது வரை எந்த ஒரு விவசாயியிடத்தில் இருந்தும் நெல் கொள்வனவு செய்யப்படவில்லை. மன்னார் மாவட்டத்தில் விவசாய பெருநிலப் பரப்பாக உள்ள நானாட்டான், மாந்தை, முசலி, மடு போன்ற பகுதிகளில் பெரும்போக நெற்செய்கையின் முதல் கட்ட அறுவடைகள் பரவலாக இடம் பெற்று வருகின்றன. நெல்சந்தைப்படுத்தும் அதிகார சபை நெல் கொள்வனவில் இன்னும் ஈடுபடாத காரணத்தால் தனியார் வியாபாரிகள் சிவப்பு வெள்ளை சம்பா போன்ற வற்றை. 2ஆயிரத்து 100 அல்லது 2ஆயிரத்து 200 ரூபாவுக்கும், கீரி சம்பா 3 ஆயிரத்து 600 ரூபாய்க்கும் கொள்வனவு செய்துள்ளனர். தற்போது அவற்றையும் கொள்வனவு செய்வதை நிறுத்தி விட்டார்கள். இதனால் அறுவடைசெய்த நெல் மூடைகளை வரம்புகளின் மீது அடுக்கி வைத்து காவல்காக்கின்றனர் மன்னார் மாவட்ட விவசாயிகள்.

"விவசாயத்துக்காக பட்ட கடன்கள் அதற்கான வட்டிகள் ஒரு புறம் குடும்பச் செலவு மறுபுறம் எங்களைத் தாக்குகிறது மாதக்கணக்கில் இரவு பகலாகப் பாடுபட்ட விவசாயிகளுக்கு எதுவும் கிடைப்பதில்லை. எந்தக் கஷ்டங்களும் அனுபவிக்காத முதலாளி மார் பலனை அனுபவிக்கின்றார்கள். அரசு கூறியது போல் விரைவாக நெல்சந்தைப்படுத்தும் அதிகார சபை மூலம் விவசாயிகளிடம் இருந்து நெல்லை நியாய விலைக்கு கொள்வனவு செய்து விவசாயிகளை கஷ்டத்திலிருந்து மீட்க வேண்டும் என்று விவசாயிகள் பெருமூச்சுவிட்டனர்.

"மன்னார் மாவட்டத்தில் அறுவடைகள் நிறைவு பெறாததன் காரணத்தாலேயே நெல்சந்தைப்படுத்தும் சபை கொள்வனவில் ஈடுபடவில்லை. வழமையாக மன்னார் மாவட்டத்தில் இறுதியாகத்தான் கொள்வனவு இடம்பெறும். எதிர்வரும் புதன் கிழமை கண்டியில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று உள்ளது. அதை அடுத்துத்தான் எப்போது மன்னாரில் கொள்வனவு ஆரம்பிக்கப்படும் என்று தெரியவரும் என்று நெல் சந்தைப்படுத்தும் சபையின் கிளிநொச்சிப் பிராந்திய அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

(21, 213)

வனவளத் திணைக்களம் ஆக்கிரமிப்பு:

மாவட்ட அதிகாரிகளின் அசமந்தம் மக்கள் வாழ்வாதாரமின்றி பரிதவிப்பு

கிளிநொச்சி, பெப். 19

வனவளத் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பாலும், மாவட்ட அதிகாரிகளின் அசமந்தத்தாலும் கிளிநொச்சி ஜெயபுரம் மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து பரிதவிக்கின்றனர். கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டது ஜெயபுரம் கிராமம். 1983ஆம் ஆண்டு 548க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டனர். கிராமத்தின் எல்லையில் உள்ள வயல் நிலங்கள் அவர்களுடைய வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்டன. அவை அப்போது பகிர்ந்தளிக்கப் படவில்லை. 1990ஆம் ஆண்டுகளில் வயல் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

குடும்பம் ஒன்றுக்கு ஒரு ஏக்கர் என்ற அடிப்ப டையில் பகிரப்பட்டது. மக்கள் விவசாயத்தை மேற்கொண்டனர். பெரும்போகம், சிறுபோ கம் என்று இரண்டு முறை வயல் விதைப் பில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலை, போர் காரணமாக விதைப்புகள் இடம் பெறவில்லை. கிராமத்தில் குடியமர்த்தப்பட்ட 400 குடும்பங்கள் இந்தியாவுக்குச் சென்று தஞ்சமடைந்தன. தற்போது அங்கு 135 குடும் பங்களே உள்ளன.

வனவளத் திணைக்களம் அடாத்து

2010ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதான சூழலை அடுத்து மீண்டும் கிராமத்துக்குத் திரும்பிய மக்கள் தமது காணிகளைத் துப்பு ரவு செய்து விதைப்புக்களை மேற்கொள்ளத் திட்டமிட்டனர். காணிகளில் வளர்ந்துள்ள பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்தனர். சுமார் 50 ஏக்கர் வரையான காணிகள் துப் புரவு செய்யப்பட்டதன் பின்னர் அந்த இடத் துக்கு வேகமாக வந்தனர் வனவளத் திணைக்களத்தினர். காணிகளைத் துப்புரவு செய்யமக்களுக்கு தடையை ஏற்படுத்தினர். வனவளத் திணைக்களத்துக்குச் சொந்த மான காணிகளே அவை என்று மக்களின் வயிற்றில் மண்ணை அள்ளிப் போட்டனர். மீறித் துப்புரவு செய்தால் கைது செய்யப்படு வீர்கள் என்றும் எச்சரித்து அங்கிருந்து சென் றனர். சில நாள்களின் பின்னர் அங்கு மீண் டும் வந்த அவர்கள் காணிகளில் எல்லைக் கற்களை நட்டுவிட்டுச் சென்றனர்.

பறிக்கப்பட்ட வாழ்வாதாரம்

விவசாயம், நன்னீர் மீன்பிடி, பாரம்பரிய முறையிலான வேட்டை, விடுதலைப் புலிக ளால் அமைக்கப்பட்ட கஜீத் தோட்டத்தில் வேலை போன்ற தொழில்களில் அந்த மக்கள் அன்று ஈடுபட்டிருந்தனர். அவர்களுடைய வாழ்வாதாரமும் சிறந்திருந்தது. ஆனால் போருக்குப் பின்னர் அவர்களுடைய விவ சாய நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்ட தேவன்குளம் (பன்றி வெட்டிக்குளம்) தூர்ந்து போயுள்ளது. வேட் டையாடுவதற்கு தடை, இராணுவ ஆக்கிரமிப் பில் கஜீத் தோட்டம் என்று அனைத்துத் தொழில்களும் முடக்கப்பட்டுள்ளன. மக்கள் வாழ்வதற்கு எந்த வழிகளும் இன்றி பரிதவிக் கும் அவல நிலை தொடர்கிறது.

போராட்டங்களும், மனுக்களும்

காணி ஆக்கிரமிக்கப்பட்டு, தொழில் உரிமை மறுக்கப்பட்டது தொடர்பில் ஜெயபுரம் கிராம மக்கள் கடந்த ஆண்டு பூநகரிப் பிரதேச செய லகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தை முன் னெடுத்திருந்தனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் காணிகளைப் பெற்றுத் தருமாறு கோரி பூந கரிப் பிரதேச செயலருக்கு மனுவைக் கைய ளித்திருந்தனர். அதன் பின்னர் மனித உரி மைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலு வலகத்தில் முறையிட்டிருந்தனர். கடந்த 13ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு வந்த மக்கள் ஆளுநரிடம் மனுக் கையளித்தனர். கடந்த 15ஆம் திகதி தலைமை அமைச்சர் ரணில் வந்திருந்த போதும் அவரிடம் பிரச்சினைகளைக் கூறு வதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயகத்துக்கு ஒடிவந்த மக்களை அதிகாரிகள் தடுத்து நிறுத் தியதால் ரணிலின் செயலரிடம் மனுவைக் கொடுத்து விரக்தியுடன் திரும்பினர்.

மாவட்டச் செயலகத்தின் தாமதமும்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அதிகாரி கனகராஜி டம் மக்களுடைய முறைப்பாடு தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் கேட்டபோது, காணிகள் மக்களுக்கு வழங்கப்பட்டதற்கான எந்த ஆவணங்களும் மக்களிடம் இருக்க வில்லை. பூநகரிப் பிரதேச செயலகம் காணி களை மக்களுக்கு வழங்குவதற்கு தயாரா கவே உள்ளது. பிரதேச மட்ட தொழில் நுட்பக் குழு காணிகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றை மக்களுக்கு வழங்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளது. ஆனால் மாவட்ட மட்டக் குழுக் கூட்டம் இடம்பெறவில்லை. மாவட்டச் செயலருக்கு கடிதம் அனுப்பிவைத் துள்ளோம். மாவட்டத் தொழில்நுட்பக் குழு வைக் கூட்டி, எமக்கு அறிக்கை தருமாறு கோரியுள்ளோம் - என்றார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலருடன் தொடர்பு கொண்டபோது, பிரச் சினை தொடர்பில் பிரதேச செயலர்தான் கையாண்டுள்ளார். அவரிடம் தான் கேட்க வேண்டும் - என்றார். மாவட்டக் குழுவைக் கூட்டி அறிக்கை தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளதே, அதற்கு என்ன நடந்தது என்று மீண்டும் அவரிடம் கேட்டபோது, அது தொடர்பில் விசாரித்துவிட்டு அழைக்கின்றேன் - என்றார். மீண்டும் அழைப்பை ஏற்படுத்திய அவர், கடிதம் வந்துள்ளது எனினும் தான் சிறு வேலையாக இருந்ததால் அதைக் கவனிக்கவில்லை. மேலதிக மாவட்டச் செயலரிடம் கொடுத்துள் ளேன் என்று தெரிவித்தார்.

கண்டுகொள்ளாத அதிகாரிகள்

மக்களுடைய பிரச்சினை தொடர்பில் ஒவ் வொரு அதிகாரிகளும், தனக்கு மேல் உள்ள வருக்கு தெரியப்படுத்தினால் போதுமானது என்ற நிலையிலேயே உள்ளனர். மேலதிகா ரிகளோ அது தொடர்பில் அடுத்த கட்ட நகர்வு கள் என்ன? மக்களுடைய காணிகளை மக்களுக்கே பெற்றுக் கொடுப்பதற்கு செய்ய வேண்டிய அணுகுமுறைகள் எவை?, தொழில்கள் இன்றி, வருமானங்கள் இன்றி பரிதவிக்கும் மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த வகுக்க வேண்டிய திட்டங்கள் என்ன என்பது பற்றிச் சிந்திக்காது, தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்தாது திசைமாறிப் பயணிக்கின்றனர். இப்படிப்பட்ட எல்லைக் கிராமங்களில் இருக்கும் மக்களைத் தவிக்கவிடும் அதிகாரிகளால்தான் மக்களு டைய வாழ்விடங்கள் சூறையாடப்படுகின்றன என்று மக்கள் குற்றம் சுமத்தினர். (ஒ.5,21)

வைக்கோலில் இருந்த பாம்பு குடும்பஸ்தரை தீண்டியது

தென்மராட்சி பெப் 19

வயலில் காணப்பட்ட வைக்கோ லினை வாகனத்தில் ஏற்றிய போது குடும்பத் தலைவர் ஒருவர் விஷப்பாம்பினால் கடியுண்டுள் ளார். இந்தச் சம்பவம் நேற்று மிருசுவில் விடத்தற்பளையில் இடம்பெற்றது. பாம்புக் கடிக்கு இலக்கான 35 வயது குடும்பத் தலைவருக்கு சாவகச்சேரி மருத்து வமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

இந்த வருடம் வயல்களில் இயந்தி ரங்கள் மூலம் நெல் அறுவடை இடம்பெறுவதால் நெல் அறுவடை மற்றும் கூடுமிதிப்பு போன்ற காலங்களில் பாம்புகளினால் கடிப டுவோரின் எண்ணிக்கை குறை வடைந்த போதிலும் வயல் வரம்பு களிலும் குவிக்கப்பட்டுள்ள வைக்கோல்களுக்குள்ளும் மறைந்திருந்து பாம்புகள் அந்தப் பகுதிகளில் நடமாடுவோரை கடித்து வருகிறன. (ஜ-9)

வவுனியா மாவட்டத்தில் 300 ஆசிரிய வெற்றிடங்கள்

தேசிய பாடசாலைகளில் அளவுக்கதிமாக ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம்,பெப்.19

வவுனியா மாவட்டத்தில் தற்போதும் 300 இற்கும்மேற்பட்ட ஆசிரியவெற் றிடங்கள் காணப்படுகின்றபோதும் தேசிய பாடசாலைகளில் மட்டும் மிக வும் அதிக ஆசிரியர்கள் தேவைக்கும் அதிகமாக கொட்டிக் கிடப்பதாக பெற் றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் மொத்தமாக தற்போது 111 பாடசாலை கள் உள்ளன. இதில் 5 தேசிய பாட சலைகளும் உள்ளடக்கம். இவ்வாறு காணப்படும் 111 பாடசாலைகளிலும் 29 ஆயிரத்து 700 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இந்த மாணவர் களின் கற்பித்தல் பணிக்காக ஆயி ரத்து 611 ஆசிரியர்கள் பணியில் உள்ளனர். 5 தேசிய பாடசாலைக ளில் 7 ஆயிரத்து 400 மாணவர்கள் கற்கும் நிலையில் அதற்கான கற்பித் தல் பணிக்காக 473 ஆசிரியர்கள் பணியில் உள்ளனர்.

எஞ்சிய 106 பாடசாலைகளிலும் கல்வி கற்கும் 22 ஆயிரம் மாணவர் களுக்காகவும் ஆயிரத்து 1150 ஆசிரி யர்கள்கூட இல்லாத நிலமையே காணப்படுகின்றன. இதனால் வவு னியா தெற்கு வலயத்திலும் ஆரம்ப பிரிவு கணிதம், விஞ்ஞானம், ஆங் கிலம் உட்பட 345 ஆசிரியர்களுக்கு தற்போதும் வெற்றிடம் காணப்படு கின்றது.

நிலமை இவ்வாறு இருக்க தேசிய பாடசாலையான காமினி வித்தியால யத்தில் தற்போது 234 மாணவர்கள் மட்டுமே பதிவில் உள்ளனர். அவர்க ளிலும் 50 மாணவர்கள் தொழில் முறை பயிற்சிக்காக சென்றுவிட்ட னர். அவ்வாறானால் 184 மாணவர் கள் மட்டுமே உள்ளனர். இங்கே மிகப் பெரும் ஆச்சரியமான விட ய மாக 54 ஆசிரியர்கள் பணியில் உள்ளனர். அதாவது 3 மாணவர்க ளுக்கு ஒரு ஆசிரியர் உள்ளார்.

இதேநேரம் இதே மாவட்டத்தில் பல பாடசாலைகளில் குறித்த பாடங்க ளுக்கு ஒரு ஆசிரியர்கூட இல்லாத நிலமையும் காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

இது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஸ்ணனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:

மேற்படி நிலமை காணப்படுகின்ற போதும் அந்த நிலமையை போக்கு வதற்கான முயற்சிகள் மாகாண திணைக்களம் ஊடாகதீர்ப்பதற்கான முயற்சியாக மத்திய கல்வி அமைச்சி யினை நாடியுள்ளோம் எனப் பதில ளித்தார். (ஜ-105)

ஆசிரிய ஆலோசகர் விபத்தில் சாவு

கொழும்பு, பெப். 19

மணல் ஏற்றிச் சென்ற டிப்பரும் உந்துருளியும் நேருக்குநேர் மோதியதில் உந்துருளியில் சென்ற ஆசிரியர் ஆலோசகர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்த னர். அவரது மனைவி கடுங்காயங்களுடன் மகி யங்கனை மருத்துவம னையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

அவரின் நிலை கவலைக் கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மகியங்கனை-பதியத்த லாவை வீதியில் நேற்று இது இடம்பெற்றது. மகி யங்கனை கல்விவல ய ஆசிரியர் ஆலோசகரான டபிள்யு. எம். பியசேன (வயது 54) என்பவரே உயிரிழந்தார். (த)

பாவனைக்குக் கொடுத்து 6 மாதங்களில் வீதி சேதம்

விரைவில் மீண்டும் சீரமைக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

வடமராட்சி கிழக்கின் பருத்தித்துறை, வெற்றிலைக்கேணி வீதியில் மருதங்கேணி வடலியடிப் பிள்ளையார் கோவில் சந்தியிலிருந்து, வடக்கு மாகாண சபையின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் சீரமைக்கப்பட்ட வீதி, பயன் பாட்டுக்கு வழங்கப்பட்டு 6 மாதங்களிலேயே பழுதடைந்துள்ளது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர் பணி மனையின் கண்காணிப் பின் கீழ், பருத்தித்துறை வீதி அபிவிருத்தி திணைக் கள் பொறியியலாளர் அலு வலகத்தால் 71 லட்சத்து 30 ஆயிரத்து 648 ரூபா செல வில் சுமார் ஆயிரத்து 300 மீற்றர் நீளமான வீதி சீர மைக்கப்பட்டது.

வீதிப் பயன்பாட்டுக்கு விடப் பட்டு 6 மாதங்கள் ஆகும் நிலையில் வீதியின் பல இடங்களில் சேதம் ஏற்பட் டுள்ளது. தாருக்கு மேலால் கற்கள் கிளம்பியும், வெளிக ளாக காணப்படுகின்றன. வாகனங்கள் அதிகம் செல் லும் போது இந்த வீதியின் நிலை இன்னும் மோசமா கும். வீதி அமைக்கும்போது சரியான முறையில் கண் காணிக்கப்படாமையும் பொருத்தமான வளங்கள் பாவிக்கப்படாமையுமே இவ் வாறு வீதி சேதமடையக் காரணம் என்று மக்கள் தெரிவிப்பதுடன், சேதம டைந்த வீதியை திருத்தவும் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியில் பிரிவுடன் தொடர்புகொண்டு கேட்டபோது தெரிவிக்கப்பட் டதாவது:

வீதி வேலைகள் உரிய தொழில் நுட்ப அலுவலரின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றது. நீர் அதிக மாகச் செல்லும் இடமாகவும் வெள்ளம் அதிகளவு கடந்து செல்லும் வீதியாகவும் அது உள்ளது. ஆகவே அதற்கு மறுசீரமைப்பு அவதானிப்பு அவசியம். தற்போது வீதி அவதானிக்கப்பட்டு ஒப் பந்த காரருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. வீதி பராமரிப்பு காலம் ஒருவருடம் ஆகவே அந்த காலப் பகுதிக்குள் வீதியை சீரமைப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது. ஒரு மாதத்துக்கும் குறைவான காலப் பகுதிக் குள் அந்த வீதி சீரமைக்கப் படும் என்று தெரிவிக்கப்பட் டது. (க-7-160)

மாசிமகம் நிகழ்வு

வவுனியா பூந்தோட்டம் சிறி நகர், துர்க்கை அம்மன் ஆலயத்தில் மாசிமகத்தை முன்னிட்டு, இன்றைய தினம் காலை 10 மணிக்கு விசேட பூசை வழிபா டுகளுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த பூசை நிகழ்வுகளில் அடியவர்கள் அனைவரும் கலந்துகொண்டு அம்பா ளின் அருளை பெற்றுய்யு மாறு ஆலயபரிபாலன சபையால் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. (க-110)

கந்தையா நீலகண்டனின் முதலாம் ஆண்டு நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், பெப். 19

அறநெறிக்காவலர் கந் தையா நீலகண்டன் ஞாப கார்த்த முதலாம் ஆண்டு நினைவுப் பேருரை நாளை புதன்கிழமை நல்லூர் இந்து மாமன்ற பிராந்திய பணி மனையில் மாலை 4 மணிக்கு செஞ்சொற்செல் வர் ஆறுதிருமுருகன் தலை மையில் நடைபெறும்.

கந்தையா நீலகண்டன் அகில இலங்கை இந்து மாமன்ற முன்னாள் தலை வரும் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை முன் னாள் தலைவரும், மனித நேய அமைப்பின் முன் னாள் செயலருமாவார். (ஜ)

பயிற்றுவிப்பாளர்கள் இன்றி இயங்கும் நகர சபையின் வலுவூட்டல் நிலையம்!

அங்கத்தவர்கள் குற்றச்சாட்டு

வவுனியா, பெப். 19

வவுனியா நகரசபையின ரின் உடல் வலுவூட்டல் நிலையம் பல்வேறு குறை பாடுகளுடன் இயங்கிவருவ தாகவும் அங்கு சென்று பயிற்சிகளை மேற்கொள்ப வர்களுக்கு தகுதியான பயிற்றுவிப்பாளர் எவரும் இல்லையென்றும் உடல் வலுவூட்டல்நிலையத்துக்குச் செல்லும் அங்கத்தவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வவுனியா நகரசபையிலுள்ள உடல் வலுவூட்டல் நிலை யத்துக்கு அண்மையில் உபகரணங்கள் சில கொள் வனவு செய்யப்பட்டுள்ளது டன், அது தரமற்றவையாக வும் உபயோகிக்க முடியாம லும் நீண்டகாலமாக பாவ னையற்ற நிலையில் அங்கு காணப்படுகின்றன.

நகரின் மத்தியிலுள்ள நகர சபையினரின் பூரண கட் டுப்பாட்டிலுள்ள உடல் வலு வூட்டல் நிலையத்துக்கு ஒருவரிடமிருந்து ஆயிரம் ரூபா முற்பணமாகவும் மாதாந்தம் 750 ரூபாவும் நக ரசபையினரால் அங்கத்தவர் களிடமிருந்து அறவிடப்பட்டு வருகின்ற நிலையிலும், நிலையம் துப்பரவு இன்றி யும் மலசலகூடத்திலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது. உடல் வலுவூட்டல் நிலை யத்துக்கு பயிற்றுவிப்பாளர் இன்மையால் பலர் அங்கு செல்வதில்லை. தற்போது இருக்கும் அங்கத்தவர்களுக் குச் சரியான முறையில் பயிற் றுவிப்பதற்கு பயிற்றுப்பாளர் இன்மையால் கடந்த பல வருடங்களாக வவுனியா நகரிலிருந்து எவரும் உடல் வலுவூட்டல் போட்டிக்கு செல் லவில்லை. இது வவுனியா நகருக்கு ஒரு குறைபாடா கவே காணப்படு கின்றது. பல திறமையாள னவர்கள் இருந்தும் நகரசபையின ரால் இனங்கண்டு அவர் களை பயிற்றுவிப்பாளர்க ளாக இணைத்துச் செயற் பட முடியவில்லை.

இக்குறைபாடுகள்தொடர்பாக நகரசபை உபநகரபிதாசு.குமார சாமியிடம் கேட்டபோது:

உடல் வலுவூட்டல் நிலை யத்துக்கு பயிற்றுவிப்பாளர் களாக பணிபுரிவதற்கு 21 பேரிடமிருந்து விண்ணப் பங்கள் கிடைத்துள்ளன. எதிர்வரும் 25 ஆம் திகதி இடம்பெறவுள்ள சபை அமைர்வில் இவ்விடயங் கள் குறித்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. மலசலகூடத்திலிருந்து துர் நாற்றம் வீசுவதாக நகர சபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மலசலகூடம் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. துப்பரவுப்பணியாளர்கள் இருவர் கடமையாற்றிவரு கின்றனர். எனவே துப்பர வின்மை என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ளார். (க)

சமூர்த்தியின் பயன்களை அனைவரும் பெறவேண்டும்

நலனுதவி பெற்ற பயனாளி தெரிவிப்பு

ஏழாலை, பெப்.19

வறுமை தணிப்புத் திட்டத்தினால் வறிய நிலையில் வாழும் குடும்பங்கள் சுயமுயற்சியால் முன்னேற்றம் அடையும் அளவுக்கு சமூர்த்தி திட்டம். பல்வேறு வேலைத் திட்டங்களினூடாக உதவியிருக்கிறது. அவ்வாறு எனது குடும்பத்துக்கு கிடைத்த உதவியினால் நாம் சொந்தக் காலில் நிற்பதற்கும் குடும்பத்தின் வருமானம் அதிகரிப்ப தற்கும் உதவியிருக்கிறது. இதேவேளை எம்மை விட மிகவும் வறிய நிலையில் வாழும் பல குடும்பங்களுக்கு. நலனுதவிகள் கிடைக்க வேண்டியிருக்கிறது இதனால் எங்கள் குடும்பத்துக்கு கிடைத்து வரும் சமூர்த்தி முத்தி ரையை பிரதேச செயலரிடம் முழு மனதுடன் கையளித் திருக்கின்றேன்.

இவ்வாறு சமூர்த்தித் திட்டத்தில் நலனுதவி பெற்ற பயனா ளியான முத்து சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.

உடுவில் பிரதேச செயலகப் பிரிவிக்குட்பட்ட சுன்னாகம் சமூர்த்தி வங்கிப் பிரிவில் ஜே/209 ஈவினை கிராம அலு வலர் பிரிவில் மத்தாலோடை புன்னாலைக்கட்டுவன் கிராமத்தில் வசிக்கும் இவர் நலனுதவி பெறும். சமூர் த்தி முத்திரையை பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலர் சி.ஜெயகாந் முன்னிலையில் அண்மையில் ஒப் படைத்திருந்தார்.

இதுதொடர்பில் அவரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது குடும்பம் மிக வறிய நிலையில் இருந்த போது சமூர்த்தி உதவி கிடைக்கப் பெற்றது. எனது வாழ்க்கையின் ஜீவனோபாயத்துக்கு சிறியளவிலேயேனும் இது உதவி யது.

ஆரம்பத்தில் கம்மாலை ஒன்றினை நடத்தி பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கினேன் . போர்க்காலச் சூழலி னால் அத்தொழிலை முற்றாக கைவிட்டு சிறியளவில் விவசாயம் செய்ததுடன் நாளாந்தம் கல்லுடைக்கும் தொழிலிலும் ஈடுபட்டு வாழ்கையை ஓட்டிச் சென்ற போதும் முறையற்ற கடனுக்குள் சிக்கி பல்வேறு வகை யிலும் இடர்பட்டேன் .

அந்த வேளையில் சுன்னாகம் சமூர்த்தி வங்கியில்அங் கத்தவராகி சமூர்த்தி சிறுகுழுவில் இணைந்து நாளாந்தம் உழைக்கும் பணத்தில் சிறுகச் சிறுக பணத்தினை சேமித்தேன் அதன்பயனாக சமூர்த்தி வங்கியில் சுயதொ ழில் முயற்சிக்காக ரூபா 50 ஆயிரம் கடனினைப் பெற்று விவசாயத்தினை மேம்படுத்தினேன்.

இதேவேளை சமூர்த்தி வாழ் வாதார உதவியில் விதை உருளைக் கிழங்கு கிடைத்ததுடன் சுழற்சி வாழ்வாதாரக் கடன் திட்டத்தில் வெங்காயச் செய்கையை ஊக்கிவிற்க வட்டிச் சலுகையில் ரூபா 40ஆயிரம் கடன் கிடைத்தது இதனைக் கொண்டு விவசாயத்தினை மேலும் வலுவடை யச் செய்து வருமானத்தைப் பெற்று அதனையும் கிரம மான முறையில்செலுத்தினேன்.

நான் வீட்டு வசதியின்றி மிகவும் கஸ்ரப்பட்டு தற்போது நிரந்தரமான வீடு ஒன்றினை வாங்கி வீட்டுவசதியைப் பெற்றிருக்கிறேன். இதற்காக நான் கடன் பெற வேண்டிய நிலையில் வீட்டு வசதியை மேம்படுத்துவதற்காக சமூர்த்தி வங்கிச் பிரிவில் ரூபா 2லட்சத்து 50 ஆயிரம் குடும்ப அபி விருத்திக் கடனாக கிடைத்திருக்கிறது.

விவசாயத்தை மேம்படுத்துவதற்காக இரு சில்லு உழவு இயந்திரத்தைக் கொள்வனவு . செய்வதற்காக வாழ்வா தார அபிவிருத்திக்கடன் 5 லட்சத்தைப் பெறுவதற்கு சமூர்த்தி வங்கியில் விண்ணப்பம் செய்து அந்தக் கடன் கிடைக்கும் நிலையில் இருக்கிறது.

இதேவேளை 2018ஆம் ஆண்டில் சமூர்த்தி திணைக்க ளத்தின் யாழ்ப்பாண மாவட்ட சமூர்த்திப் பிரிவினால் எமது கிராமம் பூட்டு, கம்மாலை மற்றும் இணைந்த தொழில்க ளுக்கான உற்பத்திக் கிராமமாக தெரிவு செய்யப்பட்டு பல்வேறு வகையிலும் வாழ்வாதாரங்கள் மற்றும் கடன் வசதிகளும் வழங்கப்படுகிறது .

இதில் எனக்கு விவசாயத்தில் எதிர் நோக்கும் பிரச்சினையில் ரூபா 45ஆயிரமும் அதனோடு சமூர்த்தி வங்கியில் சுழற்சி வாழ்வாதாரத் கடனாக ரூபா 75ஆயி ரம் பெற்று ரூபா ஒரு லட்சத்து 50 ஆயிரம் பெறும தியுடைய வெங்காயக் களஞ்சியம் அமைத்திருக் கின்றேன்.

கடந்த ஐந்து வருடத்தில் சமூர்த்தி திட்டத்தில் கிடைத்த பயன்களால் எனது வருமானமட்டத்தை உயர்த்தி சொந் தக்காலில் நிற்பதற்கு உதவிய சமூர்த்தித் திட்டத்துக்கும் அதனை ஏற்படுத்தித் தந்த அதிகாரிகள் அலுவலர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு எனக்கு ஊன்று கோலாக இருந்த சமூர்த்தி முத்திரையை மனவிருப்பத்துடன் கையளிக் கின்றேன்.

என்னைப் போல் பலரது வாழ்க்கைக்கு உதவக் கூடிய முத்திரையை, நலனுதவியை எதிர் பார்த்து காத்திருக்கும் மிகவும் வறிய நிலையில் வாழும் மக்களுக்கு கிடைக்க சம்பந்தப்பட்ட அனை வரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். - என்றார். (ஜ-39)

போதையில் கடமைக்கு வந்தால் உடனடியாகப் பதவி நீக்கப்படுவர்

அமைச்சர் அர்ஜுன திட்டவட்டம்

வடமராட்சி,பெப்.19

மதுபோதையில் இ.போ.ச ஊழியர்கள் காணப்பட்டால் அவர்கள் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்படுவர்கள் இ.போ.ச வேலைத்தளம் கோவிலைப் போன்றது. கடமையில் இருக்கும் ஊழியர்கள் மிக ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு விமானப்போக்குவரத்துச் சுற்றுலாத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்க யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். அவர் பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் எஸ். கந்தசாமி தலைமையில் ஊழியர்களால் வரவேற்கப்பட்டார்.

பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு மருதடி ஞான வைரவர் ஆலயத்தில் இடம் பெற்ற சிறப்பு பூசையில் கலந்து கொண்டார்.

டிப்போ முகாமையாளர் தலைமையில் இடம் பெற்ற ஊழியர்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு இ.போ.ச ஊழியர்கள் குறித்து சில முறைப்பாடுகள் எனக்கு கிடைத்துள்ளன.

கடமையின் போது ஊழியர்கள் மது அருந்தி இருப்பது கண்டு பிடித்தால் பதவியில் இருந்து விலக்கபடுவார். ஊழியர்கள் ஒழுக்கமாகவும் பண்பாடாகவும் நடந்து கொள்வதுடன். வேலைத்தளத்தை கோவில் போல பேண வேண்டும்.

ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றி இ.போ.சபையின் வருமானத்தை அதிகரித்துதர வேண்டும். தற்போது இங்கு 38 லட்சமே வருமானமாக கிடைக்கின்றது.

இவ்வருமானம் 45 இலட்சமாக அதிகரிக்கப்பட வேண்டும். அதற்கு ஊழியர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - என்றார். (க-173)

அராலி வடக்கு கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் நடமாடும் இலவச ஆயுர்வேத மருந்தகம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் வடக்கு மாகாண சுதேச ஆயுர்வேத ஆணையாளர் வைத்தியர் திருமதி சியாமா துரைரட்ணம், ஆயுள்வேத ஒவ்த்தியரும் பிரதேச சபை உறுப்பினருமான செ.பரமசிவம் பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-50)

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்துக்கு தலைவர் தெரிவு

சாவகச்சேரி, பெப் 19

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபையின் தலைவராக மூன்றாவது முறையாகவும் செ.மகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்கமண்டபத்தில்கடந்தசனிக்கிழமை இடம்பெற்ற சங்க கிளைக்குழு உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் இயக்குநர் சபை தெரிவின் போது தலைவராகசெ.மகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

உப தலைவராக ஆ.தில்லைநாதனும் இயக்குநர் சபை உறுப்பினர்களாக கு.நாகராசா, வி.சதாசிவம், கா.அமிர்தலிங்கம், கா.தயாகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஜ-9)

சேவையில் விடப்பட்டது குப்பை அகற்றும் வாகனம்

தென்மராட்சி, பெப். 19

சாவகச்சேரி பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட குப்பை அகற்றும் வாகனம் நேற்று சேவையில் விடப்பட்டது.

மைய உள்ளக மற்றும் மாகாண சபைகள் உள்ளுராட்சி அமைச்சினால், கடந்த வாரம் காலி சமனல விளையாட்டரங்கில் வைத்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரசிங்கவால் பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவனிடம் கையளிக்கப்பட்டது.

வாகனம், கொடிகாமத்திலுள்ள சபை தலைமையகத்துக்குக் கொண்டு வரப்பட்டு நேற்று சேவைக்கு விடப்பட்டது.

தவிசாளர் தலைமையில் நடைபெற்ற ஆரம்பநிகழ்வில் கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள நிறுவனங்களின் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-9,159)

டெங்கு பெருகும் காணிகள் அரசு உடமையாக்கப்படும்

சாவகச்சேரி பெப்.19

டெங்கு நுளம்பு பெருகக்கூடிய நிலையில் காணப்பட்ட இரு காணிகள் அரசுடமையாக்கப்படும் என்ற சிவப்பு அறிவித்தலை சாவகச்சேரி சுகாதாரத் தினைக்களத்தினர் காணிகளில் காட்சிப்படுத்தியுள்ளனர்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கல்வயல் வாகையடி ஒழுங்கையில் உள்ள காணியொன்றில் காணப்பட்ட பற்றைகளால் அயலில் உள்ள வீடுகளில் மூன்று பிள்ளைகள் டெங்குத் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு சங்கத்தானை பெரிய அரசடி வீதியில் உள்ள காணியொன்றில் காணப்பட்ட பற்றைகளில் உருவான டெங்கு நுளம்புகளினால் அயலில் உள்ளவர்கள் டெங்குவினால் பீடிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் இரு காணி உரிமையாளர்களுக்கு சுகாதாரத் தினைக்களத்தினரால் அறிவித்தல்கள் வழங்கப்பட்டும் இதுவரை காணிகள் துப்புரவு செய்யாததால் கடந்த சனிக்கிழமை இரு காணிகளையும் துப்பரவு செய்ய இரு வார கால அவகாசம் வழங்கப்பட்டது.

இக் காலப்பகுதிக்குள் துப்பரவு செய்யப்படாவிடின் உள்ளுராட்சி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் காணி அரசுடமையாக்கப்படுமெனவும் குறிப்பிட்டு சிவப்பு அறிவித்தல் பொருத்தியுள்ளனர். தென்மராட்சி பிரதேசத்தில் இந்த வருடத்தின் முதல் 45 நாள்களில் 50 இக்கு மேற்பட்டோர் டெங்கினால் பீடிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிலர் தமது காணிகளைத் துப்புரவு செய்யாமல் பற்றையாக விடப்பட்டுள்ளதால் அதனுள் உருவாகும் டெங்கு நுளம்புகளினால் அயலவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

அதனால் காணிகளை அரசுடமையாக்கும் சட்டத்தின் கீழ் காணி உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

வட்டாரங்களின் புதிய இலக்கங்கள் பதிவு செய்யப்படல் அவசியமானது

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

சாவகச்சேரி, பெப் 19

வட்டார மீளாய்வின் பிரகாரம் உள்ளுராட்சி தேர்தல்கள் நடத்தப்பட்டபோதிலும் சபையின் பதிவேடுகளில் வட்டாரங்களின் பழைய இலக்கங்கள் குறிப்பிடப்படுகிறன. அவற்றினை மாற்றி வட்டாரங்களின் புதிய இலக்கங்கள் பதிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையின் அமர்வு கடந்த வியாழக்கிழமை தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபைக்கான வட்டாரங்கள் மீளாய்வு செய்யப்பட்டு புதிய இலக்கத்தின் பிரகாரம் தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால் தேர்தலின் பின்னர் வருடாந்தம் வரியிறுப்பாளர்களுக்கு விநியோகிக்கப்படும் ஆதனவரி அறிவித்தலில் பழைய் வட்டார இலக்கம் குறிப்பிட்டு வழங்கப்பட்டுவருகிறது. இதனால் வரியிறுப்பாளர்கள் தமது வட்டாரத்துக்கு முன்னைய இலக்கம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். எனவே உடனடியாக,தற்போதுள்ள வட்டார இலக்கம் ஆதனவரி அறிவித்தலில் பதிவு செய்யவேண்டும் - என்றார்.

இது தொடர்பில் சபைச் செயலர் கா.சண்முகதாசன் தெரிவித்ததாவது:

சபையின் ஆதனங்கள் வரிமீளாய்வு செய்த பின்னர் அனைத்து ஆதனங்களும் கணினிமயப்படுத்தப்பட்டன. ஆதன் பின்னரே வட்டார மீளாய்வு செய்யப்பட்டு வட்டார இலக்கங்கள் மாற்றப்பட்டுள்ளன. இன்னமும் கணினியில் ஆதனங்களின் பதிவுகள் மீளளிக்கப்படாததால் பழைய பதிவேற்றத்தின் பிரகாரம் அறிவித்தல்கள் பெறப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆதனங்களை உள்ளடக்கிய கணினியில் மாற்றம் செய்வதற்கு காலம் செல்லும் என்பதால் இவ்வருடத்துக்குரிய அறிவித்தல்களில் கணினியில் பதிவில் உள்ள பழைய வட்டாரங்களின் இலக்கங்களுடன் அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

கணினிப் பதிவுகளைக் கையாண்ட அனுவலர்கள் இடமாற்றல் பெற்றுச் சென்றதால் உடனடியாக மாற்றம் செய்ய முடியவில்லை விரைவில் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (ஜ-9)

கூட்டுறவுக்குப் பாலமாகத் திகழ்ந்தவர் பொ.மோகன்

கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகிசன் புகழாரம்

அளவெட்டி,பெப்.19

பொ.மோகன் கூட்டுறவுக்கு ஒருபாலமாய் திகழ்ந்தவர் என்று புகழாரம் சூட்டினார் வடக்கு மாகாண கூட்டுறவுஆணையாளர் பொ.வாகிசன்.

வடக்கு மாகாண பனை, தென்னை வளஅபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசமும் அதன் உறுப்பு நிறுவனங்களும் இணைந்து ஏற்பாடு செய்த யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச்சென்ற பொ.மோகனுக்கான சேவைநயப்பு நிகழ்வு சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு துறையில் பணியாற்றுபவர் அந்தத் துறைக்கும்.அதைநம்பி வாழும்உறுப்பினர்களுக்கும் நல்லசேவையினை வழங்குவராயின் அவர் எல்லோருடைய பாராட்டுதலுக்கும் உரியவராகிறார்.அந்தவகையில் பொ.மோகன் திறம்பட சேவையாற்றினார். (ஜ-6)

கடமையைப் பொறுப்பேற்காத பட்டதாரிகள் விவரம் சேகரிப்பு

கல்வி அதிகாரிகளுக்கு ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 19

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் 249 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்ட நிலையில் இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்காதவர்களின் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளிடம் வடக்கு மாகாண ஆளுநர் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த 26ஆம் திகதி வழங்கப்பட்ட நியம னத்தின் போது 249 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது. 160 பேர்மட்டுமேபணியில்இணைந் துள்ளனர் என்று தெரிவிக்கப்ப டுகின்றது.

வடக்கு மாகாணத்தில் பட்டதாரி கள் வேலை இல்லை என்று போராட்டம் நடத்தும் நிலையில். அவர்களுக்கு நியமனம் வழங்கி னால் தமது சொந்த மாகாணத் திற்குள் பணிபுரிய முன்வராது வீட்டுக்கு அண்மையில் உள்ள பாடசாலைக்கு நியமனம் வேண் டும் எனக் கோரியே பலர் கடமை களைப் பொறுப்பேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் பலரை சொந்த மாவட்டத்தில் நியமனம் வழங் கிய சூழலிலும் சொந்தக் கிரா மத்துக்கு அண்மையில் கோரு வதாகவும் சுட்டிக்காட்டப்படு கின்றது.

இவற்றின் அடிப்படையில் தற் போது நியமனம் வழங்கியும் கடமைகளைப் பொறுப்பேற்காத பட்டதாரிகளின் விவரங்கள் திரட் டப்பட்டு இந்த ஆண்டின் நடுப்பகு தியில் அல்லது அடுத்த ஆண்டு விண்ணப்பம் கோரி நியமனம் வழங்கப்பட்டாலும் அதே பாடசா லைகளுக்கே நியமனம் வழங் கப்பட வேண்டும்எனக்கோரிக்கை விடுக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது கடமைகளைப் பொறுப் பேற்காத ஆசிரியர்களின் பெயர் விவரம் என்பன அடையாள அட்டை இலக்கங்களுடன் திரட் டப்படுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (த-105)

பிரமாண்ட சரஸ்வதி உருவச்சிலை திறப்பு



யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாட சாலையில்புதிதாகஅமைக்கப்பட்ட சரஸ்வதி உருவச் சிலை நேற்று முன்தினம்அபிசேகவழிபாடுகளு டன் திறந்து வைக்கப்பட்டது. பாட சாலையின் அதிபர் இ.மகேந்தி ராஜா தலைமையில் காலையில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று அதனைத்தொடர்ந்துகும்பபூசைக ளுடன்உருவச்சிலைதிறப்புஇடம் பெற்றது.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி யில் உள்ள மகாநதி நகைமாட உரிமையாளரால்5இலட்சம்ரூபா செலவில்அமைத்துவழங்கப்பட்ட உருவச் சிலையே திறந்து வைக் கப்பட்டது.

இந்து ஆரம்ப பாடசாலையில்தின மும் இடம்பெறும் கூட்டுப் பிராத் தனை வழிபாடுகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட இச் சிலையினை இந்தியாவில்இருந்துவருகைதந்த சிற்பிகள்வடிவமைத்தனர்.

இந்தசிலையைபாடசாலைஅதிபர் இ.மகேந்திராஜாமற்றும்சிலையை அமைத்துவழங்கியமகாநதிநகை மாட உரிமையாளர் சி.சிவது சந் தன்ஆகியோருடன்மாவட்டசமூக சேவை உத்தியோகத்தர் வ.செல் வம்ஆகியோர்இணைந்துதிறந்து வைத்தனர். (க-105)

அதிபருக்கு இடமாற்றம்

சாவகச்சேரி, பெப்.19

மீசாலை வீரசிங்கம் மத் திய கல்லூரியின் அண் மைக் கால வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்ட அதிபர் தி.அம்பலவாணர் உட னடியாகச் செயற்படும் வண் ணம் பளை மத்திய கல்லூ ரிக்கு அதிபராக வடமா காண கல்வித் திணைக்க ளத்தினால் நியமிக்கப்பட் டுள்ளார்.

பளை மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற் றிய க.பாலகிருஷ்ணன் சேவையிலிருந்து இளைப் பாறவுள்ளார்.

வகை 1 ஏபி தரத்தைச் சேர்ந்த பளை மத்திய கல் லூரிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த வர்களிடமிருந்து கல்வித் தி ணைக்களத்தினால் விண்ணப் பங்கள் கோரப் பட்டு, விண்ணப்பித்தவர்க ளில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் அதி பர் தி.அம்பலவாணர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

அதன் பிரகாரம் உடனடி யாகச் செயற்படும்வண் ணம் பளை மத்திய கல்லூ ரியின் அதிபராக நியமிக் கப்பட்டுள்ளார் என கல்வித் திணைக்களத்தினால் அறி விக்கப்பட்டுள்ளது.

இவர் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர், பாடசாலை மத் திய கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டது.

அதன்பின்னர் இவர் மேற் கொண்ட நடவடிக்கைக ளின் பயனாக கல்லூரிக்கு புதிய பௌதீகவளங்கள் அதிகரித்ததுடன், கல்லூ ரிக்கு தனியான விளை யாட்டுமைதானம் பெற்றுத் தரும் நடவடிக்கையில் ஈடுபட்டு வெற்றி கண்டவர் என்று தெரிவிக்கப்படது. (க-9)

கடலுணவு விற்கும் நிலையத்தின் மாபிள் உடைந்துள்ளதால் சிரமம்

வலி.தென்மேற்கு, பெப்.19

மானிப்பாய் பொதுச் சந்தையில் கடலுணவுகள் விற்பனை நிலை யத்தில் பதிக்கப்பட்டுள்ள மாபிள் கற்கள் துண்டுதுண்டாகவெடித்துச் சேதமடைந்துள்ளதால் கடலுணவு வியாபாரிகள் பெரும் சிரமங்க ளுக்கு உள்ளாகின்றனர் .

கடலுணவு வியாபாரிகளின் எண் ணிக்கைக்கு ஏற்றவாறு மீன் விற் பனை நிலையம் அமைக்கப்பட்ட போதும், மாபிள் கற்கள் வெடித்துள் ளமையால் மீன் வியாபாரிகள் அந்தப் பகுதியைத் தவிர்த்து வரு கின்றார்கள்.

வலி. தென்மேற்கு பிரதேசத்தி லுள்ள 14 பொதுச் சந்தைகளில் மானிப்பாய் பொதுச் சந்தை பிரபல் யமானதும், பிரதேச சபைக்கு அதிக வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதுமாகும்.

இந்தச் சந்தை வளாகத்தில் சிறிய கட்டடத்தில் சுகாதாரச் சீர்கேடுகளு டன் பல வருடங்களாக இயங்கி வந்த மீன் விற்பனை நிலையம், பொதுமக்களின் வசதி கருதி கடந்த 2 வருடங்களுக்கு முன் மானிப் பாய் வர்த்தக சங்கத்தால் பிரதேச சபைக்கு வாங்கிக் கொடுக்கப்பட்ட சந்தை வளாகத்துக்கு அருகாமை யில் உள்ள காணியில் பல மில்லி யன் ரூபா செலவில் மாபிள் கற்கள் பதிக்கப்பட்டு சுகாதார விதிமுறைக ளுக்கமைய அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

இந்த மீன் விற்பனை நிலையத்தில் வியாபாரிகளின் வசதி கருதி கடலு ணவுகளைப் பரவி விற்பதற்கு ஏற் றவாறு அமைக்கப்பட்ட மேடைக ளுக்கு மாபிள் கற்கள் பதிக்கப்பட் டிருந்தன.

பல மேடைகளில் பதிக்கப்பட்டிருந்த மாபிள் கற்கள் வெடித்துச் சேதம டைந்துள்ளமையால், வியாபாரி கள் பெரும் சிரமங்களுக்குள்ளா கிறார்கள்.

எனவே உடைந்த நிலையில் காணப்படும் மேடைகளைத் திருத் தியமைக்குமாறு பிரதேச சபையை வியாபாரிகள் கோரியுள்ளனர்.

இதுதொடர்பாக வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபையின் தவிசா ளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேச னிடம் கேட்டபோது: மேடையில் உள்ள மாபிள்கள் முற்றாக சிதைவ டைந்து சேதமடையவில்லை. ஒன்றிரண்டு மாபிள்கள் உடைந்து காணப்படுகின்றன அவை விரை வில் சீரமைத்துக்கொடுக்கப்படும் - என்றார். (க-115)

போத்தலில் அடைத்த கள் விற்பனை பெரும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்ப்பாண குடாநாட் டில்போத்தலில்அடைக் கப்பட்ட கள்ளின் விற் பனையில் பெரும் வீழ்ச்சிஏற்பட்டுள்ளது. பனை தென்னை அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் கடந்த போகத்தின்போதுசுமார் பத்து லட்சம் வரையி லான போத்தல்களில் கலந்து அடைக்கப்பட் டாலும் போதிய விற் பனை இன்றி அவை தேங்குகின்றன என்று பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுற வுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தனி யின் தலைவர் எஸ். செல்வராசா தெரிவித் தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:

இந்தப் போத்தல் கள் விற்பனையில்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால்சீவல் தொழிலாளர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்து வரும் மாதங் களில் கள்ளின் உற் பத்திக்கான போகம் ஆரம்பமாகும்.

இந்தக் கள்ளின் பருவ காலம் ஆரம்பிக்கப்ப டும் வரைக்கும் போத் தல் கள்ளின் விற் பனை இடம்பெறும்.

கூடுதலான கள் விற் பனை நிலையங்க ளில் இந்தப் போத்தல் கள் விற்பனை இன்றி அதிகளவில் தேங்கி காணப்படுகின்றது.

தென்பகுதியில் இருந் தும் சிலர் போத்தல் கள்ளை எடுத்து வந்து வடமாகாணத்தில் விற்பனை செய்கின்ற னர். வடக்கில்உற்பத்தி செய்யப்படும் போத்த லில் அடைக்கப்பட்ட கள்ளை ஏனைய மாவட்டங்களுக்கு எடுத்துச் சென்று விற் பனை செய்வதற்கு, உரிய தரப்பினர் ஏற்ற நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். - என்றார். (க-17)

தெரு மரம் வெட்டப்பட்டதால் பொதுமக்கள் பெரும் கவலை

கொடிகாமம் பெப் 19

கொடிகாமம் நகரப் பகுதியில் காணப்பட்ட பழைமை வாய்ந்த தெரு மரம் ஒன்று வேருடன் சாய்க்கப்பட்டமை குறித்து பொது மக்கள் கவலை தெரிவித்தனர். கடைப் பகுதிகளை அண்டிய நகரப் பகுதியில் காணப்பட்ட தெருமரத்தை, பெரிய நீர்க்குழாய் பொருத்தும் நிறுவ னத்தினர் வேருடன் தறித்துள்ளனர். வெயிலில் வரு வோர் களைப்பாறிச் செல்லும் இயற்கையான நிழற் குடையாக இந்த அரச மரம் காணப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் காணப் பட்ட தெருமரத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஏ-9 முதன்மைச் சாலை தார்க் கலவையாக மாற்றும் போது கூட மரத்தை தறிக்காது விட்டிருந்தனர். (க-159)

நாகபூசணி அம்பாள் ஆலய இரதோற்சவம்

வவுனியா,பெப்.19

வவுனியா சிறிகருமாரி நாகபூசணி அம்பாள் ஆலய இரதோற் சவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

ஜெயந்திநாத குருக்களினால் சிறப்பு அபிசேகங்கள் இடம் பெற்று பூசைகளின் பின்னர் நாக பூசணி அம்மன் தேர் ஏறி வீதி உலா வந்தார். திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக் தர்கள் கலந்து கொண்டிருந்ததோடு , தீச்சட்டி, காவடி என தங்கள் வேண்டுதல்களையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-110)

மாணவருக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு, பெப்.19

லண்டனில் வசித்து வரும் கந்தையா இராஜமனோகரன் என்பவர் முல்லைத்தீவு நெடுங்கேணி மாமடுச்சந்தி வெள் ளைப் பிள்ளையார் ஆலய "கற்பகா" அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங் கியுள்ளார்.

மாணவர்களின் உடல்,உள,ஆரோக்கியத்தில் அக்கறை கொண்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களை விளை யாட்டில் ஊக்குவிப்பதற்காக இருபதாயிரம் ரூபா பெறுமதி யான விளையாட்டு உபகரணங்களை நேற்று முன்தினம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (க-222)

மதம் சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் செயலமர்வு

மன்னார், பெப்.19

தனி நபர் ரீதியான பிணக்குகள் மற்றும் மத ரீதியான பிணக் குகளாக பரிமாற்றம் அடைவதை தடுப்பது தொடர்பாகவும் மதம் சார்ந்த பிணக்குகள் ஏற்படாமல் அதே நேரத்தில் ஏற்ப டும் பட்சதில் பிரச்சினைகளை தீர்ப்பதில் சமய தலைவர்க ளின் பங்களிப்புத் தொடர்பான விடயங்களையும் தெளிவு படுத்தும் செயலமர்வு மன்னார் தனியார் விடுதியில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

தேசிய சமாதான பேரவையின் அனுசரனையில் சி.சி.ரி. நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் மன்னார் பிரதேச சர்வமத குழு ஏற்பாட்டில் மதனி உவைஸ் தலைமையில் இடம் பெற் றது குறித்த நிகழ்வில் , மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் , சமூக பொலிஸ் சேவை அலுவலர்கள் ,கிராம அலுவலர்கள், மதத் தலைவர்கள், மத ஸ்தலங்களை பிரதி நிதிநித்துவப்ப டுத்தும் வகையில் அதன் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் சர்வ மதம் சார்ந்த கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர் .

நிகழ்வில் கிராம ரீதியில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் மதப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், அவ்வாறன பிரச்சினைகளை கிராம ரீதியில் முரண்பாடுகள் இன்றி தீர்த்து கொள்வது தொடர்பான விரிவுரைகள் இடம் பெற்றது டன், அதற்குரிய நடைமுறை ஆலோசனைகள் தொடர்பான கருத்துக்கள் நிகழ்வுகளில் பங்கு பற்றியவர்களிடம் இருந்து உள்வாங்கப்பட்டு அது தொடர்பான தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டன.

தொடர்ச்சியாக மன்னார் மாவட்டத்தில் கிராம மட்ட ரீதியிலான மத நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் வகையில் மதச் சிலை கள் உடைக்கப்பட்டு வரும் நிலையில் இந்தக் கருத்தமர்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(க-56)

முடிவில்லாது தொடர்கிறது இரணைமடு நீர்ப் பிரச்சினை

தலைமை அமைச்சர் கிளிநொச்சி வந்தபோதும் வாதப் பிரதிவாதங்கள்

கிளிநொச்சி, பெப்.19

இரணைமடுத் தண்ணீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவது தொடர்பான வாதங்கள் நீண்டுகொண்டே செல்கின்றன. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சிக்கு வந்திருந்தபோதும் அந்த விடயம் தொடர்பான வாதங்கள் இடம்பெற்றிருந்தன.

மூன்று நாள்கள் பய ணமாக வடக்குக்கு வந்தி ருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள் ளிட்ட அமைச்சர் குழாம், கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று மாவட்ட அபிவிருத்திகள் தொடர்பில் ஆராய்ந்தது. மாவட்டச் செயலகத்தில் இந் தக் கலந்துரையாடல் இடம் பெற்றது. இதன்போதே இர ணைமடுக் குடிதண்ணீர் தொடர்பிலும் வாதங்கள் இடம்பெற்றிருந்தன. இர ணைமடுக் குடிதண்ணீரை யாழ்ப்பாணம் கொண்டு செல்ல வேண்டும் என்ற சாரப்பட அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்த கருத் துக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பதில் கருத்துக்களை வழங் கினார். இதனால் அங்கு சிறிது நேரம் சர்ச்சை ஏற்பட் டது. நாடாளுமன்ற உறுப்பி னர் சி.சிறிதரனுக்கும், ஹக் கீமுக்கும் இடையில் கடும் சொற் போர் இடம்பெற்றது. குடாநாட்டுக்கு நீர் தருவீர் களா இல்லையா என கோரப்பட்டவேளையில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அதற்கு நேரடி யாகப் பதிலளிக்காது இந்த மாவட்டத்தில் இவ்வளவு தேவை உள்ளது என மாவட்டத்தின் தேவைக ளைப் பட்டியலிட்டார். இதன்போது குறிக்கிட்ட தலைமை அமைச்சர் குறித்த விடயம் தொடர்பில் விவசாய அமைச்சரான கரிசனை அது தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப் பிக்குமாறு வேண்டும் என்று கூறி விடயத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

அந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட மருத் துவனையின் தேவைகள், நூலகம் அமைப்பது தொடர் பான விடயம், கடந்த வெள் ளப்பெருக்கால் பாதிக்கப் பட்டு இதுவரை உதவிகள் கிடைக்கப்பெறாதது பற்றிய விடயம்போன்றனதலைமை அமைச்சர் ரணிலின் கவ னத்துக்குக் கொண்டுவரப் பட்டன.

வெள்ளப்பெருக்கால் பாதிக் கப்பட்டு இதுவரை அதற் கான இழப்பீடுகள் கிடைக் கப்பெறாத வர்களுக்கு உட னடியாக அவற்றை வழங் குமாறு தலைமை அமைச் சர் பணித்திருந்தார். அத்து டன் அதிகாரிகள், அரசியல் வாதிகளால் கோரப்பட்ட மாவட்டத்தின் சகல தேவை கள் தொடர்பிலும் அவர் உரிய பதிலை வழங்கியி ருந்தார். அதன்படி மாவட் டச் செயலகத்தின் அலுவ லக கட்டடத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்காகவும் மாவட்ட வைத்தியசாலைக் கட்டடம் போன்ற அமைப் புக்கான நிதிகளை விடுவிப் பதாக தலைமை அமைச்சர் தெரிவித்திருந்தார்.

நூலகக் கட்டடத்துக்கு 800 மில்லியன் ஒதுக்கீடு செய் யாது அதனை குறைத்து கட்டுமானப் பணிக்கும் அதன் எஞ்சிய தொகையை நூல் கொள்வனவுக்கும் ஒதுக்குமாறும் தலைமை அமைச்சர் கேட்டுக் கொண் டார். அத்தோடு, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசா லைக்கு சீ.ரி.ஸ்கானர் ஒன்றை வழங்க நடவ டிக்கை எடுக்கப்படும் என் றும் அவர் தெரிவித்தார்.

(21,105,6)

கட்டாக்காலி மாடுகளை பிடிக்கும் பணிகள் தீவிரம்

வவுனியா,பெப்.19

வவுனியா நகரசபையால் நேற்று முன்தி னம் இரவு பூந்தோட்டம், குருமன்காடு, தாண்டிக்குளம், பட்டாணிச்சூர், மற்றும் நகரப்பகுதிகளில் போக்குவரத்துக்கு இடை யூறாக நின்றிருந்த 88 கட்டாக்காலி மாடு கள் பிடிக்கப்பட்டுள்ளதாக வவுனியா நகர சபை அறிவித்தல் விடுத்துள்ளது.

இதன் உரிமையாளர்கள் இதற்கு உரிய தண்டப்பணமான ஆயிரம் ரூபாய் மற் றும், பிடிகட்டணமான 600 ரூபாவும் என மொத்தம் ஆயிரத்து 600 ரூபாயை செலுத்தி, தங்களது மாடுகளை எடுத்துச் செல்லுமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொள்வதுடன், தவறும் பட்சத்தில் நாள் ஒன்றுக்கு பராமரிப்புச் செலவாக 300 ரூபாய் மேலதிகமாக அறவிடப்படும் என் றும் குறித்த அறிவிப்பில் தெரிவிக்கபட்டுள் ளது.

எதிர்காலத்தில் விபத்து மற்றும் நகரத்தின் அழகைக் கருத்தில்கொண்டு கட்டாக்காலி யாக மாடுகள் திரிவதை தடுப்பதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், நகரசபையால் வேண்டுகோள் விடுக்கபட்டுள்ளது. (க-110)

வகுப்பறைத் திறப்பு விழா

கொடிகாமம், பெப். 19

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் சிறப்புத் தேவையுடைய மாணவர் களுக்கு அமைக்கப்பட்ட நட்சத்திர வகுப்பறைத் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை அதிபர் கி.விக்கினராஜா தலைமையில் நடைபெற் றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக லண்டனில் வசிக்கும் மருத்து வர் அபிராமி, சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட உளநல மருத்துவர் ஜெகரூபன், செரண்டிப் நிறுவன இணைப்பாளர் ஆனந் தன், மாணவர்கள்,ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ஜ-159)

மாசி மகத் திருவிழா

வவுனியா , பெப். 19

வவுனியா வேப்பங்குளம் சிறிபத் திரகாளி அம்பாள் கோவிலில் மாசி மகத் திருவிழா இன்று 108 சங்கு முழுக்கும், சிறப்பு அபிசேகமும் இடம் பெறும்.

மாசிமகத்திருவிழாவையொட்டிஅம் பாள் அயற் கிராமங்களுக்கான பவ னியைக் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பித்துள்ளார் . இன்று காலை கோவிலை வந்தடைந்ததும் விசேட சிறப்பு பூசைகள் இடம் பெறும். திருவிழாக் கிரியைகளை சிவசிறி திருஞான பஞ்சாட்சரம் குருக்கள் நடத்துவார் என்று தெரி விக்கப்பட்டது. (க-159)

இலங்கைக்கு ஐ.நாவில் மீளவும் கால அவகாசம்!

வலியுறுத்துகிறது தமிழரசு வாலிபர் முன்னணி

யாழ்ப்பாணம், பெப். 19

இலங்கைக்கு மீண்டும் கால அவகாசம் வழங்கி, பிரிட்டனால் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை நிறைவேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராஜதந்திர ரீதியில் செயலாற்ற வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற மாநாட்டில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதில் முக்கியமாக, தமிழ்த் தேசிய இனத்தின் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் என்ற அடிப்படைக் கோட்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது எனவும், தமிழ் பேசும் மக்களின் அரசியல் வேணவாக்களை ஓரளவேனும் பூர்த்திசெய்யும் வகையில் 2002 ஆம் ஆண்டில் எய்தப்பட்ட ஒஸ்லோ உடன்பாட்டில் கூறப்பட்டபடி 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப்பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் கூட்டாட்சிக் கட்டமைப்பில் அரசியல் தீர்வொன்றை வலியுறுத்திக் கோரவேண்டும்' என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், ஐ.நா. மனித உரிமைத் தீர்மானம் 2012, 2013, 2014, 2015 ஆம் ஆண்டுகளில் கூட்டமைப்பின் உன்னத வகிபாகத்துடன் நிறைவேறப் பெற்ற தீர்மானங்கள் குறிப்பாக 30/1 மற்றும் 34/1 ஆகிய தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் இம் மாநாடு வற்புறுத்துகின் றது.

2019ஆம் ஆண்டு மார்ச்சில் கூடுகின்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிரிட்டனால் முன்மொழியப்படவுள்ள இலங்கை மீதான புதிய தீர்மானம் 30/1 மற்றும் 34/1 தீர்மானங்களை முழுமையாக ஒரு கால அட்டவனையில் இலங்கை ஐ.நா மனித உரிமைகள் சபைத் தீர்மானங்களிலிருந்து விலகிப் போவதற்கு இடம ளிக்காத வகையில் இலங்கை மீது இராஜதந்திர ரீதியிலும் நேரடியான பொருளாதார நெருக்குதல்களைக் கொடுக்கும் வகையிலும் பன்னாட்டுச் சமூகத்தால் பொருத்தமான தடைகளை விதிப்ப தற்கும் நடவடிக்கை எடுக்கும் வகையில் தீர்மானம் அமைய வேண்டும் என்றும் இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராஜ தந்திர ரீதியில் நாடுகளுடன் பேச்சுகளில் ஈடுப வேண்டும் எனவும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

(ஒ.5)

சமாதான நீதிவான் ஆனாலும் பதவி இலக்கம் வழங்கப்படாது

சாவகச்சேரி, பெப்.19

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சமாதான நீதிவானாக பொறுப்பேற்ற போதிலும் ஏனைய சமாதான நீதிவான்களுக்கு வழங்கப்படுவது போல அதற்குரிய இலக்கம் வழங்கப்படமாட்டாது என நீதி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது எனச் சாவகச்சேரி நகர சபையின் செயலர் கா.சண்முகதாசன் தெரிவித்தார்.

அண்மையில் சமாதான நீதிவான்களாக சத்தியப்பிரமாணம் செய்த சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர்கள் இறப்பர் முத்திரை தயாரிப்பதற்கு சமாதான நீதிவானுக்குரிய இலக்கம் பெற்றுத் தருமாறு சபையின் தவிசாளரைக் கோரியிருந்தனர். இந்த விடயம் நீதி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து உள்ளூராட்சி சபையின் உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகள் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்களை மதிப்பளிக்கும் வகையில் சமாதான நீதி வான்களாக நீதி அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்டது எனவும், சபையின் ஆட்சிக் காலம் உள்ளவரை மட்டுமே சமாதான நீதிவான்களாகச் செயற்படுவர் என்பதால் அவர்களுக்கு சமாதான நீதிவான்களுக்குரிய இலக்கம் வழங்கப்படமாட்டாது என அறிவித்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை நகரசபையின் தவிசாளர் உப தவிசாளர் ஆகியோர் சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்களாகவும் செயற்பட முடியுமெனவும் தெரிவித்தார். (க -9)

யாழ்.நகர அபிவிருத்தி தொடர்பில் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.19

தேசிய திட்டமிடல், நகர அபிவிருத்தி போக்குவரத்து, வீதி அபிவிருத்தி, நீர்வள முகாமைத்துவம், விவசாயம் சூழலியல் கல்வி ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆகிய தலைப்புக்களை மையப்படுத்தியதான தலைப்பில் எதிர்வரும் வியாழக்கிழமை 21 ஆம் திகதி கருத்தமர்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ். வலம்புரி ஹோட்டலில் மாலை 5.15 மணிக்கு 'யாழ். நகர தந்திரோபாய அபிவிருத்தித் திட்டம்' எனும் கருப்பொருளில் இடம்பெறும் நிகழ்வுக்கு மேல்மாகாண அபிவிருத்தி மெகா பொலிஸ் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பங்கேற்பு அபிவிருத்தியுடனான திட்டத் தயாரிப்பு தொடர்பான மைன்ட்ஸ் நிகழ்வுக்கு உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் அழைக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ள அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் முன்வைக்கும் கருத்திட்டங்களை ஏற்கனவே அதற்கென உரித்தான படிவங்களில் அனுப்பி வைக்க வேண்டும் என ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (க-50)

நாளை தொடக்கம் ஒரு வழிப்பாதை

யாழ்ப்பாணம்,பெப்.19

மாணவர்களின் போக்குவரத்து வசதி கருதி யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாகச் செல்லும் பலாலி வீதி குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு வழிப்பாதையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை தொடக்கம் இந்த ஒரு வழிப்பாதை சேவையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர் து. ஈசன் தெரிவித்தார்.

பலாலி வீதியில் ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கும் முதலாம் குறுக்கு வீதிச் சந்திக்கும் (ஏ-9 வீதியில்) இடைப்பட்ட வீதி இவ்வாறு குறிக்கப்பட்ட நேரத்துக்கு மட்டும் ஒரு வழிப்பாதை பயணமாக மாற்றப்படும்.

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வசதி கருதி காலை 7 மணி தொடக்கம் 8 மணிவரைக்கும் மற்றும் பிற்பகல் 1 மணி தொடக்கம் 2 மணி வரைக்கும் ஒரு வழிப்பாதையாக மாற்றப்படும் எனத் தெரிவித்தார். (ஜ-17)

தொல்புரத்துக்கு மின்விளக்குகள்

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்ப்பாணம் வலிமேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் ச.ஜெயந்தனின்.கோரிக்கைக்கு அமைவாக தொல்புரம் மத்திய கிராமத்துக்கான மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ்கடந்த14 ஆம் திகதி சித்தன்கேணி மின்சாரசபையின ரால் மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. (க -63)

நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப். 19

'யாழ்ப்பாணப் பொது நூலகம் அன்றும் இன்றும்' நூல் வெளியீடு எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி.பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட் கலந்துகொள்ளவுள்ளார். (ஜ)

அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகக் கூட்டம்

கொடிகாமம், பெப் 19

சாவகச்சேரி பிரதேச சபையின் இந்த வருட சபை நிதிஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக மக்களிடம் கருத்து கேட்கும் கூட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.

சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் பிரதேச சபையின் உப அலுவலக பிரிவுகளில் இந்தக் கூட்டங்களை நடத்தி வருகின்றார். அண்மையில் மிருசுவில் உப அலுவலக பிரிவுக்குட்பட்ட 6 கிராம மட்ட அலுவலர்களுக்கும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் கரம்பகம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஜே/329 கிராம அலுவலர் பிரிவில் 9 வீதிகளும், ஜே/335 மிருசுவில் வடக்கில் 8 வீதிகளும், மிருசுவில் தெற்கு ஜே/336 மிருசுவில் தெற்கில் 6 வீதிகளும், ஜே/330 கரம்பகம் பிரிவில் 11 வீதிகளும், ஜே/333 எழுதுமட்டுவாழ் தெற்கில் 17 வீதிகளும், ஜே/334 எழுதுமட்டுவாழ் வடக்கில் 12 வீதிகளும் இனங்காணப்பட்டன. (ஜ-159)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.19

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் 'வெனிசுவெலா ஜனநாயத்துக்கான கற்றல் களம்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

க. தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் கருத்துரைகளை க. வேல்தஞ்சன் . ச.தனுஜன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். கருத்துரைகளைத்தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அறிவித்துள்ளனர். (க)

காலணிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், பெப்.19

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்குழுவால் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. மெய்கண்டான் பாடசாலை அதிபர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, இளவாலை மெய்கண்டான் பாடசாலையில் கற்றுவரும் குடும்ப பொருளாதாரத்தில் நலிவான மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலைக் காலணிகள் வழங்கப்பட்டன. (எ)

தீர்வு குறித்து உரிய முடிவெடுத்து இராஜதந்திரிகளுடன் பேசுங்கள்

கூட்டமைப்புக்கு ஈ.பி.ஆர்.எல்.எப் ஆலோசனை

யாழ்ப்பாணம், பெப். 19

தமிழ் மக்களின் இனப்படுகொலை மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் சார்பில் தீர்க்கமான முடிவெடுத்து, அதனை இராஜதந்திரிகளுடன் பேசி அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுக்க முடியும். தற்போது கூட காலம்கடந்து போகவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்த செயற்பாட்டை முன்னெடுக்க முடியும் என்று ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசு தெரிவிக்கும் கருத்துக்கள் தொடர்பில் அவரது வீட்டில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களால் தெரிவு செய்யப்பட்டதென்று தமிழ் தேசிய கூட்டமைப்பு மாத்திரமே உள்ளது. ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன்தான் பல்வேறு இராஜதந்திரிகளும் பேச்சு நடத்துகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்களையே இராஜதந்திரிகளும் கவனத்தில் எடுக்கின்றார்கள்.

புலம்பெயர் அமைப்புக்கள், இலங்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அப்பால் இருக்கக்கூடிய கட்சிகளோ, முன்னாள் முதலமைச்சர் தலைமையிலான கட்சியோ, எங்களுடைய கட்சியோ, வேறு எந்தக் கட்சியாகவும் இருக்கலாம். இன்னும் இரண்டு வருடங்கள் அவகாசத்தைக் கொடுக்கக்கூடாது என்றுதான் சொல்கின்றார்கள். ஆனால், 2 வருடங்கள் கால அவகாசம் கொடுக்கும் நிலைதான் காணப்படுகிறது. இந்த அரசைப் பாதுகாக்க வேண்டுமென்றே பன்னாடுகளும் இருக்கின்றன. மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஏனையோரையும் ஒன்றிணைத்து, தெளிவான முடிவெடுத்து, அந்த முடிவை இராஜதந்திரிகளுக்கு அறிவித்தால், அந்த இராஜதந்திரிகளுக்கு மாற்று வழி இல்லாமல் போகும்.

ஆனால், அதனை இவர்கள் செய்யவில்லை. தற்போது, இராஜதந்திரிகளுக்கு இரண்டு மாற்றுவழிகள் உள்ளன. ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்கின்ற விடயம் மற்றையது ஏனையோர் சொல்கின்ற விடயம்.

ஆகவே, மக்களால் தெரிவு செய்யப்பட்ட 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனையோரையும் இணைத்து ஒரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்து, அந்த கலந்துரையாடலில் ஒரு தீர்மானத்தை எடுத்து, இதனைத்தான் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்று கனடாவுக்கும் பிரிட்டனுக்கும் ஏனைய நாடுகளுக்கும் தெரிவித்து, இதனை எவ்வாறு கொண்டு செல்வதென்ற விடயங்களைச் செய்திருந்தால், இராஜதந்திரிகள் மட்டத்தில் வேறு சிந்தனைகள் வந்திருக்கும்.

தற்போதுகூட காலம்கடந்து போகவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனைச் செய்ய முடியும். இரா.சம்பந்தன் அதனைச்செய்ய முடியும். அவ்வாறு செய்தால், ஒரு படி முன்னோக்கிச் செல்வதற்கான வழி பிறக்கும் என்று நம்புகின்றேன் - என்றார். (த-106)

இராணுவம் வசமுள்ள காணிகளை விடுவிக்க ரணில் பணிப்புரை!

சி.சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, பெப்.19

தொடர்ந்தும் படையினர் நிலைகொண்டுள்ள புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவ மனைக் காணி தொடர்பில் ஆராய்ந்து அதனை விடுவிக்குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது செயலரைப் பணித்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு அண்மித்த மக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்குமாறு கோரி காணிகளின் உரிமையாளர்கள் 2017ஆம் ஆண்டு மாசி மாதம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தக் காணிகள் விடுவிக்கப்படாததால் மக்கள் தொடர்ந்தும் போராடும் நிலை ஏற்பட்டது. உணவு ஒறுப்பு, பிரதேச செயலகம் முற்றுகை என்று பல வழிகளிலும் மக்கள் போராடியிருந்தனர். காணிகளை விடுவிப்பதற்கு கால அவகாசம் கோரப்பட்டது.

நீண்ட காலத்தின் பின்னர் அந்தக் காணிகளில் ஒரு தொகுதிக் காணிகளை படையினர் விடுவித்தனர். மிகுதிக் காணிகளையும் விடுவிக்குமாறு மக்கள் கோரினர்.

போராட்டம் தொடர்ந்தது. அந்தக் காணிகளையும் விடுவிப்பதாக காணிகளில் நிலை கொண்டிருந்த 62 ஆவது படைப் பிரிவின் இரண்டாவது படை அதிகாரி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனுக்கு கடிதம் ஒன்றை வழங்கி இருந்தார்.

ஆனால் இரண்டு ஆண்டுகள் ஆகியும் வழக்கம்போல்காணிகள் விடுவிக்கப்படவில்லை. படையினர் தொடர்ந்தும் அங்கு நிலைகொண்டுள்ளார்கள். அந்தக் காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் பலமுறை கேட்டிருந்தனர்.

அதன் படி கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவுக்கு சென்றிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த விடயம் தொடர்பில் தெரிவித்தார். காணிகளை விடுவிப்பதாக படை அதிகாரி நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கிய கடிதத்தையும் அவர் ரணிலிடம் வழங்கியிருந்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது காணிகளை விடுவிப்பதாக படைத் தரப்பின் அதிகாரியால் வழங்கப்பட்ட கடிதத்தை தலைமை அமைச்சரிடம் கொடுத்தேன்.

காணி விடுவிப்புத் தொடர்பில் பேசினேன். அவர் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு தனது செயலரிடம் கொடுத்தார். அந்தப் பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்துகாணிகளை விடுவிக்குமாறு அவர் பணித்திருந்தார் என்று அவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஹ-21,ரி3)



ஆபத்திலிருந்து தப்பியது சிறிலங்கன் வானூர்தி

சென்னை வானூர்தி நிலையத்தில் சிறிலங்கன் வானூர்தி ஒன்று, தரையிறங்கும் போது இடம்பெறவிருந்த ஆபத்திலிருந்து அதிஷ்டவசமாகத் தப்பியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

அந்த வானூர்தி தரையிறங்கும்போது அதன் ரயர் வெடித்துள்ளதால் விபத்து இடம் பெறவிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. யு.எல். 121 என்ற வானூர்திக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து பயணித்த அந்த வானூர்தியில் 142 பயணிகள் பயணித்துள்ளனர் என்றுதெரிவிக்கப்பட்டது. (த)

அரசதலைவர் செயலக பணியாளர் போதைப்பொருளோடு கைதானார்

கொழும்பு, பெப். 19

அரசதலைவர் செயலகப் பணியாளர் ஒருவர் போதைப் பொருளுடன் கைது செய்யப் பட்டுள்ளார் என்று அரலகங்க வில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரசதலைவர் செயலகத்தில் கடமையாற்றி வரும் சாரதி ஒருவரும் மற்றொருவருமே போதைப்பொருளுடன் சில நாள்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

9.20 கிராம் எடையுடைய போதைப்பொருள் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது. அரகங்கவில பகுதியைச் சேர்ந்தவர்களே கைதாகியுள்ளனர்.

மற்றைய நபர் கொழும்பில் முச்சக்கரவண்டிச் சாரதியாக்கடமையாற்றுபவர் என்று ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவருகிறது. அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப் படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

போர்க் காலத்தில் குடியேறிய மக்களுக்குச் சலுகை உண்டு

கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 19

போர்க் காலத்தில் குடியேறிய மக்களுக்கு சலுகைகள் வழங்கப்படும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வன பரிபாலனத் திணைக்களக் காணி தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கும் அரச தலைவர் செயலணி சம்பந்தமான கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசதலைவர் சிறிசேனவின் ஆலோசனையின் பேரில், கிழக்கு மாகாணத்தில் மக்களுக்குத் தேவையான காணிகளை, வனப் பரிபாலனத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் ஆகியன அரசிதழ் அறிவித்தல் மூலமாகக் கையகப்படுத்தி வைத்திருக்கின்றன.

அந்தப் பிரதேச மக்கள், கால்நடைகள் இறப்பு, இருப்பிடப் பிரச்சினை, மேய்ச்சல் தரைப் பிரச்சினை, மீள்குடியேற்றப் பிரச்சினை, விவசாயத்துக்கான காணிகள் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

இவைகள் தொடர்பில் உடனடியாகப் பிரதேச செயலக மட்டத்தில் அறிக்கைகளைப் பெற்று, மாவட்டச் செயலகத்தின் சிபார்சுடன் அரசதலைவரால் நியமிக்கப்பட்ட தேசிய செயலணிக்குச் சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

போர்க் காலங்களில் குடியேறிய மக்களுக்குச் சலுகை காட்டப்படும். அவர்களுக்கான காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

அதற்குப் பின்னர்தான் ஏனைய தேவைகளுக்கு காணிகளைப் பயன்படுத்தும் வகையில் தீர்மானங்கள்மேற்கொள்ளப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார் என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (த)

உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்டுங்கள்

சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

இராணுவம் குற்றம் புரிந்திருக்கின்றது, தமது அரசு கொடுமை இழைத்துள்ளது என்பதனை மறைமுகமாக ஏற்றுக்கொண்டாலும் கூட, அதை நாங்கள் மறப்பதானால், அரசு உண்மையைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்ட வேண்டும். அதன் பின்னர் தீர்வு என்ன என்பது பற்றித் தமிழர்கள் முடிவு எடுக்க முடியுமே தவிர, குற்றங்களைப் புரிந்துவிட்டு, தீர்வை தாமே சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

3 நாள்கள் பயணம்மேற்கொண்டு வடக்குக்கு வந்திருந்த தலைமைஅமைச்சர் விக்கிரமசிங்க, கிளிநொச்சியில் உரையாற்றும்போது, போர்க்குற்ற விசாரணைகள் வேண்டாம். மறப்போம், மன்னிப்போம் என்பது உள்ளிட்ட விடயங்களைக் கூறியிருந்தார்.

அது தொடர்பில் சிறிதரன் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு எந்த மக்கள் படுகொலை செய்யப்பட்டார்களோ, அந்த மக்களின் மண்ணில் இருந்து புதுவிதமான கருத்தை தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தலைமைஅமைச்சர் தலைமையில் கூட்டம் நடைபெற்றபோது, அவரின் உரையை குறுக்கறுத்து அநாகரிகமாகப் பேச முடியாத சூழல் இருந்தது. ஏனெனில், தலைமை அமைச்சரின் தலைமையில் கூட்டம் நடைபெறுகின்ற பொழுது, நாடாளுமன்றம்போன்றோ, விவாத இடம் போன்றோ கருத்துச் சொல்லும் இடம் அங்கு தரப்படவில்லை.

இறுதிப்போரில்ஒருலட்சத்து 46 ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். படுகொலை செய்யப்பட்டும் உள்ளனர். பல குழந்தைகள் கஞ்சிகூட இல்லாமல் பட்டினியால் கொல்லப்பட்டுள்ளன. 4 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் முள்ளிவாய்க்கால் வரை சென்றபோது, 75 ஆயிரம் பேர்தான் இருந்தனர் என்று கூறி அரசு பொருளாதாரத் தடைகளை விதித்து, உணவுகளை அனுப்பாது, பட்டினி போட்டு, இதே இலங்கை அரசு கொலை செய்தபோது, கருத்துக்களை வெளியிடாத விக்கிரமசிங்கவின் கருத்து, 'இன்னும் உங்களை அழிப்போம்' என்கிற எண்ணக் கருவுடன் தென்படுகின்றது.

கணவன்மாரை, பிள்ளைகளை, இராணுவத்தினரின் கையில் கொடுத்த பெண்கள் பலர் கண்கண்ட சாட்சியாக இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் இல்லை என்பதுபோன்று விசாரணை செய்ய முடியாதென்பது போன்று கருத்துக்களை முன்வைப்பது மிகப் பாரதூரமானது. அதனை எந்தக் காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜெனிவா அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், பன்னாடுகளின் மேற்பார்வையுடன் கூடிய உள்ளக விசாரணையை முன்னெடுப்பதாக உறுதியளித்ததன்படி தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுத்தல், உண்மையைக் கண்டறிந்ததன் பின்னர், முதற்படி அவர்கள் முன்னோக்கி நகர வேண்டும்.

'மறப்போம் மன்னிப்போம்' என்று அவர் சொன்னதன் உள் அர்த்தம், இராணுவம் குற்றம் புரிந்திருக்கின்றது, தமது அரசு கொடுமை இழைத்துள்ளது என்பதனை மறைமுகமாக ஏற்றுக்கொண்டாலும்கூட, அதை நாங்கள் மறப்பதானால், அரசு உண்மையைக்கண்டறிந்து, நீதியை நிலைநாட்ட வேண்டும். அதற்குப்பின்னரே, என்ன தீர்ப்புச் சொல்வது என்று தமிழ் மக்கள் சிந்திக்க முடியும்.

பாதுகாப்பு வலயம் என்று சொல்லப்பட்ட வலயத்துக்குள் மக்கள் வரவழைக்கப்பட்டு, கொத்தணிக் குண்டுகளையும், பொஸ்பரஸ் குண்டுகளையும் வீசி அந்த மக்கள் மீது பெரும் இனஅழிப்பு நடத்தப்பட்டதை அரசு ஒத்துக்கொள்ள வேண்டும். அதன்பின்னர், அதற்கான உண்மையைக் கண்டறிவதற்கும், பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை அதை எவ்வாறு கையாள்வது என்பது பற்றித் தமிழர்கள் தான் முடிவை எடுக்க வேண்டும் - என்றார்.

யும் சாட்சியங்களையும் பெற்று அதன் பின்னர், அதற்கான தீர்வு என்ன என்பது பற்றிப் பார்க்கலாம். எல்லாவற்றையும் மூடி மறைத்து, சிங்களக் குடியேற்றங்களையும், பௌத்த சின்னங்களையும் அமைத்துக்கொண்டு, எல்லாவற்றையும் மறப்போம் மன்னிப்போம் என்று சொல்லும் விடயங்கள் எங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் அல்ல. நாடாளுமன்றத்திலும் சரி, இனி வருகின்ற இடங்களிலும் சரி, எமது கருத்துக்களைச் சரியாகத் தெரிவிப்போம்.

மிக முக்கியமாகத் தமிழர்கள்மீது இனப்படுகொலை செய்யப்பட்டதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு என்ன தீர்வு?

> *கணவன்மாரை, பிள்ளைகளை, இராணுவத்தினரின் கையில் கொடுத்த பெண்கள் பலர் கண்கண்ட சாட்சியாக இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் இல்லை என்பதுபோன்று விசாரணை செய்ய முடியாதென்பது போன்று கருத்துக்களை முன்வைப்பது மிகப் பாரதூரமானது. அதனை எந்தக் காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.*

(தொ-106)

சத்தியமூர்த்தியினது நினைவேந்தல் சுவிஸில்

கொழும்பு, பெப். 19

இலங்கையில் போர்க் காலத்தில் ஊடகப் பணியின்போது உயிர் நீத்த நாட்டுப் பற்றாளர் சத்தியமூர்த்தியின் பத்தாவது நினைவேந்தல் சுவிஸ் சப்ஹவுசன் நகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

சிவராம் ஞாபகார்த்த மன்றம் மற்றும் சுவிஸ் விசன் ஆதரவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மூத்த ஊடகவியலாளர்களான ஞா. குகநாதன், கனகரவி, க. அமரதாஸ், கிருஸ்ணா அம்பலவாணர் உள்ளிட்ட பலர் உரை நிகழ்த்தினர்.

நினைவு நாளை ஒட்டி 'நினைவுடன் பேசுதல்' என்ற பெயரிலான நினைவு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

அதன்முதற் பிரதியை 'விடுதலைப் புலிகள்' ஏட்டின் ஆசிரியர் ரவி வழங்கி வைக்க திருமதி பிரேமினி அற்புதராஜா பெற்றுக் கொண்டார். நூல் தொடர்பிலான உரையையும் வழங்கினார். ஊடகவியலாளர் சண் தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சத்தியமூர்த்தியின் நண்பர்களான இ. பால முருகன், சு. இராஜன் ஆகியோரும் உரையாற்றினர். (த)

ஒரு பில்லியன் டொலர் திரட்டுவதற்கு திட்டம்

கொழும்பு, பெப். 19

அமைச்சரவையில் அனுமதி பெறப்பட்டதை அடுத்து, சீனாவின் பான்டா, ஜப்பானின் சாமுராய் பிணை முறிகளின் மூலம், ஒரு பில்லியன் டொலர் நிதியைத் திரட்டும் நடவடிக்கையில் இலங்கை மத்திய வங்கி மற்றும் திறைசேரி அதிகாரிகள் இறங்கியுள்ளனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தளர்த்தும் நோக்கில், இந்த நிதியைத் திரட்டுவதற்கு, ஜப்பான் மற்றும் சீனாவுக்கு, திறைசேரி, மத்திய வங்கி அதிகாரிகள் விரைவில் பயணம் மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பான்டா, சாமுராய் பிணை முறிகளின் மூலம் தலா 500 மில்லியன் டொலர் நிதியைத் திரட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக, திறைசேரி மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். டொலர் நெருக்கடியைச் சமாளிக்க யூரோ பிணை முறிமூலம்நிதிதிரட்டவும்திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த)

யானை கொன்ற பெண்ணை பார்த்த பொலிஸ் அலுவலர் சாவு

கொழும்பு, பெப். 19

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள திகிலிவெட்டை எனும் கிராமத்தில் காட்டு யானை தாக்கி உயிரிழந்த இளம் பெண்ணின் சடலத்தை மீட்கச்சென்ற பொலிஸ் அலுவலர் சடலத்தைப் பார்த்து அதிர்ச்சியில் உயிரிழந்துள்ளார் என்று ஏறாவூர்ப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள திகிலிவெட்டை எனும் கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் இரண்டு பிள்ளைகளின் தாயான முத்துலிங்கம் நிரஞ்சலா (வயது 31) சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சடலத்தை மீட்க பொலிஸ் அலுவலர்கள் 4 பேர் அங்கு சென்றுள்ளனர்.

சடலத்தைப் பார்வையிட்ட நிதிய துரைலாகே லக்ஸ்மன் குமார ராஜபக்ச (வயது 37) என்பவரே மயங்கி வீழ்ந்தார்.

சக அலுவலர்கள் அவரை மீட்டு அருகிலுள்ள சந்திவெளி பிரதேச மருத்துவமனையில் சேர்த்தபோது அவர் உயிரிழந்துள்ளமை தெரியவந்தது.

இருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தினர். (த)

மருத்துவமனைகளை கணினி மயமாக்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 19

அனைத்து அரச மருத்துவமனைகளையும் கணனி மயப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது வரையில் 100 மருத்துவமனைகள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் தகவல் தொழில் நுட்பப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி இந்திக ஜாகொட தெரிவித்துள்ளார். (த)

வாகன இறக்குமதி விற்பனை பெரும் வீழ்ச்சி

கொழும்பு, பெப். 19

வாகன இறக்குமதி மற்றும் விற்பனை நடவடிக்கைதுரிதமாகவீழ்ச்சியடைந்துள்ளன என்று இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

வாகன இறக்குமதி 90 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. வாகன விற்பனை 70 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்று சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதி தொடர்பில், அரசு பல சந்தர்ப்பங்களில் விதிக்கப்பட்ட கட்டுபாடுகளே இந்த வீழ்ச்சிக்குக் காரணமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

புத்தளத்தில் குப்பை வேண்டாம்: கண்டித்து வீதியில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 19

புத்தளம் அருவக்காட்டில் குப்பை கொட்டும் திட்டத்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் முந்தல் நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

அங்கு குப்பை கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்மைய நாள்களில் பரவலாக புத்தளம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வந்தன.

இந்தநிலையில் புத்தளம் - கொழும்பு முதன்மை வீதியின் முந்தல் நகரில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

புத்தளம்-கொழும்பு முதன்மை வீதியோரங்களில் உள்ள கத்தோலிக்க ஆலயங்களில் இன்று இடம்பெற்ற சிறப்பு பூசை வழிபாடுகளின் பின்னர் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-222)

ராஜபக்ச முயற்சிக்கு மைத்திரிபால ஆதரவு

சிவில் அமைப்புகளின் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 19

அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவின் திட்டத்துக்கு, அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஒத்துழைத்து வருகிறார் என்று சிவில் சமூக அமைப்புகள் குற்றம்சாட்டியுள்ளன.

2015 இல் அரசதலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காகப், பாடுபட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியமான புரவெசி பலயவின், அமைப்பாளர் காமினி வியன்கொட இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2010 செப்ரெம்பரில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட 18 ஆவது திருத்தச் சட்டத்தை, 2015 ஏப்ரல் மாதம், நாடாளுமன்றத்தில் 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இல்லாமல் ஒழிக்கப்பட்டது. 19 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்பட்டது. அதனை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர சிறிசேன இடமளிக்கக் கூடாது.

தற்போதைய நிலையில் 18 ஆவது திருத்தச்சட்டத்தை மீண்டும் கொண்டு வரும் சிறிசேன ராஜபக்சவின் முயற்சிகளை முறியடிப்பதே தமது நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

சுயேச்சை வேட்பாளரை களமிறக்க பசில் திட்டம்

கொழும்பு, பெப். 19

அரசதலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை நிறுத்த மகிந்த ராஜபக்ச முடிவு செய்தால், பொதுமக்கள் முன்னணி சார்பில் சுயேச்சை வேட்பாளர் ஒருவரை நிறுத்த பசில் ராஜபக்ச திட்டமிட்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசதலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெறுவதற்கு வலுக்கிடையாது என்றும் அவரை அரசதலைவர் வேட்பாளராக நிறுத்தினால் தோல்வியடைவார் என்றும் பசில் ராஜபக்ச கருதுகிறார். தோல்வியடைந்தால் நாடாளுமன்றத் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது பசில் ராஜபக்சவின் கணிப்பாக உள்ளது.

எனினும், கோத்தபாய ராஜபக்சவுக்கு சிறுபான்மையின மக்கள் ஆதரவு அளிக்கமாட்டார்கள் என்பதால், மைத்திரிபால சிறிசேனவை போட்டியில் நிறுத்த மகிந்த ராஜபக்ச விரும்புகிறார் என்று உள்ளக வட்டாரங்கள் தெரிவித்தன.

அவ்வாறான நிலை ஏற்பட்டால், முன்னணி சுயேச்சை வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் என்றும் அதற்கான ஏற்பாடுகளைப் பசில் ராஜபக்சவுக்கு நெருக்கமானவர்கள் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அறியப்படுகிறது.

அரசதலைவர் தேர்தலில் வெற்றி பெறுவதைவிடப் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதிலேயே பொதுமக்கள் முன்னணி கூடுதல் கவனம் செலுத்துகிறது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (த)

கடற்படை மூத்த அதிகாரி ஒருவர் விரைவில் கைதாகும் சாத்தியம்!

இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவின் நெருங்கிய உதவியாளராக இருந்த கடற்படை அதிகாரி ஒருவரைக் கைது செய்யும் முயற்சியில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இறங்கியுள்ளனர்.

கொழும்பில் 11 பேரைக் கடத்திக் கப்பம் கோரி, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்திலேயே அவரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நெருங்கியுள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி விசாரணைக்காக அவரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அழைத்திருந்தனர்.

அவரைத் தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காக பெப்ரவரி 25ஆம் திகதி வரை, குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலைப்படுத்த முடியாது என்று கடற்படையின் சார்பில் பிரதி சொலிசிற்றர் ஜெனரல் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்துள்ளார்.

மூத்த கடற்படை அதிகாரியின் பாதுகாப்புடன், பெப்ரவரி 26ஆம் நாள் சந்தேக நபரான புலனாய்வு அதிகாரியை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முன்னிலைப் படுத்துமாறு, கடற்படையிடம் கேட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் தான் கைது செய்யப்படுவதைத் தடுக்கக் கோரி, அட்மிரல் கரன்ன கொட அடிப்படை உரிமைகள் மனுவை தாக்கல் செய்யத் தயாராகி வருகிறார் என்று சட்டவாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

11 பேர் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கரன்னகொடவுக்கு தொடர்பு இருப்பதற்கான சாத்தியங்கள் குறித்த முக்கியமான சான்று அறிக்கையை கோட்டை நீதிவான் மன்றில் சமர்ப்பித்திருந்த போதும், அவரைக் கைது செய்வதற்கு இன்னமும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அனுமதி கோரவில்லை என்று மூத்த பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். இந்தக் கொலைகள் தொடர்பாக தனக்கு முன்கூட்டியே தெரிந்திருக்கவில்லை என்று தம் மீதான குற்றச்சாட்டுகளை அட்மிரல் கரன்னகொட கடந்த ஆண்டு கூறியிருந்தார்.

அவரது முன்னாள் கடற்படைச் செயலர் றியர் அட்மிரல் ஷேமல் பெர்னான்டோ, உள்ளிட்ட பல சாட்சிகள் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவில் சாட்சியம் அளித்த பின்னரே அவர் இதனை தெரிவித்திருந்தார்.

2018 செப்ரெம்பர் 17ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த அறிக்கையில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இலங்கைக் கடற்படையின் கிழக்குப் பிராந்திய தலைமையகத்தில் உள்ள கன் சைட் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியும் என்று றியர் அட்மிரல் ஷேமல் பெர்னான்டோ, ஒப்புக் கொண்டுள்ளார் என்று கூறப்பட்டிருந்தது. அவர்களை விடுவிக்குமாறு அமைச்சர்பீலிக்ஸ் பெரேரா, அட்மிரல் கரன்ன கொடவை அணுகிய பின்னர், கடத்தப்பட்ட இளைஞர்களின் பெற்றோருடன் தொடர்பாளராகதான் இருந்ததையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனினும், தனக்கு கடத்தல் மற்றும் கொலைகள் தொடர்பாக தான் உடனடியாக அறிந்திருக்கவில்லை என்று அட்மிரல் கரன்ன கொட கூறியிருந்தார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது. (த)

நாடாளுமன்றில் வன்முறை: அறிக்கை 20ஆம் திகதி

கொழும்பு, பெப். 19

நாடாளுமன்றில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை எதிர்வரும் 20ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகர் கருஜயசூரியவுடன் கலந்துரையாடியுள்ளேன் என்றும் அவர் கூறியுள்ளார். சபையில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பிரதி சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 15, 16 ஆம் திகதிகளில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு பிரதி சபாநாயகர் ஆனந்த குமார சிறியின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. (த)

வெளிப்படைத் தன்மையுடன் இலங்கை இருக்க வேண்டும்

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 19

அனைத்து நாடுகளுடனும் இலங்கை உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டாலும் அது வெளிப்படைத் தன்மையுள்ளதாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான பதில் முதன்மைப் பிரதி உதவிச் செயலர் தோமஸ் வஜ்டா தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம், கொழும்பில் பாத்பைன்டர் அமைப்பின் ஏற்பாட்டில் நடந்த "இந்தோ-பசுபிக் பற்றிய அமெரிக்க பார்வை மற்றும் இலங்கையின் வகிபாகம்" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் இறைமையை நாங்கள் மதிக்கிறோம். ஏனைய நாடுகளே இந்தோ - பசுபிக்கில் எமது செயற்பாடுகளை வழிநடத்துகின்றன. அமெரிக்காவைப் போன்று, பிராந்தியத்திலும், உலகம் முழுவதிலும், எல்லா நாடுகளுடனும் இலங்கை பரஸ்பர நலன்களை அளிக்கக் கூடிய ஒத்துழைப்பைக் கட்டியெழுப்பும் என்று நாங்கள் முழுமையாக எதிர்பார்க்கிறோம்.

இருப்பினும், அத்தகைய உறவுகள் அனைத்தும் வெளிப்படையானதாகவும், உண்மையானதாகவும், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புகளுக்கும் நீண்டகாலம் பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும். 2017இல் இந்தோபசுபிக்குடனான அமெரிக்காவின் இருதரப்பு வணிகம் 1.8 ட்ரில்லியன் டொலராக இருந்தது. அதில் இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் நேரடி முதலீடு ஒரு பில்லியன் டொலராகும். இது கடந்த பத்தாண்டை விட இரண்டு மடங்கு அதிகம். இது இந்தப் பிராந்தியத்தின் மிகப் பெரிய வெளிநாட்டு முதலீடு ஆகும்.

பொருளாதார ஒத்துழைப்புகளையும், முதலீடுகளையும் இருதரப்பு வணிகத்தையும், இந்தோ - பசுபிக்கில் விரிவுபடுத்துவதன் மூலம், குறிப்பாக இலங்கை அமெரிக்கா இடையில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். (த)

தொடர் பதற்றம்

புல்வாமாவில் துப்பாக்கி 4 இராணுவச்சிப்பாய்க

போர் ஒத்திகையில் இந்திய வான்படை

புல்வாமா.பெப்.19

இந்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள புல்வாமா மாவட்டத்தின் பிங்க்லானா பகுதியில் நேற்றைய தினம் துப்பாக்கிச் சூடு மேற்கொள் ளப்பட்டது. இதில் இராணுவச் சிப் பாய்கள் நால்வர் கொல்லப்பட்ட னர். இளைஞர் ஒருவர் காயம டைந்தார். தொடர்ந்து நேற்று மதி யம்வரைஅந்தப்பகுதியில்துப்பாக் கிச் சண்டை நடந்தது. இந்தியத் துணைக் காவல் படையினர் மற் றும் இந்திய இராணுவத்தின் ஏனைய பிரிவினரும் இணைந்து இந்தப்பகுதியில்தாக்குதல்நடவடிக் கையில் ஈடுபட்டனர்.

கடந்த வியாழக்கிழமையன்று குறித்த பகுதியில் தற்கொலைதாரி மேற்கொண்டதாக்குதலில்40க்கு மேற்பட்ட இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டிருந்தனர். அதைய டுத்துப்பிங்க்லானாபகுதியில்ஆயு ததாரிகள் தங்கியிருந்ததாக இரா ணுவத்துக்குத்தகவல்கிடைத்தது. அந்தப்பகுதியைஇராணுவம்சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய போதேஆயுததாரிகள்தாக்குதலில் ஈடுபட்டனர். இதனால்ஜம்மு காஷ் மீர் மாநிலத்தில் பதற்றம் நிலவு கி றது.

இந்த நிலையில் வான் வழித் தாக் குதலுக்கு இந்தியப் படை தயாராகி வருவதாக இந்திய ஊடகங்கள்

சிரியாவிலிருந்து தப்பிச் சென்று ஈராக்குக்குள் நுழையும் ஐ.எஸ்.

வோஷிங்டன்.பெப்.19

ஆயிரத்துக்கும்அதிகமானஐ.எஸ்.ஐ.எஸ்.ஆயததாரிகள்சிரியாவிலிருந்து தப்பித்துமேற்குஈராக்பகுதியில்தஞ்சம்புகுந்துள்ளனர்என்றுஅமெரிக்க இராணுவ அதிகாரிகூறினார். அவர்களிடம்கிட்டத்தட்ட200மில்லியன் அமெரிக்க டொலர் பணம் இருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறி னார்.

சிரியா, ஈராக் ஆகிய இரண்டுநாடுகளிலும் ஏறக்குறைய 20ஆயிரத்திலி ருந்து 30ஆயிரம் வரையான ஐ.எஸ். ஆயுததாரிகள் இருக்கக்கூடும் என்று தெரிகிறது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஐ.எஸ். அமைப்புத் தோற்க டிக்கப்பட்டதால் தமது இராணுவத்தைத் திரும்பப் பெறுகிறோம் என்று கூறியிருந்தார். ஆனால்இதைஅமெரிக்கப்பிரதிநிதிகளும்ஊடகங்களும் தவறான தகவல் என நிராகரித்துவிட்டன.

இதைத் தொடர்ந்து அமெரிக்கா தனது ஐ.எஸ்.க்கு எதிரான தாக்குதலை அதிகப்படுத்தியது. சிரியாவிலிருந்து இராணுவத்தைத் திரும்பப் பெறுவ தற்கு முன் ஐ.எஸ். அமைப்பை முழுமையாக அழிக்க முயற்சிப்பதால், அந்தஅமைப்புக்குஎதிரானதாக்குதலின்தீவிரத்தைஇன்னும்அமெரிக்க இராணுவம் அதிகப்படுத்தியுள்ளது.

அமெரிக்கப் படைகளின் கடும் தாக்குதல்கள் காரணமாகவே சிரியா விலிருக்கின்றஐ.எஸ். ஆயுததாரிகள்ஈராக்குக்குள்தப்பிச்செல்கின்றனர் என்றுபன்னாட்டுஅரசியலவதானிகள் கருத்துரைக்கின்றனர்.

ஆயுததாரிகள் – இராணுவம் மோதல் நைஜீரியாவில் 9 பேர் சாவு

லாகோஸ்.பெப்.19

நைஜீரியாவில் ஆயுத அமைப்பினருக்கும் அந்தநாட்டுஇராணுவத்தினருக்கும்இடையே ஏற்பட்ட போரில் 9 பேர் சாவடைந்தனர். நைஜீரியாவின் வடகிழக்கிலுள்ள பனி யாட் என்கிற பகுதியில் உள்ள இராணுவ த் தளத் தின் மீது போகோ ஹராம் என்கிற ஆயுத அமைப்பினர் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தினர்.

இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தினர். இருதரப்புக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 5 ஆயுததாரிகளும் 4 இராணுவச் சிப்பாய்க ளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் அரசை எதிர்த்து 2009ஆம் ஆண்டளவில் உருவானது 'போகோஹராம்' என்கிற ஆயுத அமைப்பு. இந்த அமைப்பின் தற்கொலைப் படையினர் நடத்திய தாக்குதல்களால் இதுவரை 20ஆயிரம் பேர் சாவடைந்துள்ள னர்.

2மில்லியன்மக்கள்இடம்பெயர்ந்துள்ளனர். இந்த அமைப்பு ஆபிரிக்காவின் வடக்கு மற்றும் மத்திய பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.



க்கிச் சூடு
கள் சாவு

இரா
த்தது.
சுற்றி
த்திய
லில்
காஷ்
வு கி

தாக்
ாராகி
ங்கள்

செய்தி வெளியிட்டன. 140 போர் வானூர்திகள், உலங்குவானூர்தி கள் மற்றும் ஏவுகணைகளைப் பயன்படுத்தி இந்திய வான்படை இதற்காகஇரவுபகலாகமிகப்பெரிய போர்ஒத்திகைஒன்றைநடத்தியதா கத் தெரிவிக்கப்படுகிறது. ஜம்மு பகுதியில்அமைந்துள்ளமாவட்டங் களின் பெரும்பாலான பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு நடைமுறை யில் இருப்பது குறிப்பிடத்தக்கது.



புல்வாமா தாக்குதல் காரணமாக ஜம்முவில் ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். புல்வாமாத் தாக்குதலுக்கு இந்தியா முழுவதும் பெரும் கண்டனமும், எதிர்ப்பும் கிளம்பியுள்ளது. ஆயுததாரிகளுக்குத் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி மக்கள் போராடுகின்றனர்.

பெண்களைக் கண்காணிப்பதற்கு அலைபேசியில் புதிய செயலி

றியாத்.பெப்.19

பெண்கள் எங்கே செல்கிறார் கள் என்பதைக் கண்காணிப்ப தற்காக அலைபேசிகளில் 'தி ஆப்ஷர்'என்றபுதியசெயலியை சவூதிஅரேபியாஉருவாக்கியுள் ளது. இதற்கு மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரி விக்கின்றன.

இந்தக்கண்டனங்களை மறுக் கின்ற சவூதி. இந்தச் செயலி பெண்கள், வயதானவர்கள்,உடல்இயலாதவர்கள் என்றுபலதரப்பட்டவர்களுக்கும்உதவு வதற்காவே தயாரிக்கப்பட்டது என்று தெரிவிக்கிறது.ஆனால்,விமர்சகர்களோ இந்தச் செயலி மூலம் தங்கள் வீட்டுப் பெண்கள், பெண் பிள்ளைகள் எங்கே செல்கிறார்கள், வருகிறார்கள் என்ப தைச்சவூதிஆண்கள்கண்காணிப்பதற் காகவே உருவாக்கப்பட்டிருக்கிறது என்று குற்றம்சாட்டுகின்றனர்.

இந்தச் செயலி பெண்களுக்கு எதிரான அடக்குமுறையைத்தூண்டுவதால்அப் பிள், கூகுள் ஆகிய நிறுவனங்கள் இதைத் தங்கள் இயங்குதளங்களில் இருந்து நீக்க வேண்டும் என்று அமெ ரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ரான் வைடன் வலியுறுத்துகிறார். பத்திரிகை யாளர் ஜமால் படுகொலையால் விமர்ச னத்துக்குள்ளாகிவரும்சவூதிக்குஇந்தச் செயலி மற்றொரு நெருக்கடியை ஏற்ப டுத்தியிருக்கிறது.

அம்மணமாக நின்று அதிர்ஷ்டம் தேடிய ஜப்பானியர்

டோக்கியோ.பெப்.19

ஜப்பானில் நடந்த பாரம்பரியத் திருவிழா ஒன்றில், ஆயிரக்கணக் கான ஆண்கள் நிர்வாணமான நிலையில் புனிதக் குச்சிகள் என்று கருதப்படும் இரண்டு குச்சிகளைத் தேடும் போட்டியில் ஈடுபட்டனர். ஜப்பானின் ஒகாயாமாவிலுள்ள பிரபல் பெள்த்த ஆலயம் ஒன்றில் இந்தத் திருவிழா நடந்தது. அரைக் கச்சைகளை அணிந்த கிட்டத் தட்ட 10ஆயிரம் வரையான ஆண்கள் இதில் பங்கேற்றனர். ஒரு குறிப்பிட்ட இடத்தில்மறைத்துவைக்கப்பட்டிருக்கும்புனிதக்குச்சிக ளைக் கண்டெடுப்பதே இவர்களுக்கு முன்னுள்ள சாவல். 'சிங்கி' என்றழைக்கப்படும் சுமார் 20சென்ரி மீற்றர் நீளமுள்ள அந்த புனிதக் குச்சிகளை கண்டெடுப்பவர் அந்த ஆண்டின் அதிர்ஷ்ட நபராகக் கருதப்படுகிறார்.

தமிழகத்தில் மேலும் இரண்டு ஹைட்ரோ காபன் திட்டங்கள்!

சமூக ஆர்வலர்கள் அதிர்ச்சி

திருவாரூர்.பெப்.19

காவிரிடெல்டாப்பகுதியைஉள்ளடக்கியஹைட்ரோகாபன் எடுப்பதற்கான3ஆவதுசுற்றுஏலத்தில், தமிழகத்தில்2வட் டாரங்களைப்பன்னாட்டுநிறுவனங்களுக்குவழங்குவதற் கான அறிவிப்பை இந்திய அரசு வெளியிட்டது. இது சமூக ஆர்வலர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அரசு கடந்த 5 மாதங்களில் 3 சுற்று களாக ஹைட்ரோ காபன்எடுப்பதற்கான ஏல அறிவிப்பைச் செய்துள்ளது. அதன் படி,இந்தியாமுழுதும் 55 வட்டாரங்களில் ஹைட்ரோகாபன் எடுப்பதற்கு ஏலம் விடப்பட்டது. இவற் றில் தமிழகத்தின் காவிரிடெல்டாவில்2 ஆழ்கடலற்ற கடல் பகுதிகளுக்கானஉரி மத்தை வேதாந்தா நிறுவன மும், ஒரு தரைப்பகுதிக்கானஉரி மத்தை ஓ.என்.ஜி.சி.நிறுவனமும்பெற்றன.

இந்தஅறிவிப்புவெளியிட்டதில்இருந்தேபல்வேறுஅரசியல் கட்சிகளும், விவசாய சங்கங்களும் திருவாரூர் மாவட்டத் தில் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றன. இதுவரை போராட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறி, 500இக்கும் மேற்பட் டோர் மீது திருவாரூர்ப் பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், 3ஆவதுசுற்றுக்கானஏலஅறிவிப்புகடந்த 11ஆம் திகதி வெளியாகியுள்ளது. இதில், இந்தியா முழுவது மான23வட்டாரங்களில்தமிழகத்தின்காவிரிடெல்டாவை யும் உள்ளடக்கி 2 வட்டாரங்கள் அடங்கியுள்ளதால் பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். காவிரி டெல்டா பகுதிகளில் புதிய துரப்பண பணிகளுக்கு மக்கள்எதிர்ப்புத்தெரிவித்துவருகின்றனர். சமூகஆர்வலர் கள் பலரும் இது குறித்துப் பரவலாக விமர்ச னங்களை வெளியிட்டுள்ளனர்.

பிரசல்ஸில் தங்கியிருக்கும் தெரசா மே தனது கட்சியினருக்கு உருக்கக் கடிதம்

லண்டன்.பெப்.19

பிரெக்ஸிட்' சார்ந்த பேச்சுக்காகப் பெல்ஜியத்தின் தலைநகர் பிரசல்ஸில் தங்கியிருக்கும் பிரிட்ட னின் தலைமை அமைச்சர் தெரசா மே, தனது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்கு உருக்கமான கடிதம் ஒன்றை எழுதியுள் ளார்.

தனிப்பட்டவிருப்பங்களைஒதுக்கிவைத்துவிட்டு 'பிரெக்ஸிட்'நடவடிக்கையைஆதரிக்கவேண்டு மெனஅதில்அவர்வலியுறுத்திஉள்ளார். இதற்கி டையில், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன்வெளியேறுவதில்மக்கள்விருப்பத்தை மீண்டும்அறியஒருகருத்துக்கணிப்புநடத்தப்பட் டது. அதில் 'திடீர்' திருப்பமாக 53 சதவீதம் பேர் ஐரோப்பியஒன்றியத்தில்இருந்துவெளியேறுவ தைத் தாமதப்படுத்த வேண்டும் என வலியுறுத் தினர். இந்தநிலையிலேயே பிரசல்ஸில் இருந்த படி தெரசா மே, தனது கட்சியினருக்குக் கடிதம் எழுதி உள்ளார்.

பின்னணி

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதற்கு முடிவுசெய்தபிரிட்டன்இதுதொடர்பாக2016ஆம் ஆண்டில்பொதுவாக்கெடுப்புநடத்தியது. பெரும் பான்மை மக்கள் அரசின் முடிவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதன்படிஐரோப்பியஒன்றியத் தில் இருந்து பிரிட்டன் முறைப்படி விலகுவதற் கான 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை தெரசா மே முன்னெடுத்தார். ஆனால் அனைத்து தரப்பின ரின் ஆதரவுடன் 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை அவர் செய்து முடிப்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஏனென்றால்பிரெக்ஸிட்டுக்காகஐரோப்பியகூட் டமைப்புடன் தெரசா மே ஏற்படுத்திய ஒப்பந் தத்தை நிராகரித்த பிரிட்டன் நாடாளுமன்றம், ஒப்பந்தம் இல்லாமல் வெளியேறும் முடிவைப் புறக்கணித்தது. இதனால் ஐரோப்பியக் கூட்ட மைப்புடன் புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியாக வேண்டிய நிலையில்தெரசா மேஉள்ளார்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

மக்களின் ஆவேசம் நியாயமானது

இராணுவம் எமது காணிகளை ஆக்கிரமித்து அதிலுள்ள வளங்களைச் சுரண்டிக் கொண்டிருக்க நாங்கள் வீதிகளில் காய்வதைப் பார்த்து நாளை எமது பிள்ளைகள் இன்னொரு பிரபாகரனாக உருவாக வாய்ப்புள்ளது என்று ஆவேசம் கக்கியுள்ளனர் முல்லைத்தீவு மக்கள்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள்கள் பயணமாக வடக்குக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். தனது பயணத்தின் மூன்றாம் நாளான சனிக்கிழமை முல்லைத்தீவுக்கு அவர் சென்றார். முல்லைத்தீவுக்கான அவரின் பயணத்தை எதிர்த்து அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காணி மீட்புக்காகப் போராடும் கேப்பாபிலவு மக்களும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் இந்தப் போராட்டத்தில் பெருமளவில் கலந்து கொண்டிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போதே மேற்படி வசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம் இரண்டும் இன்று தமிழர் தாயகத்தின் பெரும் சோகங்களாக உள்ளன. இவை இரண்டுக்காகவும் அன்றாடம் பல்வேறு போராட்டங்களை தமிழர்கள் எதிர் கொண்டு வருகின்றனர். ஒன்றல்ல இரண்டல்ல சுமார் 10 ஆண்டுகால நீண்ட வரலாற்றைக் கொண்டவை அத்தகைய போராட்டங்கள். இத்தகையதொரு நிலையில் முல்லைத்தீவு மக்கள் வெளிப்படுத்திய இன்னொரு பிரபாகரன் தொடர்பிலான கருத்து உண்மையானது. யாதார்த்தமும் அதுவேதான்.

போர் முடிந்த பின்னர் தமிழ் மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கு இங்கு சில திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதை மறுப்பதற்கு இல்லை. தலைமை அமைச்சரின் அண்மைய சுற்றுப்பயணம்கூட அபிவிருத்தியை மையமாக வைத்தேதான் அமைந்தது. போரால் பாதிக்கப்பட்ட பகுதியொன்றை அல்லது தேசமொன்றை மறுகட்டமைப்புச் செய்வதற்கு அத்தகைய அபிவிருத்திகள் அவசியம். தவிர்க்கமுடியாதவையும் கூட. எனினும் தமிழர்கள் அபிவிருத்தி என்ற ஒன்றை மட்டுமே தமது கோரிக்கையாக முன்வைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலையை வெளிப்படுத்தல், காணி விடுவிப்பு இரண்டும் அவர்களின் மூச்சு. புதிய அரசமைப்பு உருவாக்கல், பௌத்த மயமாக்கலைக் குறைத்தல், இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல் என்பவை தமிழர்களின் ஏனைய பேச்சு.

ஆனால் இவற்றில் எதையும் கொழும்பு இதயசுத்தியுடன் மேற்கொள்ளவில்லை என்பது வெளிப்படையானது. பன்னாட்டுச் சமூகத்துக்கும் தெரிந்தது. மேற்குறிப்பிட்ட விடயங்களை வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்டுவரும் 10 ஆண்டுகாலப் போராட்டங்களை இன்றைய இளம் சந்ததி உற்றுநோக்கிக்கவனித்துக்கொண்டுதான் உள்ளது. மனித வாழ்க்கையில் 10 ஆண்டுகள் என்பது பெரியது. ஆக, தனது வாழ்வின் ஒரு பெரும் பகுதியை போராட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் செலவிட்டுவரும் இன்றைய இளம் சந்ததி, நாளை கொழும்புக்கு எதிராகக் குரல்கொடுக்கவே செய்யும். அகிம்சை வழியிலான கருத்தை கொழும்பு செவிசாய்க்காது என்றால் ஆயுதத்தை கையிலெடுப்பதுதான் சரி என்ற எண்ணம் தோன்றத்தான் செய்யும். கடந்த பத்து ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் போராட்டங்கள்கூட அத்தகைய மனநிலையையே இங்குள்ள பல பிஞ்சுகளின் நெஞ்சில் விதைத்திருக்கும். அதுவே யதார்த்தம். உளவியலும்கூட.

ஆக, இத்தகைய போராட்டங்களை நீண்டுசெல்லவிடாது, மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து, உரியதீர்வை வழங்கி இலங்கையின் குடிமக்கள் என்ற எண்ணவோட்டம் தமிழர்கள் மனங்களிலும் ஆழமாக ஊடுருவ கொழும்பு முன்வரவேண்டும். தவறும்பட்சத்தில், கடந்த ஒரு தசாப்தத்துக்கு முன்னர் முடிவடைந்த போர் இந்தத் தீவு எதிர்கொண்ட இறுதிப்போராக அமையாது. பின்னர் தமிழர்களை மட்டுமல்ல இந்த அழகிய தீவைக் காப்பாற்றுவதும் கடினமே. கொழும்புக்கு இந்தக் கசப்பான உண்மையும் அதன் கனதித் தன்மையும் புரியட்டும்.

தேர்தல் ஆணைக்குழுவின் அகிம்சைக்கான ஆதரவு

ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தை நுணுக்கமாக அமைத்தல்

எஸ். ரத்னஜீவன் எச்.ஹூல்

எமது அரசியலமைப்பின் மூன்றாம் பிரிவு எமது இறைமையை அறிவிக்கின்றது. 'இலங்கைக் குடியரசில் இறைமை மக்களுக்குரியதாகவும் பராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும். இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்.' அரசியல் அமைப்பின் பிரிவு 103(2) எமது வாக்குரிமையின் பயன்பாட்டை மேற்பார்வை செய்வதற்கான சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவொன்றுக்கான ஏற்பாடுகளை விளக்குகின்றது. 'ஆணைக்குழுவின் குறிக்கோளானது சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களையும் மக்கள் தீர்ப்புக்களையும் நடத்துவதற்கானதாகவிருத்தல் வேண்டும்.' அத்துடன் பிரிவு 104ஆ(2) 'அத்தகைய ஏதேனும் தேர்தலை அல்லது மக்கள் தீர்ப்புக்களை நடத்துதல் அல்லது எடுத்தல் தொடர்பான எல்லாச் சட்டங்களையும் வலுவாக்குவதனை உறுதிப்படுத்துதல் ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும்' என்றும் கூறுகின்றது.

மக்களின் வாக்குரிமைக்கு எதிரானது தேர்தல் வன்முறை

மக்களின் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான ஒரு தடையாக தேர்தல் வன்முறை விளங்குகின்றது. சட்ட அமுலாக்கல் பொறிமுறைக்கு இலஞ்சம் வழங்கும் செயற்பாட்டுக்கு அதனுடன் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது, பெரும்பாலும் அனைத்துக் கட்சிகளாலும் செய்யப்பட்ட பல்வேறு மோசடிப் பிரச்சினைகளுக்கு தேர்தல் ஆணைக்குழு முகங்கொடுத்தது. அவற்றில் மிகவும் மோசமான குற்றவாளியாக தமிழ் கால்வருடிகளின் (த.கா) பழமைவாய்ந்த கட்சி விளங்கியது. தான் ஏமாற்று வேலைகளைச் செய்கின்ற போது தேர்தல் ஆணைக்குழு தனக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்ற போது தேர்தல் ஆணைக்குழு பக்கச் சார்பாகச் செயற்படுகின்றது என்ற நிலைப்பாட்டுக்கு த.கா. வருகின்றது. அதாவது தேர்தல் ஆணைக்குழு த.கா.வுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்காமல் இருப்பதே நடுநிலமை என்று கூறுகின்றனர்.

பொலிசார் த.கா.வின் தேர்தல் குற்றங்களுக்கு எதிராக மிக அரிதாகவே வழக்குத் தாக்கல் செய்வதுடன் அவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யும் போதுகூட குற்றச்சாட்டுக்களை குறைத்துக் கூறுகின்றனர். அவர்கள் தேர்தல் ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களைப் பதிவு செய்யாமல் ஒரு வருட காலமாக அடக்கி வைத்திருந்தனர். அதன் விளைவாக அந்த ஆதாரம் உள்ளடக்கப்படவில்லை. இது ஓர் அதிர்ச்சியூட்டும் சம்பவமாகும். நடைமுறையில், ஊழல் நிறைந்த த.கா தப்பித்துக் கொள்கிறது, பொலிசார் சிலவேளை அதிக பணம் சம்பாதிக்கக்கூடும், ஆனால் மக்களால் சுதந்திரமான முறையில் தங்களது வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாதுள்ளது. தவறிழைத்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணை நடாத்துமாறும், சான்றுகளைப் பயன்படுத்த இடமளிக்குமாறும் அதிக நீதி நட்புறவு கொண்ட பொலிஸ் ஆணைக்குழுவிடம் கேட்பது பொருத்தமானதாகும். அது வாக்களிப்பதற்கான அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ள மக்களைத் தண்டிப்பதை விடுத்து மக்களை ஏமாற்றியமைக்காக த.கா வையும் பொலிசாரையும் தண்டிக்கும். அதனால் எமது தேர்தல்களிலிருந்து வன்முறையையும் மோசடிகளையும் முற்றாக ஒழிக்க வேண்டி ஒரு கட்டாயத் தேவை இருப்பதாக தேர்தல் ஆணைக்குழு உணர்ந்துள்ளது.

அகிம்சை

அனைவராலும் நன்கு அறியப்பட்ட அகிம்சைவாதியான மகாத்மா காந்தியின் பிறந்த நாள் ஒக்டோபர் இரண்டாம் திகதியாகும். அதனால் ஐக்கிய நாடுகள் அமைப்பு ஒக்டோபர் இரண்டாம் திகதியை பன்னாட்டு அகிம்சை தினம் எனக் கொண்டாடுவதன் மூலம் கல்வி மற்றும் பொது மக்களுக்கான அறிவூட்டலின் ஊடாக அகிம்சையை ஊக்குவிக்கின்றது.

மேலும் சிறுவர்களைப் பொறுத்தவரையில் போதைப் பொருளும் குழு வன்முறையும் அவர்களுடைய மகிழ்ச்சியான உலகத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளன. படிப்படியாக அதிகரித்து வரும் போதைப் பொருள் பற்றிய செய்தி அறிக்கைகள் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் அதிகரித்துள்ளன. காவலாளிகள் இருந்த போதிலும் எமது சிறைச்சாலைகளில் போதைப் பொருள்களைச் சுதந்திரமாகப் பெற்றுக் கொள்ள முடியுமாக உள்ளமை, பழமைவாத சமுதாயங்களில் கூட இளைஞர்கள் கும்பல்களில் சேர்கின்றமை ஆகிய அனைத்தும் சேர்ந்து அபாய மணியை ஒலிக்கச்

இலங்கையர்களாகிய நாங்கள் இந்த இயேசு சபையின் செயற்திட்டத்தின் மூலம் கற்றுக்கொள்ள வேண்டிய அதிகமான விடயங்கள் உள்ளன. மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதில் தடைகளை எதிர்நோக்கும் நிலையில், எமக்கு வழங்கப்பட்டுள்ள ஆணை நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக எப்போது முயற்சி செய்யும் தேர்தல் ஆணைக்குழு, செயலமர்வுகள் மூலம் எமது பிள்ளைகளுக்கு அகிம்சை தொடர்பில் கல்வியூட்டுவதற்கான புதிய நிகழ்ச்சித்திட்டமொன்றை கல்வி அமைச்சுடன் இணைந்து ஆரம்பித்துள்ளது.

செய்கின்றன.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி முதல் அனைத்துத் தேசிய பாடசாலைகளிலும் போதைப் பொருள் கல்வி வாரமொன்றை ஆரம்பித்த போது, கிளிநொச்சி மாவட்டத்தில் ஓர் ஏழைப் பாடசாலை மாணவன் அதனை ஒரு பாரதூரமான விடயமாக எடுத்து கோணாவில் கிராமத்தில் நடைபெறும் செயற்பாடுகளை பொலிசாருக்கு அறிவித்தார். அதற்குப் பொறுப்பான கும்பல் அவருடைய வீட்டுக்குச் சென்று குடுமத்தினரை அச்சுறுத்தியுள்ளது. பின்னர் இரவு நேரத்தில் அந்த மாணவன் ஈருருளியில் சென்ற போது உந்துருளியில் வந்தவர்கள் அவனின் மீது மோதியுள்ளனர். அவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, அவனது ஈருருளியில் விளக்குகள் மற்றும் பிரேக் இருக்கவில்லை என்றும் இந்த விடயத்தைத் தொடர்ந்தால் அவன் பிரச்சினையில் மாட்டிக் கொள்வான் என்றும் பொலிசார் அவனிடம் கூறியுள்ளனர். பல தடவைகள் நீதிமன்றத்திற்கு வர வேண்டியிருக்கும் என்று அவனுடைய தந்தையிடம் கூறப்பட்டுள்ளது. தனது கொத்தர் வேலை யின் நாள் சம்பளத்தை இழப்பதைச் சிந்தித்தும் பார்க்க முடியாத தந்தை, பொலிசாரினால் சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதமொன்றில் ஒப்பமிட்டுள்ளார். அத்துடன் அது ஒரு வீதி விபத்து என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார்.
வடமாகாண சபையின் முன்னாள் எதிர்கட்சித் தலைவர் தவராசா இதனை பொலிஸ் ஆணைக்குழுவிலும் ஆளுநர் சுரேன் ராகவனிடத்திலும் எடுத்துரைத்த போது, கலாநிதி ராகவன் ஒரு புதிய விசாரணையை ஆரம்பிக்குமாறு கடந்த 6ஆம் திகதி கட்டளையிட்டார். அதன் மூலம் உண்மைகள் வெளிக் கொணரப்பட்டன.

போதைப்பொருள் வன்முறையின் ஓர் அங்கமாகப் பொலிஸார்

போதைப் பொருள், வன்முறை, எமது உரிமைகள் பறிக்கப்படுதல் என்பவற்றின் ஓர் அங்கமாக பொலிசார் இருக்கிறார்கள். ஜனவரி 30ஆம் திகதி, மகாத்மா காந்தியின் மறைவு தினமாகும், அதனால் சிறுவர்களுக்கு என்று சிறப்பாக அகிம்சை மற்றும் சமாதானத்திற்கான பன்னாட்டுப் பாடசாலை தினம் கொண்டாடப்படுகின்றது.
இந்த விடயத்தில் ஸ்பெய்னின் இயேசு சபையினால் இயக்கப்படும் என்றாக்கல் சராஸ் நிறுவனம் ஒரு பெரிய வகிபாகத்தை நிறைவேற்றுகின்றது. அது 'இளைஞர்கள் மத்தியில் தரமான கல்விக்கு உத்தரவாதம் வழங்குவதற்கு ஒரு சமாதானமான சூழலில் வாழ்வதன் முக்கியத்துவத்தை எமக்கு நினைவுபடுத்துகின்றன.'
வன்முறையைக் கொண்ட குடும்பச் சூழ்நிலை, இளைஞர்களின் பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்க முடியாத கல்வி முறைமை, பாதுகாப்புத் தேட வேண்டிய தேவை என்பன இளைஞர்கள் கும்பல்களில் சேர்வதற்கான காரணங்களில் சிலவாகும். லீமாவில் செயற்திட்டத்தை ஒருங்கிணைப்புச் செய்யும் சிகியூ பின் வருமாறு கூறுகிறார்: 'கும்பல் அவர்களுடைய வீடாக மாறிவிடுகின்றது.'

கல்வி அமைச்சுடன் இணைந்து தேர்தல் ஆணைக்குழு செய்யும் பணிகள்

இலங்கையர்களாகிய நாங்கள் இந்த இயேசு சபையின் செயற்திட்டத்தின் மூலம் கற்றுக்கொள்ள வேண்டிய அதிகமான விடயங்கள் உள்ளன. மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதில் தடைகளை எதிர்நோக்கும் நிலையில், எமக்கு வழங்கப்பட்டுள்ள ஆணை நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக எப்போது முயற்சி செய்யும் தேர்தல் ஆணைக்குழு, செயலமர்வுகள் மூலம் எமது பிள்ளைகளுக்கு அகிம்சை தொடர்பில் கல்வியூட்டுவதற்கான புதிய நிகழ்ச்

சித்திட்டமொன்றை கல்வி அமைச்சுடன் இணைந்து ஆரம்பித்துள்ளது.
தேசிய நிகழ்ச்சியொன்று இரத்தினபுரியில் சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் கடந்த ஜனவரி 30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதில் தவிசாளர் மகிந்த தேசப்பிரியவுடன் இரத்தினபுரிக்கான பதில் கடமை பிரதி தேர்தல் ஆணையாளர் சுரங்க அம்பகஹதன்னவும் கலந்துகொண்டார்.
தேர்தல்கள் ஆணைக்குழு செய்தவற்றுக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் அமைப்பு அகிம்சைப் பெறுமானங்கள் அனைத்து சமயங்களுக்கும் பொதுவானவை என்று கருதுவதுடன் பல் சமய பிராத்தனைக்கு ஆதரவு வழங்குகின்றது. பொதுவான பெறுமானங்களை நிரூபிப்பதற்கு, அது பின்வரும் மேற்கொள்களுக்கு ஆதரவளிக்கின்றது.
•தம்மபதம் (தண்ட வக்கா: அனைவரும் தண்டனைக்கு அஞ்சுகின்றனர்; அனைவரும் சாவுக்கு அஞ்சுகின்றனர்; ஒருவர் தன்னை மற்றவர்களுடன் ஒப்புநோக்கி, கொலை செய்யவோ அல்லது கொலைக்குக் காரணமாக இருக்கவோ கூடாது);
•பைபிள் (லூக்கா 6:27: ஆனால் நான் உங்களுக்குக் கூறுகிறேன் கேளுங்கள், உங்கள் எதிரிகளை நேசியுங்கள், உங்களை வெறுப்பவர்களுக்கு நல்லதையே செய்யுங்கள், உங்களை ஏசுபவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைத் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்காகப் பிரார்த்தியுங்கள். உங்கள் கன்னத்தில் அறைபவனுக்கு, அடுத்த கன்னத்தையும் கொடுங்கள்);
•தர்மசாஸ்திரங்கள் (மனுஸ்மிரிதி 6.60: எந்தவொரு ஜீவனையும் கொலைசெய்யாமல் இருப்பதன் மூலம், ஒருவர் இரட்சிப்புக்குத் தகுதிபெறுகிறார்)
•அல் குர்ஆன் (ஸூரதுல் மாஇதா 5:32: எவரொருவர் ஓர் அப்பாவி உயிரைக் கொலைசெய்கிறாரோ அவர் முழுமனித சமுதாயத்தையும் கொலை செய்தவரைப் போன்றாவார்).
மற்றை 24 மாவட்டங்களிலும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை நடத்துவதற்கான ஒவ்வொரு பாடசாலை தேர்தல்கள் ஆணைக்குழுவால் தெரிவுசெய்யப்பட்டது.
உதாரணமாக வவுனியாவில், செயலமர்வு அங்குள்ள உதவி ஆணையாளரான தேர்தல் ஆணைக்குழுவைச் சேர்ந்த டெனிசியஸ் கனியூட் அரவிந்த ராஜால் நடத்தப்பட்டது. கிட்டிய எதிர்காலத்தில் வாக்காளர்களாக மாறவுள்ள தரம் 10 மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களைச் சேர்ந்த 100 மாணவர்கள் இதற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர் சமயத்தை ஒரு புறம் வைத்து விட்டு தேர்தலுக்கும் வன்முறைக்கும் இடையிலான தொடர்பு, பாடசாலைகளில் வன்முறைகள், வாக்காளராகப் பதிவுசெய்வதன் முக்கியத்துவம் என்பன தொடர்பில் கவனம் செலுத்தினார். அதே போன்று கண்டியில் செயலமர்வொன்று அங்குள்ள பிரதி ஆணையாளர் நாமல் தலங்கமவால் நடத்தப்பட்டது.
'தொண்ணூறு வீதமான சாராயத் தவறணைகள் அரசியல் வாதிகளுக்குச் சொந்தமானவை' என்ற ஜனவரி 29ஆம் திகதிய டெய்லி மிரர் பத்திரிகையின் தலைப்புச் செய்தி, எமக்கு இரண்டு முக்கியமான செய்திகளை வழங்குகின்றன. எமது பிள்ளைகளைக் குடிகாரர்களாக்குவதன் மூலம் அரசியல்வாதிகள் இலாபமடைய விரும்புகிறார்கள், எமது பிள்ளைகளை குறிப்பாக எமது மதுபான வியாபாரிகளைப் போன்றில்லாத பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு தங்களது வாக்குரிமையைப் பயன்படுத்தும் பொறுப்புள்ள பிரசைகளாக வளர்க்க வேண்டுமாயின் பிள்ளைகளின் விடயத்தில் விசேடகவனம் செலுத்த வேண்டும் என்பனவே அந்த இரண்டு செய்திகளாகும்.

பல்சமய வழிபாடு பற்றிய எச்சரிக்கை

பலநாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது பிள்ளைகளை மாசுபடுத்துவதில் ஆர்வம் காட்டுகின்ற ஒரு சூழ்நிலையில் எமது நன்னோக்கங்கொண்ட நிகழ்ச்சித்திட்டமானது காலத்துக்கு மிகவும் பொருத்தமானதாகும். ஆனால் அது ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுவான சமய முக்கியத்துவத்தை நன்றாக மெருகூட்டுவது அவசியமாகும்.
எமது சமயங்கள் பல்வகைமையாக உள்ளதுடன் சிலபோது பரஸ்பரம் தனித்துவமாக நிற்கின்றன. நாங்கள் உணர்ச்சி வசப்படாமல் சமயம் பற்றிக் கலந்துரையாடும் அளவுக்கு முதிர்ச்சியடையாதவர்களாக இருக்கிறோம். பொதுவான வழிபாட்டை நடத்துகின்ற போது, ஓரிறைக் கொள்கைப் பின்னணியைக் கொண்டவர்கள் தாம் பலதெய்வக் கொள்கை வழிபாட்டை நோக்கி தள்ளப்படுவதாக உணர்வார்கள். சாதியை அடிப்படையாகக் கொண்ட பிக்கு ஒருவர் புத்தருக்கு வழிபாடுகளைச் செய்கின்ற போது, அல்லாஹ்வை அல்லது இயேசுவை வணங்குகின்ற போது, பின்னர் ஒரு பிராமணன் மூலம் சிவ பெருமானுக்கு பூஜை செய்கின்ற போது, நாங்கள் பல தெய்வக் கொள்கையைப் பின்பற்றுவதையும் சாதி முறையை அனுமதிப்பதையும் அதிகமான இலங்கையர்களால் பார்க்க முடியாது. அது தலைக்கனம் பிடித்த மேலாதிக்கத்தை வெளிப்படுத்துவதுடன் சமய விடயத்தில் பெரும்பான்மைவாதத்தை ஊக்குவிப்பதுடன் சமத்துவம் பேசும் ஓரிறைக் கொள்கையாளர்களை விட்டு விடுகின்றது.
சிலர் தங்களது சமயத்துக்கு அரச ஆதரவு வழங்கப்பட வேண்டும் என்று கோருகின்ற, சமயரீதியில் பாரபட்சம் காட்டுகின்ற ஒரு நாட்டில் நாங்கள் வாழ்கிறோம். அந்தக் கோரிக்கை பிழையானது என்பதைச் சிந்திப்பதற்கு அவர்களின் மனப்பாங்கு இடமளிப்பதில்லை. முஸ்லிம்களுக்கு எதிரான பாரபட்சமும் பரவலாகக் காணப்படுகின்றது. எமது சமுதாயங்களின் உள்ளே அவமதிக்கப்படுவதை நாங்கள் அனைவரும் கேட்கிறோம் அது அவற்றை மீளக் கூறுவதற்கு உதவாது.
இஸ்லாம் 'ஆரம்பம் முதலே உயர்குலச் சிறப்புரிமைகளைக் கண்டித்தது, வர்க்க முறையை நிராகரித்ததுடன் தொழில்கள் திறமைகளுக்குத் திறந்துள்ளன என்ற வாய்ப்பாட்டைப் பின்பற்றியது' என்று பிரின்செட்டன் பல்கலைக்கழகத்தின் பெர்னாட் லிவிஸ் கூறுகிறார். இறைத் தூதர் முஹம்மதின் 622ஆம் ஆண்டின் மதீனா சாசனம், போர் செய்து வந்த மதீனா மக்களிடம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக முஸ்லிம்கள், யூதர்கள், சிலை வணங்கிகள் உள்ளிட்ட மதீனாவின் முக்கிய மான கோத்திரங்களுடனும் குடும்பங்களு டனும் செய்து கொண்ட ஒரு உத்தியோகபூர்வ உடன்படிக்கையாகும். இந்த சாசனம் ஒப்பந்தத் தரப்பினருக்கான பல உரிமைகளையும் பொறுப்புக்களையும் உள்ளடக்கியுள்ளது. அது பாதுகாப்பு, சமய சுதந்திரம், பெண்களின் பாதுகாப்பு, மதினாவை ஆயுதங்களும் வன்முறையுமற்ற ஒரு புனிதத் தளமாக மாற்றியமை என்பன உள்ளடங்கும். முரண்பாட்டுச் சந்தர்ப்பங்களில் சமுதாயத்திற்கு உதவுவதற்காகவும், சிறைக் கைதிகளுக்கு அவர்களின் சமயத்தைப் பொருட்படுத்தாது உணவும் உடையும் வழங்குவதற்காகவும் வரி முறையொன்றை அவர் அறிமுகப் படுத்தினார்.
அவர் தனது சிந்தனையில் இந்தியாவை விட வெகு தூரம் சென்றிருந்தார். எம்மில் அதிகமானோருக்கு இதைப் பற்றித் தெரியாது. ஒரு சமயத்திற்கு முதன்மை இடம் வழங்க வேண்டும் என்று நாம் கோருகின்ற போது, மற்றைய சமயங்களை, குறிப்பாக இஸ்லாத்தை, தரம் குறைந்தவையாகப் பார்க்கின்ற போது, பல் சமய வழிபாடு ஒரு கேலிக்கூத்தாக இல்லையா?
மேலும், தேர்தல் ஆணைக்குழு இந்த ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஆதரவளிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நல்லவற்றைச் செய்வதற்காக மனப்பூர்வமாக முயற்சிப்பதனால், எந்தவொரு நிகழ்ச்சிக்கும் பொருந்தக் கூடிய இயற்கையான சுய விமர்சனத்தை வேண்டி நிற்பதில்லை.
எவ்வாறாயினும், மேலே உள்ளவாறு மேற்கோள் காட்டப்பட்ட ஒவ்வொன்றுக்கும் அதற்கு எதிரான கருத்து இருப்பதாக கூர்மையான பிள்ளைகள் கரு முடியும். மேலே உள்ள தம்மபதத்தின் மேற்கோள் வாசகம் இருந்த போதிலும், பௌத்த சமயமானது சைவ உணவுப் பழக்கத்தை வேண்டி நிற்கிறது என்பதை மாமிசம் சாப்பிடும் பல பௌத்தர்கள் மறுக்கக்கூடும். உண்மையில், மேற்கோள் காட்டப்படும் வாக்கியங்கள், நாங்கள் கூற விரும்புகின்றவற்றுக்கு பங்கம் ஏற்படும் விதத்தில் பிரித்து எடுத்துக் காட்டப்படவும் முடியும். உதாரணமாக, 'எவரொருவர் ஓர் அப்பாவி உயிரைக் கொலைசெய்கிறாரோ அவர் முழு மனித சமுதாயத்தையும் கொலை செய்தவரைப் போன்றாவார்' என்பது அப்பாவிகளல்லாத உயிர்களைக் கொலைசெய்வதை அனுமதிக்கின்றது என்று கூறப்பட முடியும்.

செயற்பாடுகள் சகலதையும் நுணுக்கமாக அமைத்தல்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிகழ்ச்சித்திட்டத்தை நுணுக்கமாக அமைத்துக்கொள்வதற்கு, வறுமை ஒழிப்பு, நோயாளிகளைப் பராமரித்தல், அநாதரவானவர்களை, அநாதைகளை, விதவைகளைப் பராமரித்தல், பிரசைகளுக்கு அரசியல் சமத்துவம் வழங்குதல் போன்ற அதிகமான சமயங்களுக்கு உண்மையாகவே பொதுவான வையாக உள்ள அந்தச் சேவைச் செயற்பாடுகளைக் கவனமான முறையில் தெரிவுசெய்ய வேண்டும். எமது உலகத்தை கருணைமிக்க ஓர் உலகமாக மாற்றியமைப்பதற்கு அனைத்து சமயங்களையும் சேர்ந்த மக்களை ஒன்று சேர்க்க முடியுமாயின், அது அகிம்சை மற்றும் சமாதானத்திற்கான அடுத்த பன்னாட்டுப் பாடசாலைத் தினத்தின் செயற்பாடுகளை நுணுக்கமாக அமைப்பதற்குப் பயனுள்ளதாக அமையும்.

மரண அறிவித்தல்

மண்ணில்
09
.
02
.
1925

விண்ணில்
13
.
02
.
2019

திருமதி றோஸ் செபரத்தினம் செல்வரட்ணம்

(இளைப்பாறிய ஆசிரியை)

ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி றோஸ் செபரத்தினம் செல்வரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியை) கடந்த 13.02.2019 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னதானம் - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பென்ஜமின் செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருட்பிரகாசம், தேவப்பிரகாசம், ஜெகப்பிரகாசம் மற்றும் தவப்பிரகாசம் (பிரதேசசபை உறுப்பினர், வலி.தெற்கு), இன்பரத்தினம் (இன்பம் - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கேராபீன் மற்றும் றெஜீனா தேவஜெயந்தி (ஆஸ்திரேலியா), செல்வச்சந்திரன் (பண்டாரவளை), காலஞ்சென்ற மேசி செல்வராணி (செல்லாக்கா) மற்றும் டெய்சிபத்மினி (ஆஸ்திரேலியா), ஜெபசெல்வன் (ஜெபன் - கனடா), எஸ்தர் ஜோதினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், செனிற்றா (மாத்தளை), குகானந்தன் (ஆஸ்திரேலியா), பத்மினி (வவாக்கா - பண்டாரவளை), சாந்திக்குமார் (ஆஸ்திரேலியா), கிறிஸ்ரீன் (கனடா), பிறேம்நாத் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.02.2019) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, ஏழாலை வடக்கு கிறிஸ்து அரசர் ஆலய கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஜெப இல்லம்"
கலாநிதி வீதி, ஏழாலை வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/23440)(11.17)

077 6731663

மரண அறிவித்தல்



கந்தையா பத்மநாதன்

(பத்மா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - தண்ணீரூற்று, முள்ளியவளை)

யாழ். கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநாதன் கடந்த (16.02.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குலசேகரம்பிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் பரிசமிகு மருமகனும், சிவசோதி அவர்களின் பாசமிகு கணவரும், ஐங்கரன்(ராஜன்- இத்தாலி), பத்ம ஜோதி(சுசி- சுவிஸ்), வர்ஷினி(வாணி), கஜாகரன்(கஜன்- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிலாந்தினி(இத்தாலி), நந்தகுமார் (நந்தன்- சுவிஸ்), பிரணவன் (Kevilten Electrical Product Pvt Ltd) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், இரத்தினம்மா, பூபதி, இராஜரட்ணம், பஞ்சலிங்கம் மற்றும் லீலாராணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மகுலரட்ணம், யோகேஸ்வரன், ஜெகசோதி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நயனிகா(சுவிஸ்), நந்தனா(சுவிஸ்), சிவப்பிரகா, நித்திலா, பிரனிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2019) புதன்கிழமை மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'ஜோதியகம்'
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 0773604486

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

பேஸ்புக் கவிதைகள்

- பறித்த மலரை ஆண்டவனுக்குச் சூட்டினாலென்ன? கல்லறையில் வைத்தாலென்ன? மலருக்கென்னவோ பறித்ததுமே வந்துவிட்டது சாவு!

- புறாக்கள் வளர்க்கும் எதிர் வீட்டுக்காரர் என்னிடமிருந்து பறிக்கிறார் பூனை வளர்க்கும் சுதந்திரத்தை...."

காக்க காக்க 2வில் இணையும் சூர்யா - ஜோதிகா

வெற்றிப் படங்களின் அடுத்தடுத்த பாகங்களை எடுப்பதே தமிழ் சினிமாவின் தற்போதைய நிலையாக உள்ளது. அந்த வகையில், வேலையில்லா பட்டதாரி 2, சாமி 2, சண்டக்கோழி 2, விஸ்வரூபம் 2, மாரி 2, சார்லி சாப்ளின் 2 என அண்மையில் வெளியான பெரும்பாலான படங்களுக்கு போதிய வரவேற்பு இல்லை.

இந்த நிலையில், கவுதம் மேனன் இயக்கத்தில் சூர்யா - ஜோதிகா நடிப்பில் 2013ஆம் ஆண்டு வெளியாகி மாபெரும் வெற்றி பெற்ற 'காக்க காக்க' படத்தின் இரண்டாவது பாகத்தை உருவாக்க முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. காக்க காக்க படத்தை தயாரித்த எஸ்.தாணு, இரண்டாவது பாகம் குறித்து கௌதம் மேனன் மேனனனிடம் பேசியிருப்பதாகவும், அதற்கான பணிகள் விரைவில் தொடங்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதிலும் சூர்யா ஜோதிகாவை நடிக்க வைக்க முடிவு செய்திருப்பதாகவும், ஹாரிஷ் ஜெயராஜ் இசையமைக்க இருப்பதாகவும், அடுத்த வருடம் படப்பிடிப்பு தொடங்க வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

கௌதம் மேனன் தற்போது எனை நோக்கிப் பாயும் தோட்டா, துருவ நட்சத்திரம் ஆகிய படங்களை முடித்த பிறகே 'காக்க காக்க 2' தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: நண்பரின் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத சிறு குறுக்கீடு வரலாம். பொறுமையுடன் செயல்படுவதால் சிரம நிலை சீராகும்.

இடபம்: கடந்த கால நற்செயலுக்கு உரிய பலன் தேடி வரும். அவமதித்தவர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும்.

மிதுனம்: நற்செயலுக்கான பாராட்டு வந்து சேரும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய யுக்தி பயன்படுவது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும்.

கடகம்: உறவினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். பணிகளை புதிய யுக்தியால் நிறைவேற்று வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும்.

சிங்கம்: மனதில் சஞ்சலம் கொள்வீர்கள். தொழிலில் கூடுதல் உழைப்பினால் உற்பத்தி விற்பனை சீராகும். அளவான பணவரவு கிடைக்கும்.

கன்னி: சிறிய செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி நிலை உருவாகும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

துலாம்: இஷ்ட தெய்வ அருளால் மனதில் இருந்த சஞ்சலம் தீரும். அதிக உழைப்பினால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள். பணவரவில் கொஞ்சம் சேமிப்பு அதிகரிக்கும்.

விருச்சிகம்: அறிமுகமில்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். பணவரவு சுமாராக இருக்கும்.

தனுசு: தேவையற்ற விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சாதக சூழ்நிலைகளை அறிந்து கொள்வது அவசியம். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

மகரம்: பரந்த சிந்தனையுடன் செயல்படுவீர்கள். புதிய வர்களின் அன்பு கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க சில மாற்று உபாயம் பின்பற்றுவீர்கள்.

கும்பம்: இன்ப துன்பம் பிறர் அறியாத வகையில் செயல்படு வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய திட்டம் உருவாகும். உற்பத்தி விற்பனை அதிகரிக்கும்.

மீனம்: செயல்களில் தேவையான சீர்திருத்தம் வேண்டும். பொறாமை உள்ளவரின் விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம்.

ருவீற்ஸ்

புன்னகை மன்னன்
@Punnagai mannan3

முதுமையில் உன் குரலுக்கு ஓடி வர மனைவி, மகன், பேரன், உன்னோடு இருந்தால் நீயும் அதிஷ்டசாலிதான்..

கோழியின் கிறுக்கல்!!
@Kozhiyaar

இங்கு ஒருவரின் எளிமை போற்றப்படுவதற்கு அவர் பெரும் பணம் படைத்தவராய் இருக்க வேண்டியிருக்கிறது!!!

பரிதி நிலவன்™ @ak47_twits

வெற்றியைக் கொண்டாடாத ஒருவன், தோல்வி யில் திண்டாடுவதில்லை ..

சப்பாணி@manipmp

பெருத்தார் பேருந்து சீட் ஆள்வார்.!

ஊர்க்காவலன்™@oorkkavalaan

வாழ்க்கை எமக்கு ரெண்டே வகை தான்...
ரசிச்சா செழிப்பான வாழ்க்கை
ரசிக்கலனா சலிப்பான வாழ்க்கை

சிறுமிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடொன்றில் தங்க வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி சிறுமியின் தாய் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். விசாரணை மேற்கொண்ட பொலிஸார் இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர். சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபரின் சார்பில் முன்னிலையான பெண் சட்டத்தரணி, சிறுமி இளைஞனுடன் காதல் வயப்பட்டே சென்றார் என்றும், இளைஞனின் வீட்டில் இருந்து வர முடியாது என்று அடம்பிடித்தார் என்றும் வாதத்தை முன்வைத்தார்.

தமது விசாரணைகள் முடியவில்லை என்றும், சந்தேகநபருக்குப் பிணை வழங்கக் கூடாது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவற்றை ஆராய்ந்த நீதவான் சந்தேகநபரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (எ-8)

திருட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குவிலில் உள்ள வீடொன்றை உடைத்து திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக 3 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வந்தன. இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாண்ம் நீதிவான் நீதி மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் சாட்சியாக முறைப்பாட்டைப் பதிவு செய்த மற்றும் சந்தேகநபர்களைக் கைது செய்ய உதவிய பொலிஸ் அலுவலரிடம் சாட்சியம் பெறப்பட்டது. அதன்பின்னர் சாட்சியத்தில் குறுக்கு விசாரணைகள் உள்ளனவா? என்று சந்தேகநபர்களிடம் மன்று வினவியது.

அப்போது இரண்டாவது சந்தேகநபர் தன்னைப் பொலிஸார் சித்திரவதை செய்தார்கள் என்று தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்த பொலிஸார் கொக்குவிலில் உள்ள இந்து மயானத்தில் வைத்து "பைப்" ஒன்றால் தாக்கிச் சித்திரவதை செய்தனர். அதன்பின்னரே பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். அங்கு பொலிஸாரும், முறைப்பாட்டாளரும் கூடி நின்று எம்மை அடையாளம் காட்டினர் என்று அவர் தெரிவித்தார்.

அவ்வாறான சித்திரவதை இடம்பெற்றதா? என்று வழக்கில் சாட்சியம் அளித்த பொலிஸ் அலுவலரிடம் மன்று வினவியது. அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்று பொலிஸ் அலுவலர் தெரிவித்தார். அதன்பின்னர் வழக்கு தொடர் விளக்கத்துக்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-8)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை மைதான திறப்பு விழாவும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் 15.02.2019 அன்று நடைபெற்றபோது மைதானத்துக்குரிய காணியை அன்பளிப்பாக வழங்கிய **ராஜா பிளாசா**

உரிமையாளரும் பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய செங்கைப்புரவோன்

உயர்திரு.இராசையா குவேந்திரநாதன்

அவர்களின் தன்னலங்கருதாச் சேவையினைப் பாராட்டி பாடசாலைச் சமூகத்தினரால்

"தருமப்பிரபு"

என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- **உரிமையாளரும் ஊழியர்களும்**
ஜங்கரன் களஞ்சியம்
இல.6,திருநெல்வேலி சந்தி.

(CS/23437)(11.17)

பெயர் மாற்றம்

பெரியகமம் எழுத்தாரைச் சேர்ந்த **திரேசம்மா பாத்திமா** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **திலுனிக்கா பிரியாந்தி குமாரி** எனப் பெயர் மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

திலுனிக்கா பிரியாந்திகுமாரி

(CS 23439)(11.17)

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 01.06.1981 இல் பிறந்த கார்த்திகை 3 நட்சத்திரம், கிரகபாவம் 32, சூரி/ செவ் 6 இல், உயரம் 5'7" Project Coordinator (I.N.G.O) தொழில்புரியும் மணமகனுக்கு அரசசேவை / Bank இல் பணிபுரியும் மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

071 154 4316

(CS 23439)(11.17)

இதய அஞ்சலி

மலர்வு
18 . 01 . 1952

உதிர்வு
14 . 02 . 2019

திருமதி ஜெகதீஸ்வரி இராசரத்தினம்

சுகந்தம் வீசி வந்த தென்றலும் ஒருகணம் நின்றது
அமைதி திருவுருவம் மறைந்த செய்தி இன்றுய
எங்கள் மனங்களில் பதிய மறுக்கின்றது
பழகிய உறவுகள் பரிதவித்து நின்றிருக்க
பாதி வழியினிலே தருணம் பார்த்திருந்தே
தட்டிப்பறித்து விட்டான் காலன் என்செய்வோம் இனி
என்செய்வோம் ? வேதனைத்தீயினில் மெழுகாய்
உருகி உறைந்துவிட்டோம்.

லிங்கம் (மருமகன் - முன்னாள் உபதபாலதிபர்,பிரான்பற்று)
ஆஸ்திரேலியா 0061 470 420 944

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com
ES Printers

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பாரினிலே
18 . 04 . 1940

மண்ணிலே
01 . 03 . 2018

அமரர் செல்லையா குணரத்தினம்

திதி : 19.02.2019

மெல்ல நடை நடந்து உறுதியான கதைபேசி
நேர் கொண்ட பார்வையுடன் சமூக சேவை செய்திடுவீர்
சிவனின் தொண்டனாய் சிறுவர்கள்,
பெரியோர்கள் விரும்பும் பாசமான நீவீர்
பாரை விட்டு நீங்கியது பதற வைக்கிறதே
ஆண்டு ஒன்று ஆனதுவே அன்புச் சொல் கேட்குதையா
கண்ணிமைக்கும் முன்பே காலன் கொண்டு சென்று விட்டான்
மீளாத்துயரில் அலைகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சுருவில் வீதி,
ஊர்காவற்றுறை.

குடும்பத்தினர்.

(CS 23332)(14.17)

22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மன்னார் வலைப்பாட்டுக் கடலில் சங்கமமான

திருச்செல்வம் கமலேந்திரராணி (குமுதினி)
தோற்றம்:-23.06.1974

திருச்செல்வம் கம்சினி
தோற்றம்:-05.06.1996

சிவலிங்கம் திருச்செல்வம்
தோற்றம்:-08.02.1972

மறைவு:-19.02.1997

நீங்கள் பறந்துபோய்
ஆண்டுகள் இருபத்தியிரண்டு அசைந்தபோதும்
அழியாத ஓவியமாய் என்றும் எம் நெஞ்சில் நீங்கள்....
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்றும் நினைவுடன்

சீ.தேவகுஞ்சரம்,
கதிரிப்பாய், அச்சுவேலி.

அம்மா, அக்கா, அத்தான், அண்ணாமார்,
அண்ணிமார், பிள்ளைகள்

மரண அறிவித்தல்

திருமதி ஜெகதீஸ்வரி இராசரத்தினம்

மலர்வு 18.01.1952 உதிர்வு 14.02.2019

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி இராசரத்தினம் கடந்த (14.02.2019) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் பண்டத்தரிப்பு மங்களா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற குமரேஸ்வரதாசன் (இராசன்) மற்றும் சாந்தீஸ்வரி (கலா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலையரசி (ஆஸ்திரேலியா), எழிலரசி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஷ்ண லிங்கம், அசோக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகிர்தா, மகிந்தன், விகிந்தன், ஷாம், ஷக்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான துரைராசா, நடராசா, அழகரெத்தினம் மற்றும் வைத்திலிங்கம், தாயுமானவர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற பஞ்சேந்திரம் மற்றும் அன்னபூரணம், சறோஜினிதேவி, மல்லிகா, ஆரியமாலா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் மலர்விழி, கயல்விழி ஆகியோரின் அன்புச் சித்தியும் சிவறஞ்சன், சிவரூபன், சிவமோகன், சிவமாலினி, கவிதா, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் சூர்யா, தாணு ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2019) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மங்களா ஸ்ரோர்ஸ்,
பண்டத்தரிப்பு. 021 490 4800

தகவல்: சி.இராசரத்தினம்
(கணவர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
பல்கலைக்கழகஅனுமதி–2018/2019

உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)

நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்

மேற்படி நான்கு வருட பட்டப் படிப்புக் கற்கை நெறிகளுக்கு அனுமதி பெறவிரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 14.03.2019ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்

அனுமதிக்கான தகைமைகள்

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2018 ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்யவிரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது கர்நாடக சங்கீதம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதரணதரச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும். (இலங்கை ப. மா. ஆணைக்குழு மாணவர் கைநூல் பக்கம் - 36 பிரிவு - 09)

தகுதிகாண் பரீட்சைஆற்றுகை/ உளச்சார்பு பரீட்சை

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, / உளச்சார்பு பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

சங்கீதம், நடனம் - ஆற்றுகை பரீட்சை
சித்திரமும் வடிவமைப்பும்- செய்முறை மற்றும் உளச்சார்பு பரீட்சைகள்

விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணைய தளத்தில் இருந்து பிரதி செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா. 300 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல. 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் **பாடசாலை அதிபர் அல்லதுசமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும்** அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/ நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்டவிண்ணப்பங்கள் யாவும் 14.03.2019 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 18.02.2019

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
பல்கலைக்கழகஅனுமதி–2018/2019**

நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்

தகுதிகாண் பரீட்சைக்கானவிண்ணப்பப்படிவம் - (Aptitude Test)

விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:-
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)

முதல் எழுத்துக் குறிக்கும் பெயர்:-

தேசியஅடையாளஅட்டையிலக்கம்:-

நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்):-

தொலைபேசி இலக்கம்:-

மின்னஞ்சல் முகவரி:-

2. க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேறு 2018:-

சுட்டிலக்கம்:

Z புள்ளி:

பொதுச்சாதாரண பரீட்சைப்புள்ளி:

பாடம்	தரம்	மொழி மூலம்	மாவட்டம்
1.			
2.			
3.			

3. பெற்றோர்/பாதுகாவலர் பெயர்:

முகவரி: (ஆங்கிலத்தில்):-

4. விண்ணப்பிக்கும் பாட நெறி: (தெரிவிற்கு V இடுக)

இசை		நடனம்		சித்திரமும் வடிவமைப்பும்	

சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:

1. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ☐
2. உறுதிப்படுத்திய 2018க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேற்றுச்சான்றிதழ் (Z புள்ளி/மாவட்டம் உள்ளடங்கலாக) ☐
3. பெயர் மாற்றம் செய்யின் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ☐

என்னால் தரப்பட்ட மேற்படி விவரங்கள் யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

....

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி

பதவி முத்திரை பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் கையொப்பம்.

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறைதிருவருள் மிகு
ஸ்ரீ கண்ணகாதேவி தேவஸ்தானம்
சங்காபிஷேகப் பெருவிழா
21.02.2019 - வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல்

அம்பிகை அடியார்களே!

ஈழமணித்திருநாட்டின் வடபால் சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் மயிலிட்டி பதியிலே பன்னெடுங்காலமாக கோயில் கொண்டு அருள்பாலித்துக்கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீகண்ணகாதேவிக்கும்பரிவாரமூர்த்தியாகவிளங்கும்மஹாகணபதிக்கும்ஸ்ரீவைரவருக்கும் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விளம்பி வருஷம் தைமாத27 ம் நாள் ஞாயிற்றுக்கிழமை 10.02.2019 சிவஸ்ரீ அரிகரமதிவதனக் குருக்கள் தலைமையில் மஹா கும்பாபிஷேகம் மிகவும் பக்தி பூர்வமாகவும் கிரியா பூர்வமாகவும் நடைபெற்றதுடன் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் இடம்பெற்று வருகின்றது. பூர்த்தி தினமான விளம்பிவருடம் மாசித்திங்கள் 9 ஆம் நாள் வியாழக்கிழமை (21.02.2019) அன்று அம்பிகைக்கு சங்காபிஷேகம் இடம் பெறுவதற்கும் அம்பிகையின் அருட்கடாட்சம் கிடைத்துள்ளது. காலை 9.30 மணியிலிருந்து பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகிசங்காபிஷேகமும்அதனைத்தொடர்ந்துஅம்பிகைக்குவிஷேடஅபிஷேக ஆராதனை இடம்பெற்றதும் அம்பிகை வீதிவலம் வந்ததும் அடியார்கள் அனைவருக்கும் மாகேஸ்வர பூஜை இடம்பெறும் என்பதனையும் அறியத்தருகின்றோம். மெய்யடியார்கள் ஆசார சீலர்களாக சங்காபிஷேகப்பெருவிழாவில் கலந்துகொண்டு அம்பிகையினை சரணடைந்து வழிபடுவதோடு கண்ணகைத்தாயின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணமும் வேண்டிக்கொள்கின்றோம்.

ஆதீன கர்த்தாக்கள்

மரண அறிவித்தல்கள்

பாலசுப்பிரமணியம் பரந்தாமன் (கண்ணன்)

தோற்றம் 11.04.1988 | மறைவு 18.02.2019

வாரிவளவு, காரைநகரைப் பிறப்பிட மாகவும், கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் பரந்தாமன் (கண்ணன்) நேற்று (18.02.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பலசுப்பிர மணியம் மற்றும் மங்கையற்கரசி தம்பதி களின் அன்பு மகனும், துஷ்யந்தினியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர் வரும் (21.02.2019) வியாழக்கிழமை கண்டியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
0724415774

12A, லேக் றோட், கடுகஸ்தோட்ட, கண்டி.

திருமதி புனிதவதி சீவரட்ணம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - ICT Matriculation Higher Secondary School - Chennai)

நல்லூரைப்பிறப்பிடமாகவும் அராலி கிழக்கு தற்போது இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி சீவரட்ணம் (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப் பாணத்தில் இறைபதம்அடைந்து விட்டார்.

அன்னார் செல்லத்துரை சீவரட்ணம் (Baby - முன்னாள் உரிமையாளர் சுஜீவா, கருடா - யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ் சென்றவர்களான சோமசுந்தரம் கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஏகாம்பரம் மற்றும் சீவரட்ணம், வில்லிமலர், காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, கனகராசா மற்றும் பரமசிவராசா, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அரியநாயகம் (யோகரட்ணம்) மற்றும் சறோஜினி, மங்களேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை - செல்லத்துரை மிஸ்) காலஞ்சென்ற அதிஸ்டரட்ணம் (Babby) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2019) புதன் முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
கணவர்: செ.சீவரட்ணம்
சகோதரர்:சோ.பரமசிவராசா
மைத்துனி:செல்லத்துரைமிஸ்
0212051465

**மங்கள பவனம்
அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை**

வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- **காசாளர்** - Restaurant Cashier
- **இரவு ஒடிற்றர்** - Night Auditor
- **அறை பராமரிப்பு உதவியாளர்** - House Keeping Assistant (Trainee)

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்பு - 0777 696 443/ 0777 696 553
tilko.tilak@gmail.com

(C 9466/15/17)

மஹா சக்தியுள்ள வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள். என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

- ☆காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
- ☆காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
- ☆பெற்றோர் விருப்பமின்மையா?
- ☆கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
- ☆வேலைத்தளத்தில் பிரச்சினையா?
- ☆காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?

- இரகசியம் பேணப்படும்.
- நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்
வேலு ராஜேஸ்வரி அவர்கள்
மாத்தளை.
0778 432 602 / 075 302 4239
என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.

கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் முன்னாள் தலைவர்
செல்லையா கோடீஸ்வரன்

அவர்களது மறைவினால் சங்கம் ஆழ்ந்த துயரடைகின்றது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பொதுமுகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம்,
65, புகையிரத நிலைய வீதி, வவுனியா.

மரணஅறிவித்தல்

திருமதி ருக்குமணிதேவி சண்முகசேகரம்பிள்ளை

நாரந்தனை கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் யாழ் கோண்டாவில் மேற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி ருக்குமணிதேவி சண்முகசேகரம் பிள்ளை 17.02.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகாவதி(உடையார்) கௌசாம்பிகை தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கம்மா (கரம்பொன்) தம்பதிகளின் மருமகளும் சண்முகசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும் நளாயினி, நிஷாந்தினி, காலஞ்சென்ற பகீரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பகீரதன், இந்திரகுமார் ஆகியோரின் அருமை மாமியாரும் அமேயா, சோபிகா, தீவாகரன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் தவமணி, நந்த கோபால், காலஞ்சென்றவர்களான சண்முகதாஸ், நடேசானந்தன் மற்றும் பரம்சோதி(ஆயுள்வேத வைத்தியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமலிங்கம்(வர்த்தகர் - வரக்காப்பொல) காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இசைவாணி, நல்லநாயகி, சகுந்தலராணி, குமாரசுவாமி, கமலாம்பிகை, புஸ்பமணி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் திருநீலகண்டன்(லஷ்மி பிறின்டர்ஸ் - கொழும்பு) காலஞ்சென்ற காந்திமதி மற்றும் கணேசமூர்த்தி காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி மற்றும் பாலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2019) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கோண்டாவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோண்டாவில் இந்துப்பாடசாலை அருகில்

தகவல் : பிள்ளைகள், மருமக்கள்.

விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் இரு உந்துருளிகள் விபத்துக்குள்ளாகின. அதில் இருவர் படுகாயமடைந்து முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். செம்மலையைச் சேர்ந்த கா.பாஸ்கரன் (வயது-50), ஞா.ஜனார்த்தன் (வயது-23) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த ஞா.ஜனார்த்தனன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-ரி3)

தீ விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தசுனி நவோத்தியா (வயது-16) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

வீட்டில் யாரும் இல்லாத நிலையில் சிறுமி சமையல் செய்ய முயன்றபோது இந்தத் தீப்பரவல் சம்பவம் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. பலத்த எரிகாயமடைந்த சிறுமியை அயலவர்கள் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்த்தனர்.

அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-110)

புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரகசியத் தகவலை அடுத்தே படைத் தரப்பு இந்த அகழ்வை மேற்கொண்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கில், செம்பியன்பற்றுத் தெற்குக் கிராம அலுவலர் பிரிவில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இந்த அகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

ஜே.சி.பி. வாகன உதவியுடன், வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், கனியவளங்கள் மற்றும் புவிச் சரிதவியல் திணைக்கள வெளிக்கள அலுவலர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், வனவளத் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் முன்னிலையில் பொலிஸாரும், சிறப்பு அதிரடிப் படையினரும் அகழ்வுகளை முன்னெடுத்தனர். பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றஞ்சன பண்டார இந்த அகழ்வுப் பணிக்குத் தலைமை வகித்தார்.

சுமார் இரு மணி நேரம் அகழ்வு மேற்கொண்டபோதும் ஆயுதங்களோ, வெடிபொருள்களோ கைப்பற்றப்படவில்லை. அதையடுத்து அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. (எ-160)

மின்தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்தில் திருத்த வேலைகள் செய்து கொண்டிருந்த சமயம் மின்தாக்கி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் உடல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், மானிப்பாய் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

போர்க்குற்றம்...

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரின்போது போர்க்குற்றங்கள் இடம் பெறவில்லை என்று மகிந்த ராஜபக்ச கொழும்பு நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் தெரிவித்திருந்தார். ரணில் விக்கிரமசிங்க வடக்குக்குச் சென்று போர்க்குற்றம் இடம்பெற்றிருக்கின்றது என்று ஒப்புக்கொண்டு நாட்டை பன்னாட்டுச் சமூகத்துக்கு காட்டிக் கொடுத்து விட்டார் என்றும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

மகிந்த ராஜபக்ச இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளமை தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

போர்க் காலகட்டத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் போர்க்குற்றம் இடம்பெறவில்லை என்று மகிந்த ராஜபக்ச வெட்கம் இல்லாமல் கூறுகின்றார். போர்க்குற்றங்களையும், கொலைகளையும் அவர் அரங்கேற்றியதால்தான்-கடந்த அரச தலைவர் தேர்தலில் அவரைத் தமிழ் மக்கள் ஓரங்கட்டினார்கள்.

போர்க் காலகட்டத்தில் ஒரு புறம் விடுதலைப்புலிகளும் மறுபுறம் அரச படைகளும் போர்க்குற்றங்களை இழைத்தார்கள். இதை நாம் மறுக்க முடியாது. பழையதைக் கிளறிக் கொண்டிருக்காமல் நடந்த உண்மைகளை ஏற்றுக் கொண்டு, மறப்போம் மன்னிப்போம். அப்போது தான் நாட்டில் நல்லிணக்கத்தை நிலைநாட்டலாம். பழையதைக் கிளறுவதில் பயன் இல்லை. நாம் அனைவரும் புதிய வழியில் ஓரணியில் பயணிக்க வேண்டும். இதைத் தான் வடக்கில் நான் வலியுறுத்தி இருந்தேன்.

ஆனால், நான் வடக்கில் வைத்து நாட்டை பன்னாட்டுச் சமூகத்திடம் காட்டிக்கொடுத்து விட்டேன் என்று மகிந்த ராஜபக்ச தெற்கில் பொய்ப் பரப்புரை முன்னெடுக்கின்றார். பல கொலைகளுக்கும் போர்க்குற்றங்களுக்கும் உத்தரவிட்ட அவர், இப்படிப் பொய்யுரைப்பது வெட்கக்கேடு.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் நாட்டின் மீது பன்னாட்டு அழுத்தங்கள் என்றுமில்லாத வகையில் அதிகரித்திருந்தன. ஆனால், 2015ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் அந்த அழுத்தங்களை குறைக்கச் செய்தோம். கடும் வலுவுடைய ஜெனிவாத் தீர்மானங்களை மென்மையாக்கினோம். மூவின மக்களையும் அரவணைத்து ஆட்சியை நடத்தினோம்.

ஆனால், கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி பதவி ஆசை பிடித்த கூட்டணியால் எமது ஆட்சி 52 நாள்கள் கவிழ்க்கப்பட்டிருந்தன. அந்த நாள்களில் இந்தக் கூட்டணியினர் நாட்டின் அதியுயர் சபையான நாடாளுமன்றத்தையே அசிங்கமாக்கினார்கள். இதனால் நாட்டின் மீதான பன்னாட்டு அழுத்தங்கள் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கின. அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்று நான் சொல்லத் தேவையில்லை.

நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும் உள்நாட்டு அரசியலில் எம் மீதான பழிவாங்கல் நடவடிக்கைகள் தொடர்கின்றன. ஆனால், பன்னாட்டு மட்டத்தில் இலங்கையின் நற்பெயரைக் காப்பாற்றும் நடவடிக்கையில் ஜக்கிய தேசிய முன்னணி அரசு ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், நாட்டைக் கொடுக்கும் நோக்கம் எனக்கில்லை - என்றார். (ஒ.5,22)

சோக்கேஸ் விற்பனைக்குண்டு

ரெஸ்ரோரன்ஸ் (உணவகம்) களுக்கு ஏற்ற சோக்கேஸ் என்பன (மலிவு விலையில்) விற்பனைக்குண்டு.

உடன் தொடர்பு கொள்ள
072 699 4681, 077 862 9674

வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்ய எலக்ரோனிக் கடைக்கு வேலையாள்கள் தேவை. (CS/23443) (11,17)

077 160 7757, 077 691 3299

பெயர் மாற்றம்

232,300 வீட்டுத்திட்டத்தில் வதியும் ரசிகா ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து ராதிகா எனப் பெயர்மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

ராதிகா

(CS 00555/14.17)

தீருவிலில் இரண்டாவது தூபி: வல். நகர சபையில் களேபரம்

தமிழ் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. ஆதரவு ஏனைய தரப்புக்கள் எதிர்ப்பு

வல்வெட்டித்துறை, பெப்.19

தீருவிலில் தூபி அமைப்பது தொடர்பான விவகாரத்தில் வல்வெட்டித்துறை நகர சபை அமர்வில் நேற்றுப் பெரும் களேபரம் ஏற்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் தீருவிலில் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வீரர்களுக்கு நினைவுத் தூபி அமைப்பதற்காக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள நலன்விரும்பிகள், நன்கொடையாளர்களிடம் இருந்து நிதியைப் பெறுவதற்கு வசதியாக வல்வெட்டித்துறை நகர சபை தனியான வங்கிக் கணக்கொன்றை "கடற்புறா தூபி" என்ற தலைப்புடன் ஆரம்பிக்க வேண்டும். அதைப் போன்று படைகளுடன் நடைபெற்ற மோதலில் கொல்லப்பட்ட, இனவெறியர்களால் கொல்லப்பட்ட மற்றும் வீரச் சாவடைந்த 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்கள் நினைவாகவும், படைகளாலும், இனவெறியர்களாலும் கொல்லப்பட்ட ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் மற்றும் போராளிகள் நினைவாகத் தூபி அமைக்க "தமிழ்த்தேசிய வீரர்கள் தூபி" என்ற தலைப்பில் தனியான கணக்கு ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றும், கிடைக்கும் நிதிக்கு அமைய கட்டம் கட்டமாக தூபி அமைக்கும் வேலைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கோரும் தீர்மான வரைவுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர் பொ.சிவஞானசுந்தரத்தால் முன்மொழியப்பட்டது. அதையடுத்து அங்கு பெரும் களேபரம் ஆரம்பித்தது.

கடும் எதிர்ப்பு

இந்தத் தீர்மானத்துக்கு சுயேட்சை உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். குமரப்பா, புலேந்திரன் மற்றும் 12 வீரர்களுக்கான தூபியையே முதலில் கட்டுவது என்றும், அதன்பின்னரே மற்றைய தூபியைக் கட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் இரு தூபிகளுக்கும் தற்போது வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்படுவது ஏற்புடையது அல்ல என்றும் அவர்கள் தெரிவித்தனர். தீருவிலில் இரண்டாவது தூபி அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு வெளியிடுகின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். போரில் உயிர்நீத்த அனைத்துப் போராளிகள், பொதுமக்களை நினைவு கூர்ந்து தீருவில் தவிர்ந்த வேறு ஏற்புடைய இடத்தில் நினைவுத் தூபியை அமைப்பதற்கான முதற்கட்ட மாதிரி வரைபடத்தை தயாரித்து சபையில் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கும்பொறுப்பைநிபுணர் ஒருவரிடம் கொடுக்க வேண்டும் என்ற தீர்மான வரைபை சுயேச்சை உறுப்பினர் ச.செல்வேந்திராகொண்டு வந்தார்.

அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புஉறுப்பினர்கள்எதிர்ப்புத்தெரிவித்தனர். பொதுத் தூபிகள் கட்டப்படுகின்றமை தொடர்பாக ஏற்கனவே 2 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் நிலையில் இந்தத் தீர்மானத்துக்குத் தாம் ஆதரவளிக்க முடியாது என்று அவர்கள் தெரிவித்தனர்.

எழுதி வைத்தா சென்றார்கள்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர், குமரப்பா, புலேந்திரன் தவிர வேறு எவருக்கும் தூபி கட்டக் கூடாது என்று அதை அமைத்தவர்கள் எழுதி விட்டா சென்றார்கள்? என்று கேள்வியும் எழுப்பினார். ஏன் தீருவிலில் வேறு தூபிகள் கட்டக் கூடாது? என்று மற்றொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

இந்தத் தீர்மான வரைவு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. சுயேச்சை உறுப்பினர்கள் 3 பேரும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவரும் ஆதரவாக வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 6 பேரும், ஈ.பி.டி.பி. உறுப்பினர் இருவரும் எதிர்த்து வாக்களித்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் இருவரும் நடு நிலைமை வகித்தனர்.

அதன்பின்னர் குழப்ப நிலைமை ஏற்பட்டது. அதையடுத்து 15 நிமிடங்கள் சபை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் சபை அமர்வு ஆரம்பமானது. இரு தூபிகளுக்கும் வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்படுவது சட்டவிரோதமானது அல்ல என்று சபைத் தவிசாளர் கூறினார். ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே வங்கிக் கணக்கு ஆரம்பிக்கும் தீர்மான வரைவு கொண்டுவரப்படுகின்றது என்றும், இந்தத் தீர்மான வரைபை வாக்களிப்புக்கு விட்டு முடிவெடுக்கலாம் என்றும் கூறினார்.

களேபரத்துக்கு நடுவே வாக்கெடுப்பு

அதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. சுயேச்சை உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் இருக்கைகளை விட்டு எழுந்து முன்னே வந்தனர். இரண்டாவது தூபி அமைக்கும் நடவடிக்கைகளை ஒருபோதும் ஏற்கமாட்டோம் என்று கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தனர். வாக்களிப்புப் பதிவு செய்வதற்கு வைத்திருந்த பெயர்ப் பலகையையும், தீர்மான வரைவு எழுதப்பட்டிருந்த பெயர்ப் பலகையையும் எடுத்துக் கொண்டு வெளியே சென்றனர். நிகழ்சி நிரல் பிற்பகல் 4 மணியுடன் முடிகின்றது என்று அறிவித்துவிட்டு, பிற்பகல் 4.30 மணிக்குப் பின்னரும் சபை நடத்தப்படுகின்றது என்றும் அவர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

தீர்மான வரைவுக்குக் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டபோதும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. சபையில் இருந்த தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 6 பேரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 2 பேரும் தீர்மான வரைவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

கடும் எதிர்ப்புத் தெரிவித்த சுயேச்சை உறுப்பினர்களும், தமிழர் விடுதலை முன்னணி உறுப்பினர்களும் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். தீருவிலில் இரண்டாவது தூபி அமைப்பதை அனுமதிக்க மாட்டோம் என்றும் தெரிவித்தனர். வாக்களிப்பு முடிந்தவுடன் அமர்வு முடிவுறுத்தப்பட்டது.

(ஏ-26)

சிறுமிக்கு பாலியல்...

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்கும் மாணவி ஒருவரை அங்கு கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கடந்த வாரம் பாலியல் தொல்லைக்கு உள்ளாக்கினார் என்று மாணவியின் குடும்பத்தால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஆசிரியரைக் கைது செய்து நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர்.

பாதிக்கப்பட்ட மாணவியின் மருத்துவ பரிசோதனை இன்னமும் கிடைக்கவில்லை என்றும், விசாரணைகள் நிறைவடையவில்லை என்றும் பொலிஸார் மன்றில் குறிப்பிட்டனர். சந்தேநபருக்கு பிணை வழங்கக் கூடாது என்றும் கோரினர்.

அவற்றை ஆராய்ந்த நீதிமன்று சந்தேகநபரை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (ஏ-8)

தொடருந்துடன்...

பட்ட தொடருந்து சுமார் 200 மீற்றர் தூரம் பயணித்திருந்தபோது தண்டவாளத்தின் குறுக்கே சென்ற இளைஞன் தொடருந்துடன் மோதுண்டார். அதில் அந்த இளைஞன் படுகாயமடைந்தார். எம்.ஜெயரூபன் (வயது -21) என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அவருக்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் சிகிச்சையனின்றி அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை களை மேற்கொண்ட சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் திலீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ. இளங்கீரன் மூலம் இறப்பு விசாரணைகளை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டார். (ஏ-9,26)

தனியார்...

துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் சிக்கிய பேருந்தில் இருந்தவர்களைப் பிரதேச மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் மீட்டெடுத்துள்ளனர். காயமடைந்தவர்களில் 16 ஆண்களும், 3 பெண்களும் அடங்குகின்றனர். புத்தளம் இராணுவ முகாமில் இருந்து விடுமுறையில் சென்ற இராணுவத்தினர் 4 பேரும் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் காயமடைந்தவர்கள் மாரவில, சிலாபம் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்கள் அடையாளம் காணப்படாத நிலையில் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-110)

இலங்கை...

ளனர். இந்தியாவின் நாகை அருகே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட மீனவர்களும், அவர்களின் படகுகளும் காரைக்கால் துறைமுகத்துக் குக் கொண்டு செல்லப்பட்டன என்றும், கைது செய்யப்பட்டவர்கள் அந்த நாட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, இது தொடர்பாக இலங்கை கடற்படைத் தரப்புக்களிடம் தொடர்புகொண்டு கேட்டபோது ஒரு படகும் 5 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றே இதுவரை உத்தியோகபூர்வமாக அறியக் கிடைத்துள்ளது எனத் தெரிவித்தனர். (ஏ-105)

தேர்தல்கள்...

படுத்தும் செயற்பாடுகளில் தேர்தல்கள் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அரச தலைவரின் சட்டத்தரணி பிரேமநாத் டொலவத்த இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். தேர்தல்கள் ஆணைக்குழுவை அவர் பிரதிவாதியாகக் குறிப்பிட்டுள் ளார்.

மாகாணத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று தேர்தல்கள் திணைக்களத் துக்கு வலியுறுத்த வேண்டும் என்று கூறி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

25 அன்று...

என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கதவடைப்புக்கு அழைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வடக்கு -கிழக்கு மாகாணங்கள் தழுவிய ரீதியில் எதிர்வரும் 25ஆம் திகதியன்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளனர். அன்றையதினம் காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மதத்தலைவர்கள், அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகள், நிறுவனம் சார்ந்த பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், மாணவர்கள், மக்கள் என அனைவரையும் அந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டு கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப் பட்டுள்ள உறவுகளுக்கு நீதிகிடைக்க ஐக்கிய நாடுகள் சபையைக் கோரவேண்டும் என்று உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர். காணாமல் ஆக்கப்பட்படவர்களுடைய உறவினர்கள் தனியே நீதி கேட்க வில்லை, அனைத்து மக்களுடைய எதிர்பார்ப்பும், அவாவும் அதுவே என்பதை ஐக்கிய நாடுகள் சபைக்குத் தெரியப்படுத்துவதற்காக அன்று வடக்கு மாகாணம் முழுவதும் கதவடைப்பை மேற்கொண்டு, போராடும் மக்களுக்கு ஆதரவு நல்குமாறும் உறவுகள் கோரியுள்ளனர்.

பேரணி

நீதி கோரிய ஆர்ப்பாட்டப் பேரணியானது கிளிநொச்சி கந்தசாமி ஆலயத்தில் ஆரம்பித்து ஏ 9 வீதி ஊடாக நகர்ந்து டிப்போசந்தியை அடைந்து இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் வரை செல்லும் என்றும், அங்கு ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான பிரதிநிதிகளிடம் மனு ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது எனவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் தெரிவித்தனர். எமது உறவுகள், பிள்ளைகளுக்கு நீதிகோரி இடம்பெறும் இந்தப் போராட்டத்துக்கு முழுமையான உணர்வுபூர்வமான பங்களிப்பினை வழங்குமாறு கிளிநொச்சி மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் கோரியுள்ளது. (ஏ-21,214)

சிகரெட்...

சபையின் மாதாந்த அமர்வு நேற்றுத் தவிசாளர் து.நடராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது. அதன்போது சிகரெட் விற்பனை யைத் தடை செய்வது தொடர்பான தீர்மான முன்மொழிவை உறுப்பினர் கா.பார்த்தீபன் முன்வைத்தார்.

இந்த விடயம் தொடர்பாகப் பிரதேச சபைக்கு அதிகாரங்கள் இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து அடுத்து அமர்வில் இது தொடர்பாகத் தீர்மானம் எடுப்பது என்று சபை உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர். இந்த விட யம் தொடர்பாக ஆராய்ந்து, சபைக்கு உட்பட்ட வர்த்தக சங்கத்துடன் கலந்துரையாடித் தீர்மானம் எடுப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

பொலித்தீன் பைக்குத் தடை

தெற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொலித்தீன் பைப் பாவனையைத் தடை செய்வது தொடர்பாகவும் நேற்று நடந்த அமர்வில் கலந்துரையாடப்பட்டது. சபையின் தவிசாளர் து.நடராஜசிங்கம் இந்த விடயத்தை முன்வைத்திருந்தார்.

பொலித்தீன் பை கெடுதல் என்பதுடன், அதைக் கொள்வனவு செய்வதால் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே பயன்பெறுகின்றனர். அதற்கு மாற்றீடாக கடதாசிப் பைகளைப் பயன்படுத்துவதன் மூலம் எமது பகுதிகளில் உள்ளவர்களுக்கு வாழ்வாதாரத்துக்கு உதவ முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. வர்த்தகர்களுக்கு 3 மாத காலம் அவகாசம் வழங்கப்படுகின்றது என்றும், இது தொடர்பாக ஒவ்வொரு வட்டார உறுப்பினர்கள் ஊடாகக் கிராமங்களில் உள்ள வர்த்தகளுக்குத் தெரியப்படுத்துவது என்பது தொடர்பாகவும் சபை அமர்வில் பேசப்பட்டது.

(ஏ-110)

கூட்டமைப்பினர்...

இவ்வாறு கூறியுள்ளார் பொது மக்கள் முன்னணியின் (பொதுஜன பெரமுன) தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

11 இராணுவத்தினருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய அரசு முயற்சிக்கின்றது. கூட்டமைப்பு மற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் விருப்பத்துக்கு அமையவே அரசு இந்த முயற்சியை எடுக்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த நாட்டின் தேவைக்கு ஏற்ப அது முன்வைக்கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கம். போரின் பின்னர் ஏற்படக்கூடிய நல்லிணக்கத்தைத்தமிழ்க் கூட்டமைப்பு மற்றும்புலம்பெயர் அமைப்புக்களின் தேவைக்கு ஏற்ப முன்னெடுப்பதை நாம் ஏற்க மாட்டோம். இலங்கை மக்களை ஒன்றிணைத்தே அதை முன்னெடுக்க வேண்டும்என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஏ)

மன்னார் நகர பிரதேச செயலகம் கரம் தொடரில் சம்பியனானது!

யாழ்ப்பாணம், பெப். 19
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரம் தொடரில் ஆண்கள் பிரிவில் மன்னார் நகர பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.
மன்னார் உள்ளகரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் நகர பிரதேச செயலக அணியை எதிர்த்து மடு பிரதேச செயலக அணி மோதியது. மூன்று ஒற்றையர் செற்களையும், இரண்டு இரட்டையர் செற்களையும் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. 3:0 என்ற நேர்செற் கணக்கில் மன்னார் நகர பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது. (ம-23)

தெல்லிப்பழை சம்பியனானது

யாழ்ப்பாணம், பெப். 19
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமான ஆண்களுக்கான ஹொக்கித் தொடரில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதியது. 3:0 என்ற நேர்செற் கணக்கில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது. (ம-23)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் மேசைப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 19
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளகரங்கில் நேற்று முன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது.
ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி மோதியது.
முதலாவது செற் ஆட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்து வப்படுத்தி மேசாக்கும், நல்லூர் பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்து வப்படுத்தி தனுஸ்மி மோதினர். தனுஸ் 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.
இரண்டாவது செற் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்து வப்படுத்தி சியாம்ராஜ்ம், நல்லூர் பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி லோவிதனும் மோதினர்.
சியாம்ராஜ் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார்.
மூன்றாவது செற் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்து வப்படுத்தி சஜீவனும், நல்லூர் பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி இசைப்பிரியனும் மோதினர். 3:0 என்ற செற் கணக்கில் சஜீவன் வெற்றிபெற்றார்.
நான்கவது செற் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்து வப்படுத்தி மேசாக்கும், நல்லூர் பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்து வப்படுத்தி லோவிதனும் மோதினர். 3:0 என்ற செற் கணக்கில் மேசாக் வெற்றி பெற்றார். 3:1 என்ற செற் கணக்கில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது. (ம-23)

பூநகரி பிரதேச எல்லே தொடரில் நண்பர்கள் அணி சம்பியனானது!

யாழ்ப்பாணம், பெப். 19
பூநகரி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடரில் பெண்கள் பிரிவில் நண்பர்கள் அணி கிண்ணம் வென்றது.
இரணைமாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி 30 பந்துகளில் 3 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அன்ரனிஸ் அணி ஓர் ஓட்டத்தை மட்டும் பெற்றுத் தோல்வியடைந்தது. (ம-23)

எல்லேயில் சாதித்தது விநாயகர் அணி

யாழ்ப்பாணம், பெப். 19
பூநகரி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்கள் பிரிவு எல்லே தொடரில் விநாயகர் அணி கிண்ணம் வென்றது.
இரணைமாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செஸ்ரியார்புரம் செஸ்ரியர் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய விநாயகர் விளையாட்டுக் கழக அணி 30 பந்துகளில் 6 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய செஸ்ரியர் அணி ஓர் ஓட்டத்தை மட்டும் பெற்றுத் தோல்வியடைந்தது. (ம-108)

இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 19

விக்ரம், ராஜன், கங்கு துடுப்பாட்டத் தொடர்

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் வருடாவருடம் நடத்தும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

அளவெட்டி மத்தியின் கரப்பந்துத் தொடர்

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்டரீதியாக நடத்தும் திருக்குமரன், லஜிதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி யுத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாயன்மார் கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம் பெப் 19
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப் பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப் பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந் துறைசென். மேரிஸ்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

வலைப்பந்தாட்டம்

அரியாலையின் 100ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் வலைப்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இன்று காலை 8.30 மணிமுதல் இடம் பெறவுள்ளன. காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வின்ஸ்ரார் அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி ஏ அணியும், தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழக பி அணியும், தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சரஸ்வதி அணியும் மோதவுள்ளன. (ம-23)

நாட்டுக்கு எதையாவது செய்ய முயலுங்கள்

சானியா மிர்சா காட்டம்

பிரபலங்கள் என்றாலே சமூக வலைதளங்களில் தீவிரவாதத்தைக் கண்டிக்க வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை என்று நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தெரிவித்தார்.

காஷ்மீரில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலுக்கு இந்திய முன்னணி ரென்னஸ் வீராங்கனை சானியா மிர்சா எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை என்று சமூக வலைத்தளங்களில் சர்ச்சைகள் கிளம்பியிருந்தன. ஏனெனில் அவர் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொய்ப் மலிக்கை திருமணம் முடித்திருந்ததால் அவரின் கருத்து எதிர்பார்க்கப்பட்டது.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்;

"பிரபலங்கள் என்றாலே கருத்துக் கூற வேண்டும், தீவிரவாதத் தாக்குதலைப் பொதுவெளியில் கண்டிக்க வேண்டும் என்று அவசியமில்லை.பதிவுகள் மூலமாகத்தான் தேசப்பற்றையும் நாட்டின் மீதான அக்கறையையும் காண்பிக்க வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. விரக்தியில் இருக்கும் தனிப்பட்ட நபர்கள் சிலர் தங்களின் கோபத்தையும் வெறுப்பையும் காண்பிக்க இடமில்லாமல் எங்களின் மீது கொட்டுகிறார்கள். தீவிரவாதத் தாக்குதலை நான் வெளிப்படையாக எதிர்க்க வேண்டும் என்று எனக்கு அவசியமில்லை. நாங்கள் தீவிரவாதத்துக்கு எதிரானவர்கள் என்று மேலிருந்து கத்த வேண்டிய தேவையும் இல்லை.

நான் தீவிரவாதத்துக்கும் அதைப் பரப்புவர்களுக்கும் எதிரானவள்தான். நல்ல புத்தியோடு இருக்கும் அனைவரும் தீவிரவாதத்தை ஏற்கமாட்டார்கள். நான் என்னுடைய நாடான இந்தியாவுக்காக விளையாடுகிறேன். வியர்வை சிந்துகிறேன். அவ்வாறும் நாட்டுக்காகச் சேவையாற்றலாம்.

இராணுவ வீரர்களுக்காகவும், அவர்களின் குடும்பங்களுக்காகவும் பிரார்த்திக்கிறேன். இதுபோன்று சம்பவம் இன்னொரு முறை ஏற்பட்ட விடக் கூடாது.

நாங்கள் அமைதியைப் பரப்புகிறோம் ஆனால் நீங்கள் வெறுப்பை விதைக்கிறீர்கள். கோபம் என்பதை நல்ல விஷயங்களுக்குக் காட்டினால் நல்லது. மற்றவர்களைக் கிண்டல் செய்து நீங்கள் எதையும் அடையப் போவதில்லை. வெறுமனே உட்கார்ந்து தாக்குதல் பற்றிப் பிரபலங்கள் எத்தனை பதிவுகள் போட்டிருக்கிறார்கள் என்று எடைபோடுவதையும் விமர்சிப்பதையும் விடுத்து, நாட்டுக்கு எதையாவது செய்ய முயலுங்கள். உங்களால் முடிந்ததை நீங்கள் செய்யுங்கள். எங்களால் முடிந்ததை சமூக வலைதளங்களில் சொல்லாமலே நாங்கள் செய்கிறோம்" - என்றார் அவர்.

புல்வாமா தாக்குதல் எதிரொலி

உலகக்கிண்ணத்தில் பாகிஸ்தானுடன் விளையாடக்கூடாதாம் இந்திய அணி!

காஷ்மீர் மாநிலம் புல்வாமா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 45 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்ததை அடுத்து, உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுடன் இந்திய அணி விளையாடக் கூடாது என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு இந்தியக் கிரிக்கெட் கழகங்களின் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நேரடி இருதரப்புத் தொடர் கைவிடப்பட்டது. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, இந்திய அணி இனிவரும் காலங்களில் பாகிஸ்தான் அணியுடன் இருதரப்புத் தொடர்களில் விளையாடாது என்று அறிவித்தது. நீண்டகாலப் பேச்சுக்குப் பின்னர் கடந்த 2016ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் சபைகள் மீண்டும் பேச்சில் ஈடுபட்டன. அந்தக் காலப்பகுதியில் இந்தியாவின் ஊரி இராணுவ முகாம் மீது ஆயுதக்குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 21 சிப்பாய்கள் சாவடைந்தனர். இதையடுத்து பாகிஸ்தானுடனான இருதரப்பு கிரிக்கெட் உறவை மீண்டும் முறித்தது இந்தியா.

தற்போது புல்மாவாவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இந்தியக் கிரிக்கெட்டில் நாளுக்கு நாள் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது. இருதரப்புத் தொடரில் மட்டுமல்ல உலகக்கிண்ணம், ரி-20 உலகக்கிண்ணம், ஆசிய உலகக்கிண்ணம், மினி உலகக்கிண்ணம் உள்ளிட்ட பொதுவான தொடர்களிலும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடன் இந்திய அணி விளையாடக்கூடாது என்று இந்திய கிரிக்கெட் கழகங்களின் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது. (ம)

கோக்லியுடன் ஒப்பிடக்கூடிய திறமை என்னிடம் இல்லை!

பாபர் அசாம் ஒப்புதல்

இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லியுடன் ஒப்பிடக்கூடிய அளவு திறமை என்னிடம் இல்லை என்று தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர் பாபர் அசாம்.

பாகிஸ்தான் அணியின் மூன்றாம் நிலை வீரர் அசாம். இவர் அந்த அணிக்காகத் தொடந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தார். இதனால் அவரை இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லியுடன் ஒப்பிட்டிருந்தார் பாகிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர். இதையடுத்து சமூக வலைத்தளங்களில் அசாம், கோக்லி இருவருக்கும் இடையிலான ஒப்பீடு நாளுக்குநாள் வலுப்பெற்று வரும் நிலையில் தன்னையும் கோக்லியையும் ஒப்பிட வேண்டாம் என்றுள்ளார் அசாம்.

விராட் கோக்லி பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர். அவர் ஒருநாள் ஆட்டங்கள் மற்றும் டெஸ்டில் பல முக்கிய சாதனைகளை நிகழ்த்தி உள்ளார்.

ஆனால் நான் தற்போதுதான் என்னுடைய பயணத்தைத் தொடங்கி இருக்கிறேன். நான் சாதிக்க வேண்டியது நிறையவே உள்ளது.

இதனால் என்னை யாரும் விராட் கோக்லியுடன் ஒப்பிட்டுப் பேசவேண்டாம்என்றுஅசாம் மேலும் தெரிவித்தார். (ம)

போல்ட், முகமதுல்லாவுக்கு தண்டம் விதித்தது ஐ.சி.சி

நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் போல்ட், பங்களாதேஷ் சகலதுறை ஆட்டக்காரர் முகமதுல்லா ஆகியோர் விதிமுறைகளை மீறி களத்தில் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டுக்காக பன்னாட்டுக் கிரிக்கெட் சபையால் அபராதம் விதிக்கப்பட்டது.

பந்து வீசும் போது ஆபாசமான வார்த்தைகளை பேசினார் என்றும், முகமதுல்லா எல்லைக் கோட்டை, தனது துடுப்பு மட்டையால்அடித்துவிட்டுச்சென்றார்என்ற குற்றச்சாட்டுக்களுக்காகவும் அவர்கள் இருவருக்கும் போட்டி ஊதியத்திலிருந்து போல்ட்டுக்கு 15 சதவீதமும், மொகமதுல்லாவுக்கு 10 சதவீதமும் தண்டமாக அறவிடப்பட்டது.

பளுதூக்கலில் யாழ். மகுடம்!

யாழ்ப்பாணம், பெப். 19

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான பளுதூக்கல் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. பெண்கள் பிரிவில் 8 தங்கப்பதக்கங்கள், 5 வெள்ளிப்பதக்கங்கள், 4 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 17 பதக்கங்களைப் பெற்று யாழ்ப்பாண மாவட்ட அணி கிண்ணம் வென்றது.

2 தங்கப்பதக்கங்கள், ஒரு வெள்ளிப்பதக்கம், ஒரு வெண்கலப்பதக்கம் என்று நான்கு பதக்கங்களைப் பெற்று வவுனியா மாவட்ட அணி இரண்டாவது இடத்தைப் பெற்றது.

2 வெள்ளிப்பதக்கங்கள், 3 வெண்கலப்பதக்கங்கள் உட்பட 5 பதக்கங்களைப் பெற்று முல்லைத்தீவு மாவட்ட அணி மூன்றாவது இடத்தைப் பெற்றது. (ம-23)

ஐ. சி.சி. டெஸ்ட் தரவரிசையில் குசல் பெரேரா முன்னேற்றம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை டெஸ்ட் போட்டி வீரர்கள் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி 992 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறார்.

இரண்டாவது இடத்தில் நியூஸிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்ஸன் 897 புள்ளிகளுடனும், இந்திய வீரர் புஜாரா 881 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

இந்த நிலையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சதமடித்த இலங்கை வீரர் குசல் பெரேரா 40 ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

பந்துவீச்சாளர்கள் வரிசையில் ஆஸ்திரேலிய வீரர் கம்மின்ஸ் தென்னாபிரிக்கா வீரர் ரபாடாவை பின்னுக்குத் தள்ளி முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஆண்டர்சன் 2ஆவது இடத்திலும், தென்னாபிரிக்கா வீரர் ரபாடா 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

உலகக் கிண்ணத்துடன்

ஒருநாள் போட்டியிலிருந்து மேற்.இ வீரர் கெய்ல் ஓய்வு

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கிறிஸ்கெய்ல் டெஸ்ட் போட்டியில் இருந்து ஏற்கனவே ஓய்வு பெற்றிருந்தார். அவர் உலகக் கிண்ணப் போட்டியின் பின்னர் ஒருநாள் தொடரில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இவர் ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக விளையாடி வந்தார். ஐ.பி.எல். தொடரில் இவருக்கென்றுதனியானஒருரசிகர்கூட்டமேஇருக்கின்றது.

இவர் 284 ஒருநாள் போட்டியில் விளையாடி 9,727 ஓட்டங்களை எடுத்துள்ளார். சராசரி 37.12 ஆகும். 23 சதமும், 49 அரைச் சதமும் அடித்துள்ளார். அதிகபட்சமாக 215 ஓட்டங்கள் குவித்திருந்தார்.

லாராவின் சாதனையை முறியடிக்க கெய்லுக்கு 677 ஓட்டங்களே தேவை. இந்தச் சாதனையை அவர் உலகக் கிண்ணத்தில் முறியடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குசல் பெரேராவுக்கு மைத்திரி, ரணில் வாழ்த்து

இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் இலங்கை அணி ஓர் இலக்கால் அபார வெற்றி பெற்றிருந்தது. இந்த வெற்றிக்குக் காரணமாக குசல் பெரேரா காரணமாக விளங்கினார். அவர் அதிகபட்சமாக 153 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

குசல் பெரோவின் சிறப்பான, பொறுப்பான துடுப்பாட்டத்துக்கு பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் இருக்கின்றன.

இந்த நிலையில், குசல் பெரேராவுக்கு இலங்கையின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, அமைச்சர் சாகல ரத்னாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஆகியோரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

நியூசி. – பங்களாதேஷ் இறுதிப் போட்டி நாளை

பங்களாதேஷ் அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்கிடையிலான இறுதி ஒருநாள் போட்டி நாளை இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்று முடிவடைந்த இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் நியூசிலாந்து அணி பங்களாதேஷ் அணியை இலகுவாக வீழ்த்தி வெற்றி பெற்றதுடன் தொடரையும் கைப்பற்றியிருந்தது. பங்களாதேஷ் அணி இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று ஆறுதல் வெற்றியாவது பெற்று விட வேண்டும் என்ற முனைப்புடன் களமிறங்குவர்.

இங்கிலாந்து – மே.இ தீவுகள் ஒருநாள்போட்டி நாளை ஆரம்பம்

இங்கிலாந்து அணி மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. நடைபெற்று முடிந்த டெஸ்ட் போட்டிகளில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியிருந்தது. இரு அணிகளுக்குமிடையில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இடம் பெறவுள்ளது. முதலாவது ஒருநாள் போட்டி நாளை பிறிஸ்டலுனில் இடம்பெறவுள்ளது. இங்கிலாந்து அணி டெஸ்ட் போட்டித் தொடரை இழந்ததனால் ஒருநாள் போட்டியில் போராடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்கிந்தியத்தீவுகள் அணி சொந்த மண்ணில் மண்டியிடக்கூடாது என்பதில் தீவிரமாகவுள்ளது.

வேலையாள் தேவை
வடமராட்சியிலுள்ள புகைப்பட நிலையத்துக்கு அனுபவம் வாய்ந்த ஆள் தேவை.
077 728 3706 (CS/21448) (11/17)

பணியாளர் தேவை
யாழ். நகரில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு **கணக்கு/கணினி/பொதி/சிட்டை எழுதுனர்** பணிகளுக்கு 18 - 30 வயதுவரையான பெண் பணியாளர்கள் தேவை.
திலகவதி லொத்தர் ஏஜென்ஸ்
இல. 108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
077 122 8841, 021 221 5777

ரியல் மீற்ஸ் - அல்வ்ஸ் போட்டி சமநிலையில்

ஸ்பானியாக் கழகங்களுக்கிடையில் இடம் பெற்று வரும் லலிகா தொடரில் நேற்று இடம் பெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ரியல் பீற்ஸ் - அல்வ்ஸ் அணிகள் மோதின. முதலாவது பாதி ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் ரியல் பீற்ஸ் அணி வீரர் லோ செலோசோ ஒரு கோலைப் போட்டார். பதிலுக்கு 28ஆவது நிமிடத்தில் அல்வ்ஸ் அணி வீரர் மரிப்பன் ஒரு கோலைப் போட இரு அணிகளும் 1:1 என்று சமநிலையானது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் முட்டிமோதி கோல் போடுவதற்கு எத்தணித்த போதும் இரு அணி வீரர்களாலும் இயலாமல் போக போட்டி 1:1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இரு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்பட்டன.

ராமோஸ் 600

ரியல் மட்ரிட் அணிக்காக 600 போட்டிகளில் விளையாடிய பெருமையை அந்த அணியின் தலைவர் செர்ஜியோ ராமோஸ் பெற்றார். அவர் ரியல் மட்ரிட் அணிக்காக 84 கோல்கள் அடித்துள்ளதுடன், 20 தடவைகள் கிண்ணத்தையும் சுவீகரித்து கொடுத்துள்ளார். இதில் 4 தடவைகள் பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்திய உலகக் கிண்ணத்தை சுவீகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 25 தடவைகள் சிவப்பு அட்டைகள் காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டிருந்தார். 200 தடவைகள் மஞ்சள் அட்டை காட்டப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரியல் மட்ரிட்டை வீழ்த்தி கிரோனா அபார வெற்றி

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லீக் ஆட்டமொன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் முன்னணி அணியான ரியல் மட்ரிட் அணியை கிரோனா அணி 2:1 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது.

முதல் பாதி ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் மட்ரிட் அணியின் கேஸ்மிரோ ஒரு கோலைப் போட்டார். முதல் பாதி ஆட்டத்தில் ரியல்மட்ரிட் அணி 1:0என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் கிரோனா அணி வீரர்கள் ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். ஆட்டத்தின் 65 ஆவது நிமிடத்தில் கிரோனா அணிக்கு ஒரு பெனால்ட் வாய்ப்புக் கிடைத்தது. அதனை அந்த அணியின் வீரர் ஸ்டுயானி சரியாகப் பயன்படுத்தி கோல் அடித்தார். இதனால் 1:1 என்ற கணக்கில் இரு அணிகளும் சமநிலையானது. அடுத்த 10ஆவது நிமித்தில் 75ஆவது நிமிடத்தில் கிரோனா அணியின் வீரர் போர்ட்டு ஒரு கோலைப் போட கிரோனா அணி 2:1 என்ற கணக்கில் ரியல் மட்ரிட் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

இந்தத் தோல்வியால் ரியல் மட்ரிட் அணிக்கு தரவரிசையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ரியல் மட்ரிட் 9 புள்ளிகள் பின் தங்கிய நிலையில் உள்ளன.

புல்மாவா தாக்குதல் எதிரொலி

பாகிஸ்தான் வீரர்களின் ஒளிப்படங்கள் நீக்கம்

பாக். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கவலை

இந்தியாவில் தற்கொலைத் தாக்குதலில் இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டதன் எதிரொலியாக இந்தியாவில் கழகங்களில் வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தானின் கிரிக்கெட் வீரர்களின் ஒளிப்படங் கள் நீக்கப்பட்டுள்ளன. இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கவலை வெளியிட்டுள்ளதோடு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் பேசவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவில் ஒரு மைதானத்தில் விளையாடும்போது எந்தநாட்டு வீரர்கள் சாதனை புரிந்தாலும் அவர்களது ஒளிப்படங்கள் அங்கு வைக்கப்படும். அந்த வகையில் மும்பையில் உள்ள கிரிக்கெட் கழகத்தில் இந்தியா அலுவலகத்தில் இம்ரான் கான் ஒளிப்படம் வைக்கப்பட்டிருந்தது. அந்தப்படம் தற்போது நீக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பஞ்சாப் மாநிலத்தில் உள்ள மொகாலி மைதானத்தில் உள்ள பாகிஸ்தான் வீரர்களின் ஒளிப்படங்களும் நீக்கப்பட்டுள்ளன. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வருத்தம் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட்டையும், அரசியலையும் ஒப்பிடாதீர்கள் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. அடுத்த மாதம் டுபாயில் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது. அதன்போது இந்தியாவிடம் இந்தச் சம்பவம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.